பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 280 ஆவணி 19 ஆம் நாள் வியாழக்கிழமை 05 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## பலாலி முன்னரங்கில் துப்பாக்கிச் சூடு

*சிப்பாய் படுகாயம்*

யாழ்ப்பாணம், செப். 5
பலாலி இராணுவ முன்னரங்க முகாமில் காவல் கடமையிலிருந்து இராணுவச் சிப்பாய் துப் 07

### புதிய அரசு

# போர்க்குற்ற விசாரணை நடத்துவது அவசியம்

இந்திய அமைதிப்படையின் தளபதியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா கூறுகிறார்

கொழும்பு, செப்ரெம்பர் 5

**போ**ரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து, இலங்கையின் புதிய அரசு விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் - அது நல்லிணக்க முயற்சிகளின் நம்பகத்தன்மைக்கு அவசியமானது என்றும் மேஜர் ஜெனரல் அசோக் கே.மேத்தா தெரிவித்துள்ளார். 23



## கண் மருத்துவமனைக்கு அடிக்கல் நட்டார் எஸ்.பி.

வவுனியா, செப். 5
தமிழ் உட்பட அனைத்து மொழிகளிலுமாகக் கடந்த 53 வருடங்களில் ஏறத்தாழ 40ஆயிரம் பாடல்களைப் பாடியுள்ளேன் என்று தென்னிந்திய பிரபல பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் தெரிவித் 23

## காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்துக்கு ரூ. 6 ஆயிரம்

*அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, செப். 5
காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சான்றிதழை பெற்றுக் கொண்டவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா இடைக்கால உதவியை வழங்குவதற்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 08

## சஜித் மீது குற்றம் சுமத்துபவர்கள் முடிந்தால் ஆதாரத்தை முன்வையுங்கள்

*சுஜீவ சவால்*

கொழும்பு, செப். 5
சஜித் பிரேமதாசவின் அமைச்சின் மூலம் ஒரு பில்லியன் நிதி மோசடி இடம்பெற்றதாகப் பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஆனால், அ வர் அநாவசியமாக ஒரு ரூபாவைக்கூட செலவழிக்கவில்லை என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். குற்றம்சுமத்தும் நபர்களுக்கு நான் சவால் விடுகின்றேன், அவ்வாறு நிதி மோசடி இடம்பெற்றிருந்தால் 23



## கிளிநொச்சி விபத்தில் லண்டன்வாசி சாவு

*அவர் மகிந்தவின் செயற்பாட்டாளராம்*

கிளிநொச்சி, செப். 5
முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முறிகண்டிப் பகுதியில் நேற்று மாலை 4.40 மணிக்கு 03

## நியமனம் வழங்குமாறு பட்டதாரிகள் போராட்டம்



யாழ்ப்பாணம், செப். 5
நியமனம் வழங்குமாறு கோரி வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் வடக்கு மாகாண சபை முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கைதடியிலுள்ள மாகாண சபை வளாகத்திலிருக்கும் முதல 04

## பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து இனவாதத்தைப் பரப்பியது ஐ.தே.கவே

*நாடாளுமன்றத்தில் சஜித், வாசுதேவ மோதல்*

கொழும்பு, செப். 5
'யார் இனவாதிகள், யார் இன, மதக் கலவரங்களை கையில் எடுத்தது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயகாரவுக்கும், அமைச்சர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் 08

## வவுனியாவில் யானை தாக்கி பெண் சாவு

வவுனியா, செப். 5
வவுனியா, செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உலுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு, காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.
யானையின் சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே 03

*வெடுக்குநாரி ஆலயத்தில்*

## பொலிஸாரின் இடையூறுகளையும் தாண்டி இடம்பெற்றது பொங்கல்

வவுனியா, செப். 5
நெடுங்கேணியில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா 23



## வடக்கு வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பில் என்னிடம் முறையிடுங்கள்

*சபையில் கூறினார் ரணில்*

கொழும்பு, செப். 5
வடக்கில் வீடமைப்பு அதிகார சபையின் கீழ் முன்னெடுக்கப்படும் வீட்டுத்திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பாக எனக்கு அறிவித்தால் உரியவர் 23

## எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் அறிவிப்பு: தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு தவறானது

*சுட்டிக்காட்டுகிறார் உறுப்பினர் பேராசிரியர் ஹூல்*

கொழும்பு, செப். 5
எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.
உயர் நீதிமன்றத்தின் உத்தரவை அடுத்து, எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர் 03

# செப்ரெம்பர் மாத ராசிபலன் 2019




## மேடம்

செப்ரெம்பர் மாதத்தில் சூரியன் சிம்ம மாதத்திலும் கன்னி மாதத்திலும் சஞ்சரிக்கிறார். மாத முற்பகுதியில் சிம்ம ராசியில் சூரியன், சுக்கிரன், செவ்வாய், புதன், மிதுனத்தில் ராகு, விருச்சிகத்தில் குரு, தனுசு ராசியில் சனி கேது என கிரகங்கள் சஞ்சாரம் உள்ளது. மாத பிற்பகுதியில் கன்னியில் கிரகங்கள் கூட்டணி அமைக்கின்றன. இந்த மாதம் சனி வக்ர நிவர்த்தி அடைகிறார். அஷ்டமத்து குரு, வக்ர நிவர்த்தி அடைந்த சனியால் மேடம் ராசிக்கு செப்ரெம்பரில் நன்மையும் தீமையும் கலந்த பலன்கள் ஏற்படும்.

மேஷம் ராசிக்கு ஐந்தாம் வீடான சிம்ம ராசியில் சூரியன் சுக்கிரன் புதன், செவ்வாய் பலமாக கூட்டணி அமைத்திருக்கின்றனர். மாத முற்பகுதியில் சுப பலன்கள் அதிகம். சூரியன் 5இல் இருப்பதால் அரசு துறை சார்ந்தவர்கள். கல்வி சார்ந்த தொழில் உடையவர்கள். கலைத்துறை சார்ந்தவர்களுக்கு அற்புதங்கள் நிகழும். கோள்கள் அற்புதமாக இருப்பது நன்மை தரும் விசயம். ஐந்தாம் வீட்டில் சூரியன் செவ்வாய் இணைவது ராஜயோகம். ஒன்று மற்றும் 5க்கு உடையவன் ஐந்தாம் வீட்டில் இணைவதால் மனதில் உள்ள ஆசைகள் நிறைவேறும். தொழில் நன்மைகள் நடக்கும். வேலையில் மாற்றம் நிகழ வாய்ப்பு உள்ளது. கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். ஆறில் சுக்கிரன் புதனோடு கூட்டணி சேருவதால் குடும்ப வாழ்க்கையில் சில பிரச்சினைகளை ஏற்படுத்துவார். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

கல்வி, மாத முற்பகுதியில் மகிழ்ச்சியை ஏற்படுத்திய கிரகங்கள் மாத பிற்பகுதியில் எதிர்ப்புகளையும், தடங்களையும் ஏற்படுத்தும். இழுபறி கால தாமதத்தை ஏற்படுத்தும்.


நிதானம் தேவை. ராசிக்கு ஆறாம் வீட்டில் கிரகங்கள் இணைய எதிர்ப்புகள் வலுக்கும். போட்டி பொறாமை, எதிர்ப்புகளை ஏற்படுத்தும்.



18ஆம் சனி வக்ர நிவர்த்தி அடைகிறார். சனி முன்னோக்கி நகர்கிறார். சனியும் கேதுவும் இணைவினால் சில குழப்பங்கள் வரும்.

சனி வக்ர நிவர்த்தி அஷ்டமத்தில் குரு கிரகங்கள் இருப்பதால் செப்ரெம்பரில் மேஷ ராசிக்காரர்கள் நிதானத்தைக் கடைபிடிப்பது அவசியம்.

# மூன்றாம் பிறையைப் பார்த்தால் செல்வம் சேருமா..?



அமாவாசையை அடுத்து வரும் மூன்றாம் நாளில் சந்திர தரிசனம் காண்பவர்களுக்கு ஞாபக சக்தி அதிகரிக்கும். மனக்குழப்பம் நீங்கும். கண் பார்வை தெளிவாகும். செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் வரும் மூன்றாம் பிறை மிகவும் விசேஷமான ஒன்றாகும்.

சிவன், பார்வதி, விநாயகப் பெருமான் போன்ற தெய்வங்கள் சூடும் இந்தப் பிறை தெய்வீக சின்னமாகும். காமம், வெகுளி, மயக்கம் இந்த மூன்று குணங்களையும் கடந்தவன் முக்தி அடையலாம் என்பதை நினைவுபடுத்துவதற்கே மூன்றாம் பிறையை காணவேண்டும் என முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

சுறுசுறுப்போடு அதேநேரம் சிறுகச்சிறுக வளர்ந்தால் முழுப்பலனை யும் அடையமுடியும் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றது மூன்றாம் பிறை.

குறிப்பாக சித்திரை, வைகாசி மாதங்களில் வரும் மூன்றாம் பிறையை பார்த்தால் ஓர் ஆண்டு சந்திர தரிசனம் செய்த பலன் கிடைக்கும்.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் வரும் மூன்றாம் பிறையைக் கண்டால் சகல பாவங்களும் தொலையும் எனவும் கூறியுள்ளார்கள். அதோடு நான்காம் பிறையைபார்க்கக்கூடாது எனவும் கூறியுள்ளார்கள்.

ஏனெனில், ஒரு முறை விநாயகப் பெருமான் சந்திர லோகத்துக்கு பயணம் செய்தார். கையில் கொழுக்கட்டையுடன் வந்திருந்த விநாயகரைக் கண்டு ஏளனம் செய்த சந்திரன் மீது விநாயகர் மிகுந்த கோபம் அடைந்தார். அன்று பிள்ளையார் சதுர்த்தி வேறு. கோபமுற்ற கணபதி, 'சதுர்த்தியில் உன்னைப் பார்ப்பவர்கள் வீண்பழிக்கு ஆளாவார்கள்!' என சந்திரனை சபித்தார். மனம் வருந்திய சந்திரன் , தான் அறியாது செய்த தவற்றை மன்னித்து சாப விமோசனம் தரும்படி கேட்டுக்கொண்டரன். அதனால் விநாயகர் சந்திரனை மன்னித்தார், ஆனால், மூன்றாம் பிறையைப் பார்ப்பவர்களுக்கு மட்டும் முழு மகிழ்ச்சி பொங்கும் என்றும் அருளினார்.



## இன்றைய நாள்

**மேடம்:** லட்சிய நோக்குடன் செயற்படுவீர்கள். தொழில்வியாபார நடைமுறை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் விதத்தில்உபரிவருமானம்கிடைக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** நிதானத்தைக்கடைப்பிடிப்பதும் நல்லது. எந்தவொரு காரியத்திலும் அதன் முழுப்பலனை அடைய முடியாமல் தடைகள் உண்டாகும். கொடுக்கல் வாங்கலிலும் வீண் விரயங்களைச் சந்திப்பீர்கள்.

**மிதுனம்:** சிலர் உங்களிடம் கருத்து வேறு பாடு கொள்வர். தொழில்வியாபார நடைமுறையில்தடைகள்குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு பணம் கரையும்.

**கடகம்:** பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். உற்பத்தி விற்பனை அதிகரித்து கூடுதல் லாபம் அடைவீர்கள். வழக்கு, விவகாரத்தில் அனுகூலத் தீர்வு வரும்.

**சிம்மம்:** பொதுநல நோக்குடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கலாம். வருமானம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

**கன்னி:** உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பெண்களுக்கு சகோதரவழியில் உதவி வரும்.

**துலாம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி சீராக நிறைவேறும். பணவரவு திருப்தியளிக்கும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவு ஏற்படும். பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** மனதில் தன்னம்பிக்கை பிரகாசிக்கும். தொழில் வியாபாரம் செழித்து புதிய சாதனை படைப்பீர்கள். கூடுதல் வருமானம் கிடைக்கும். வீடு, வாகனத்தில்நவீனமாற்றம்செய்வீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் இருந்த குழப்பம் மறையும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி மேற்கொள்வீர்கள். உறவினரால் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மகரம்:** திட்டமிட்ட செயல் நிறைவேற தாமதமாகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் ஆதாயம் சுமாராக இருக்கும்.

**கும்பம்:** குடும்ப சிரமம் பற்றி பிறரிடம் பேசவேண்டாம். தொழில், வியாபாரம் சீர் பெற கூடுதல் நேரம் பணிபுரிவது அவசியம். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.

**மீனம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். சேமிக்க வாய்ப்புண்டு. பிள்ளைகள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும்.

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம் யாழ்ப்பாணம்

**2018/ 2019 வரிமதிப்பாண்டுக்கான புதிய வருமானவரி விவரத்திரட்டுக்களைப் பூரணப்படுத்தல் தொடர்பான இலவச தெளிவூட்டல் கருத்தரங்கு**

2018/2019 வரிமதிப்பாண்டுக்கான புதிய வருமான வரி விவரத்திரட்டுக்களைப் பூரணப்படுத்தல் தொடர்பான இலவச தெளிவூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 07.09.2019 சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில். உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளால் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் வரிசெலுத்துநர்கள். கணக்காளர்கள். கணக்காய்வாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் பங்குபற்றி பயன்பெற முடியும். ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பங்குபெற விரும்புபவர்கள் முன்கூட்டியே தங்கள் பதிவினை மேற்கொள்வதற்குப் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**அலுவலகம் - 021 221 7333**
**அ.பிரணவபவா - 076 149 2810**
**க.பிரதீஸ்வரன் - 077 923 5685**

**ஆணையாளர்,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**இல.711, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 02 . 2000



மறைவு 28 . 08 . 2017

**அமரர் செல்வன் சின்னத்தம்பி நாகசுலோஜன்**



அன்னையின் கருவிலே கலைஞானம்
பருவத்திலே நீ பண்பாளன்
உருவத்தில் நீ மொழி அறிஞன்
நீ வருகையில் முகம் சிரிக்கும்
பெருமையில்லை உன் சிரிப்பில்
அரும்பும் சிந்தனைகள்
வரும்போது போய்விட்டாய்.
வருமோ விடியல்?
உருவம் காணா உறவுகள்
உருகும் நிலை பாராய்
கருவில் சுமந்த மனதை கல்லாக்கி
உன்னை நினைக்கும் போதெல்லாம்
விழியின் ஓரம்
உன் நினைவு துளிகள்
கணணீராய் கரைகின்றது.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சிவசெல்வநாதன் பவேந்திரன்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசெல்வநாதன் பவேந்திரன் 01.09.2019 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசெல்வநாதன் மகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்டபுத்திரரும் காலஞ்சென்ற நாகராஜா இந்திரா தேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் மாதவி (லதா) இன் ஆருயிர்க் கணவரும் பவித்திரா. கோகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹரிந்திரன் (இங்கிலாந்து). ஷாமளா (ஆஸ்திரேலியா). குசேலா (கனடா). காலஞ்சென்ற கலேந்திரன். ஜயந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சசி. சிவாஜி. சுரேஷ்குமார். ஜயரூபி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருந்ததி (ராதா). பார்த்திபன் ஆகியோரின் அன்பு அத்தானும் டிலன். அபிமன். அபிராமி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சௌமியா. அரவிந்த். அர்ஜுன் கௌதம். அபிஷேக். அருண் ஆகியோரின் அன்பு மாமனாரும் அனித்தா. பொனி. ரவீனா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**47, கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (CS 27783)(04.17)

**தகவல் :**
**சித்தி - தனலட்சுமி**

**மாதவி (லதா- மனைவி) : 0041 16474064040**
**குசேலா (சகோதரி) : 0041 16475492500**

## எல்பிட்டிய...

தல் ஒக்ரோபர் 11ஆம் திகதி நடத்தப்படும் என்று காலி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி நேற்றுமுன்தினம் அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டார்.

இதுகுறித்து அதிருப்தி வெளியிட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், தேர்தல்கள் ஆணைக் குழுவின் கூட்டம் நடத்தப்படாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் இதில் பக்கசார்பற்ற நகர்வாக தெரியவில்லை என்று கூறியிருக்கிறார்.

'உயர்நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர், தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டம் எதுவும் நடக்கவில்லை. ஆணைக்குழு அத்தகைய முடிவை எப்படி, எப்போது, எங்கே எடுத்தது? நீதிமன்ற தீர்ப்புக்கு முன்பிருந்தே நான் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் இருந்தேன். தேர்தல் ஆணைக்குழுவின் முறையான கூட்டத்துக்கு மூன்று உறுப்பினர்களின் கோரம் தேவை.

இந்த முடிவு ஆணைக்குழுவின் முடிவு அல்ல என்று ஆணைக்குழுவின் துணைத் தலைவருக்கும் காலி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கும் தெரியப்படுத்தியுள்ளேன்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்னர் அலைபேசி மூலம் அது எனக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அந்தச் சபைக்கான தேர்தலை உடனடியாக நடத்துவோம் என்று அலைபேசியில் கேட்டார்கள். நான் அதற்கு உடனடியாக நடத்த முடியாது என்று கூறினேன். அரச தலைவர் தேர்தல் நடத்த வேண்டி உள்ளதால் இதனை இப்போது நடத்தாமல், அரச தலைவர் தேர்தல் முடிந்த பின்னர் நடத்துவோம் என்று தெரிவித்தேன்.

அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரையாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பயன்படுத்தப்படக் கூடும். இந்தச் சபையைக் கைப்பற்றுகின்ற கட்சி, அதனை நாடு முழுவதும் அரச தலைவர் தேர்தலுக்கு பரப்புரைக்குப் பயன்படுத்தும். இதுபோன்று பல விடயங்களைச் சுட்டிக்காட்டி இப்போது தேர்தலை நடத்தவேண்டாம் என்று தெரிவித்தேன் என்றார் ஹூல்.

இந்தச் சர்ச்சை குறித்து கருத்து வெளியிட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, உயர் நீதிமன்ற உத்தரவின் படி, தேர்தல் திகதி குறித்து முடிவெடுக்க வேண்டியது, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிதான் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நீதிமன்றம் தெரிவத்தாட்சி அதிகாரிக்கே உத்தரவிட்டது. அவர் தனது தெரிவு குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் கருத்தை கோரினார். நானும், ஆணைக்குழுவின் உறுப்பினரான நளின் அபேசேகரவும், இணங்கினோம். அதில் இரண்டுக்கு ஒன்று என்ற பெரும்பான்மை இருந்தது. எனவே அந்த முடிவு எடுக்கப்பட்டது, என்று கூறினார்.

இருப்பினும் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆணைக்குழு உறுப்பினர் ஹூல், அது பொய்யான தகவல். இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கும், மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கும் கடிதம் எழுதியுள்ளேன். தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்ட ஏற்பாட்டின் அடிப்படையில், ஆணைக் குழுவின் மூன்று உறுப்பினர்களின் அனுமதியின்றி எடுக்கும் எந்தத் தீர்மானமும் செல்லுபடியற்றது - என்றார்.

(ஓ.5,105)

## பாசமிகு தாயாரின் முதலாம் ஆண்டு நினைவுநாள்

மலர்வு 14 . 07 . 1943



உதிர்வு 17 . 08 . 2018

**சிவப்பிரகாசம் யோகலட்சுமி (மணி)**

திதி:பூர்வபட்ஷ ஷப்தமி (05.09.2019)

*அம்மா ஓர் ஆண்டு என்ன -*
*ஓர் ஆயிரம் ஆண்டு ஆனாலும் உங்கள் பாசம்*
*எம்மை விட்டு என்றும் அகலாது.*
*மீண்டும் ஓர் பிறப்பு என்று இருந்தால் -*
*உங்களுக்கே கடைசி மகளாகவே வந்து*
*மீண்டும் பிறக்க வேண்டும்...*

ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (05.09.2019) வியாழக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**பிள்ளைகள்: மோகன், சுமித்திரா, யோகம்**
**சகோதரர்கள்: நடராசா, கிளி, ஈசு**
**பேரப்பிள்ளைகள்.**

**இல.61, ஆச்சிரம வீதி, புதுமுறிப்பு,**
**கிளிநொச்சி. 077 305 6864**

## மரண அறிவித்தல்

**தம்பிப்பிள்ளை மகாதேவா**

(ஓய்வுபெற்ற யாழ். தபால் நிலைய உத்தியோகத்தர்)



அன்னையின் மடியில் 28.06.1939 ஆண்டவன் அடியில் 31.08.2019

அரியாலையை சேர்ந்த ஓய்வுபெற்ற யாழ் தபால் நிலைய உத்தியோகத்தர் தம்பிப்பிள்ளை மகாதேவா 31.08. 2019 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும். காலஞ்சென்ற சின்னத்துரை-அருளம்மா தம்பதியரின் மருமகனும். புஸ்பராணியின் பாசமிகு கணவரும். இந்திரலிங்கத்தின் அன்புச் சகோதரனும். பாமா. நகுலராஜ். அகிலராஜ். காலஞ்சென்ற வசந்தராஜ் மற்றும் மகிந்தராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும். றிபேக்காவின் அன்பு பெரியப்பாவும். பாஸ்கரன். தமயந்தி. பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனும். கமலாம்பிகை. தில்லைநாயகி. ஜெயரட்ணம். டிபாலதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும். தர்ஷா. விதுஷா. டியாஷா. அபிரா. நேத்திரா ஆகியோரின் அன்பு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.716. நாவலர் வீதி. அரியாலையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (05.09.2019) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.இல:077 674 6349**
**077 724 2122**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வவுனியாவில் ...

சென்று பார்வையிட்டபோது யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். 58 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உலுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஓ.5,ரி4)

## கிளிநொச்சி...

இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லண்டனைச் சேர்ந்த தீபன் என்று அழைக்கப்படுவரே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தின் பிரதான வீதிக்கு அண்மையில் ஏ-9 வீதியில் விபத்து இடம்பெற்றுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மகிழுந்தும், கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கிப் பயணித்த பேருந்தும் விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் மகிழுந்தைச் செலுத்தியே சாரதியே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர், கிளிநொச்சி மாவட்டத்தில் மகிந்த ராஜபக்சவின் செயற்பாட்டாளராக இருந்தவர் என்று கூறப்படுகின்றது. அவர் பயணித்த மகிழுந்தின் முன்பக்கக் கண்ணாடியில் மகிந்த ராஜபக்சவின் படமும் ஒட்டப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பல்வேறு சிரமங்களின் மத்தியில் மகிழுந்திலிருந்து மீட்கப்பட்டு, கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்து இடம்பெற்ற சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ.5,6)




## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**இரத்தினசிங்கம் பிரசாத்**


| மண்ணில் | இறைவனடியில் |
|---|---|
| 24.02.1987 | 15.09.2018 |

வானோடு நிலவாக நீ சென்று
ஈராறு மாதங்கள் கடந்தாலும்
நெஞ்சோடு நினைவாக
உன் நினைவுகள்
எம்மை விட்டு நீங்கவில்லை இன்றும்
காதோரம் கேட்குதே பேசிய வார்த்தைகள்
கண்ணோரம் தெரியுதே நீ நடந்த பாதைகள்
ஐயன் நினைவை நீ மனதில் ஏத்தியதனாலோ
அவனோடு உனை ஐக்கியமாக்கினானோ
தாயோடு தந்தை முதல் சொந்தங்கள் மறந்து
மண்ணை விட்டு விண்ணோடு சேர்ந்தாலும்
உன் ஆத்மா சாந்தியடைய கரம் கூப்பி வேண்டுகின்றோம் இறைவனை....

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.
(CS 5726) (14.17)

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11.04.1933 | 04.09.2019 |

அமரர் **வல்லிபுரம் குமாரசாமி**
*(ஓய்வு பெற்ற எழுதுனர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.)*

கைதடி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் **திரு.கு. கோகுலன்** அவர்களின் பாசமிகு தந்தை அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்.
கமநல சேவைகள் சமூகம், கமநல சேவைகள் நிலையம், கைதடி.


**நியமனம்...**

மைச்சர், செயலகத்தில் மாகாண ஆளுநரின் பொது மக்கள் சந்திப்பு புதன் கிழமைகளில் நடைபெற்றுவருகின்றது. இந்த நிலையில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். தமக்கான நியமனத்தை காலதாமதமுமின்றி வழங்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

"பட்டதாரிகளில் உள்வாரி, வெளிவாரி எனப் பாகுபாடு காட்ட வேண்டாம், அனைவருக்கும் நியமனம் வேண்டும். கால தாமதம் வேண்டாம், படித்தவர்களுக்கு வேலை வேண்டும்" என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(த-ரி1)

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11.04.1933 | 04.09.2019 |

# வல்லிபுரம் குமாரசாமி

**(ஓய்வுபெற்ற புத்தகம் கட்டுனர் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)**

யாழ்.வேளாதோப்பை பிறப்பிடமாகவும் கட்டுவன் மற்றும் விநாயகர் வீதி நல்லூர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குமாரசாமி 04.09.2019 புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மருமகனும் பூமணியின் அன்புக்கணவரும் சுதர்மினி, சிவாஜினி, கோகுலன் பிரீதினி, விகிர்தினி, பந்துலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகாசன் புவியரசி, லோகேஸ்வரன், சுவேந்திரராஜா, அபிராமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை, சின்னம்மா, சுப்பையா, செல்லத்துரை மற்றும் நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் விநாயகமூர்த்தி மற்றும் காலஞ்சென்ற புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரக்ஷனா, பிரார்த்தனா, கவிதன், தரண்யன், சுபர்ணா, மகிஷா, அக்ஷரா, அருஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



# கணபதிப்பிள்ளை குமாரசாமி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல. 88, மகாத்மாவீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குமாரசாமி நேற்று 04.09.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நன்னாரிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தர் சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் கண்மணியின் அன்புக்கணவரும் லக்சுமி (கனடா), காலஞ்சென்றவர்களான செல்லையா, வைத்திலிங்கம் மற்றும் பார்வதிப்பிள்ளை (நெடுந்தீவு) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பசுபதி, வைத்திலிங்கம், வள்ளியம்மை ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் போசராசா, கோவிந்தராசா, காலஞ்சென்ற தேவமலர் மற்றும் கோபாலகிருஷ்ணன், கலாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான ராதாதேவன், திருமகள் மற்றும் லலிதாதேவி, தியாகராசா, மாலினி, தயாசீலன் (விவசாயத்திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும் டிசாந்தன், நிவேதிகா, காலஞ்சென்ற தயாளினி மற்றும் தர்ஷிகா, பபிதரன், கிருபா, கிருஷா, நிஷாந்தினி, நிதர்சினி, துவாரகா, விக்கினேஸ்வரன், துளசி , கௌசி, அனு, அபி, தமிழ்வாணம், கோபிகா, தர்மிகன் மதுரிக்கா, கோசினி ஆகியோரின் பேரனும் அக்ஷனா, அக்ஷயன், அக்ஷயா, இலக்கியா, அபிதன், டினேஸ்கா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2019) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தயாசீலன் 077 267 0936**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# Procurement Notice

## Obtaining a building for Project Consultant's office on rental basis – RIDEP

Calling application for a building on rental basis to run the Project office with the following facilities and conditions.

01. Minimum 1500 sq. Ft., four rooms and large hall facilities,
02. Parking facilities for minimum three vehicles.
03. Minimum two washrooms facilities.
04. Very close to Main Street and within 1 km surrounding of PIU Office at 225, Main Street, Jaffna.
05. No advance will be paid.
06. Rent will be paid on the basis of assessment done by Dept. of valuation.

Application form can be collected at free of charge from RIDEP office 225, Main Street, Jaffna till 3.00pm, 16.09.2019 and perfected application to be submitted on or before 17.09.2019 at 10.00 am. Further information can be obtained at the above office. Contact No: 021-2214277

**Provincial Project Director, RIDEP, NP**

(CS 26864)(14.17)

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம். வரணி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கடை இல.02 இனை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வரணி சந்தை பிரதேசத்தில் அமைந்துள்ள கீழ்க்குறிப்பிடப்படும் கடையினை 01.10.2019 ஆம் திகதியில் இருந்து நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப் படுகின்றன.

குறித்த கடையினை பலசரக்கு வியாபாரம், குளிரகம், புத்தகசாலை, காகிதாதிகள் புதினப்பத்திரிகை விற்பனை நிலையம், போன் திருத்தகம், கைத் தொலைபேசி விற்பனை நிலையம், போட்டோ பிரதி செய்யும் கடை, பிஸ்கட் கடை, பழவகை பழவியாபாரம், மிக்சர் கடை அழகுசாதனப் பொருள் விற்பனை நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்த முடியும்.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- **06.09.2019 - 19.09.2019 வரை**
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- **20.09.2019 மு.ப 10.00 மணி வரை**
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- **20.09.2019 மு.ப 10.30 மணி**

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT தவிர மீளளிக்க முடியாதது) | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்க கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் (VAT, NBT தவிர மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| 01 | வரணி சந்தை கடை இலக்கம் - 02 | வரணி சந்தை வளாகம் | 180,000.00 | 1,800.00 | 750.00 |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பிக்க விரும்புவோர் குறித்த 06.09.2019 தொடக்கம் 19.09.2019 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன், ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. பூரணப்படுத்திய கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"தவிசாளர் / செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
5. 20.09.2019 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.
6. மாதாந்த கடை வாடகையாக பிரதேசசபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். முதல் மாத வாடகைப்பணத்தினை அடுத்துவரும் (ஒவ்வொரு மாதமும்) 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தண்டப்பணமாக 10% அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.
7. கேள்விச் சித்திகாரராகத் தெரிவு செய்யப்படுவர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினையும் மேற்கொள்ள வேண்டும்.
8. சித்திகர குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
9. சபையினால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைகாரர் சாவகச்சேரி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
13. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 . 06 . 1987



விண்ணில் 17 . 08 . 2018

அமரர் **தியாகராஜா உமாகாந்** (உமா)

ஆறாத் துயர் சுமந்து வருடம் ஒன்று ஆனதுவோ
எங்கள் செல்வமே!
நீ வாழ்ந்த பாதி வாழ்க்கையிலே
சேனை சனம் சூழ்ந்திருக்க
குதூகலமாய் வாழ்ந்தாயே
இப்போ யாரும் அற்றவர் போல்
தனி வழியே போய் ஓடி மறைந்தாயே
உன் உயிர் பிரியும் போது என்ன நினைத்தாயோ
எங்கள் செல்வமே!
உன் பிரிவை நினைத்தால் ஆறிடுமோ எங்கள் துயர்
உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

(cs 674) (13.17)


இன்று (05.09.2019) வியாழக்கிழமை அன்னாரின் முதலாம் ஆண்டு அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

A9 வீதி, இயக்கச்சிச் சந்தி,
இயக்கச்சி.

என்றும் கண்ணீருடன் உன் பிரிவால் துயருற்றிருக்கும்
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி.
077 8702 618

## மரண அறிவித்தல்கள்

மலர்வு 19 . 04 . 1934



உதிர்வு 31 . 08 . 2019

## நாகமுத்து இராசரத்தினம்

லோட்டஸ் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு, பாலாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இராசரத்தினம் 31.08.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பொன்னு தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், குணரத்தினம், நவரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், றஞ்சனேஸ்வரி (சுவிஸ்), றமணி (சுவிஸ்), றதினி (கனடா), றஜீதரன் (கரன் பான்சி -சுன்னாகம்), துளசிதாஸ் (ஐங்கரன் பான்சி - சுன்னாகம்), ரவீதரன் (சிறி - லண்டன்), றமேஜினி (கனடா), றஜிந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரன் (சுவிஸ்), நகுலேஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (கனடா), ஜெகதாம்பிகை, ஜெனித்தா, லக்ஷிக்கா (லண்டன்), குகராஜன் (கனடா), சிவகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ரதீனா - பகீரதன், ரதீபன், நவர்ணா, நதீர்னா, நதீர்னன், விதுனா, வீபூஷன்,அஸ்மிதன், திசாந், லோகவர்ஷன், அக்சணா, வேணன், தீரன், சகீரன், சகீனா ஆகியோரின் பாசமிகு பேரனும், அனுஸ், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2019) வியாழக்கிழமை மு.ப 9.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் மானிப்பாய் வீதி,**
**இணுவில் தெற்கு, பாலாவோடை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 467 7936, 077 592 5385**

### வீடு வாடகை/ கார் விற்பனை

03 அறைகள் கொண்ட வீடு கொக்குவில் கருவேலடி லேனில் வாடகைக்கு உண்டு. Toyota Corralla Sprinter 1999 இல் பதிவு செய்யப்பட்ட இல 301 - XXXX விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 923 9474/ 076 729 3143

### தவறிவிட்டது

கந்தையா பரமநாதன் ஆகிய எனது அடையாள அட்டை, வங்கிக் கடன் அட்டை ஆகியன அடங்கிய பை திருநெல்வேலிக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**க.கனகராசா**
**நெட்டிலிப்பாய் கோயில் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு.**

தொடர்பு: 076 9935639/ 0212215756

### விற்பனைக்கு

ஜெனறேற்றர் 12Kw விஸ்டர் எஞ்ஜின்

077 267 2888

### மணமகள் தேவை

யாழ் இந்து 1971 இல் பிறந்த உத்தியோகம் பார்க்கும் விவாகரத்தான மணமகனிற்கு மணமகள் தேவை. படம், குறிப்பு, தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும். (AKN 806) (04.17)

Paranperam@gmail.com

### விதை நெல், தென்னம்பிள்ளை விற்பனைக்கு

விவசாயத் திணைக்களத்தினால் சுத்திகரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட B.G 406 விதை நெல்லும், நல்லின தென்னம் நாற்றுக்களும் விற்பனைக்குண்டு. (CS 00675)(04.17)

தொடர்பு : 077 659 2044

உதயன் விளம்பரங்களுக்கு advt@uthayan.com

## Accounts Trainess

- Female Preferred
- Accounting & Computer Knowledge
- Passed in A/L (Commerce), H.N.D.A, A.A.T. Student Preferred

(CS 27822)(14,17)

Forward Your CV to
Email : sinthu3537@gmail.com
Before 11 th of Sep 2019

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 07 . 1948 — மறைவு 03 . 09 . 2019

### தம்பித்துரை யேசுராசா (யேசு)

**(கலாபூசணம், யாழ்ரத்னா, சுவதம் ஆகிய விருதுகளைப் பெற்ற அண்ணாவியார்)**


குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை யேசுராசா (யேசு) 03.09.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை–ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சவிரியன்-சவிரியம்மா தம்பதியரின் மருமகனும்; கிளாரம்மாவின் (செல்லம்) அன்புக் கணவரும், பிலிப், காலஞ்சென்றவர்களான பாக்கியநாதர், வவி, குணம், மணி, கட்டபொம்மன் யோசப், சூசனம்மா ஆகியோரின் பாசமுள்ள சகோதரரும், கவிதா (பிரான்ஸ்), கீதா (லண்டன்), பிரசன்னா (பிரான்ஸ்), பிரேமநாத், பிரபா, ஜீவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமரன், பெனட், றேனுகா, யோரா, அனிதா, உதயன் ஆகியோரின் மாமாவும், தேவதாஸ், கொலஸ்ரிகா (செந்தில்), சந்திரா, துரை, கிளி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆகாஸ், சந்தோஸ், சாரோன், பென்சியா, குளோரியா, பிரவின், கிஷோனியா, கிரிநாத், அஸ்வினி, பிரித்திக்கா, அஸ்வின், சிமோன், சொபியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (05.09.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு அவரது பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.49, மவுன் கார்மேல் வீதி, குருநகர்.** — **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### கார்த்திகேசு தியாகராசா

**(உரிமையாளர், எவரெடி கிளீனிங் சேவிஸ்)**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தேவாலய வீதி, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட Everady Cleaning Service உரிமையாளரான கார்த்திகேசு தியாகராசா கடந்த (03.09.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(05.09.2019) வியாழக்கிழமை நண்பகல்12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொழில் சார் துறையினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குறிப்பு :** நேற்றையதின (04.09.2019) மரண அறிவித்தலில் இறுதிக்கிரியைகள் இடம்பெறும் நேரம் முற்பகல் 10.00 என தவறுதலாக அறியத்தரப்பட்டுள்ளது.

**தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### அமரர் சிவப்பிரகாசம் கந்தசாமி

பாரதியாருக்கு குண்டலினியோகம் கற்பித்த, புதுச்சேரியில் 1904 ஆம் ஆண்டு தைப்பூசம் அன்று சமாதி அடைந்த செல்லப்பா சுவாமிகளது பேரனாகிய சிவப்பிரகாசம் கந்தசாமி 04.09.2019 புதன்கிழமை அமரத்துவம் அடைந்துள்ளார்.

அன்னார் தொட்டிலடி சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்க-ளான சிவப்பிரகாசம் - மீனாட்சி தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான கொல்லங்கலட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்த மூத்ததம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற செல்லமுத்துவின் அன்புக் கணவரும் கணபதிப் பிள்ளையின் சகோதரரும் திருஞானசம்பந்தமூர்த்தி, நிர்மலாதேவி, காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் கனகாம்பிகை, சிவசுந்தரம், சிவானந்தம், காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் தந்தையும் இரஞ்சிதமலர், வைத்தியநாதபிள்ளை, குணரத்தினம், சுசீலாதேவி, செல்வமனோகரி ஆகியோரின் மாமனாரும் தேன்மதுரன், கோகுலன், தயாளன், நந்தகோபன், தனுசியா, றதீஸ், கீர்த்தனா, பிரணவன், ஹஸ்மேனன், சந்தியா ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (05.09.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் சமாதிநிலைப்படுத்தப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகன் ஒழுங்கை, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.** — **தகவல் : பிள்ளைகள், மருமக்கள்.**

**021 223 0449/ 071 121 8049**

## மரண அறிவித்தல்



மலர்வு 14 . 04 . 1924 — உதிர்வு 03 . 09 . 2019

### ஆறுமுகம் முத்தையா

சங்கானையை பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் முத்தையா 03.09.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொற்கொடி தம்பதி யினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொற்பதியின் அன்புக்கணவரும் ஆறுமுகதாஸ் (கருணா, மல்லாகம்), ரவிதாஸ் (USA), ஜெகதாஸ் (நோர்வே), சுகந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத்தந்தையும் கலாதேவி, காலஞ்சென்ற சிவசக்தி மற்றும் கலைவாணி, உமைபாலகி, அகிலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருபாலினி, அருண்பிரசாத் (பிரான்ஸ்), மகிழ்தினி, மதிசுகன் (கொழும்பு), நாதரூபன் (கொழும்பு), அரவிந், பிரவிந், சாங்கரி, அபித்தா, ஜனனி, பிரசாத் காலஞ்சென்ற செல்வன் மற்றும் அருண் ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்மிகா, மோவிந், துவாரக் ஆகியோரின் பூட்ட னுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று மல்லாகம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 126, நீதிமன்ற வீதி, மல்லாகம்.** — **தகவல்: குடும்பத்தினர்**
**021 224 1948, 077 371 7976**

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான




DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH

Reading Writing Listening Speaking

Foundation ENGLISH | Diploma in Fluent English Part-I | Diploma in Fluent English Part-II

புதிய பிரிவுகள் ஆரம்பம் உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri- 8:30 a.m.<br>Mon,Wed,Fri- 3:00 p.m.<br>Sat,Sun - 2:00 p.m. | Tue,Thu - 3:30 p.m.<br>Sat,Sun - 2:30 p.m. | Mon,Wed,Fri- 11:30 a.m.<br>Sat,Sun - 11:30 p.m. | கிளிநொச்சி Sat,Sun - 9:00 a.m.<br>சாவகச்சேரி Tue,Thu - 8:00 a.m.<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri- 1:30 p.m. |

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12)

IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

# DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை ஸ்ரீ கோவில் முன்பாக) | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | சீரணிச்சந்தி | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

## பலாலி....

பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழக்க முயன்றதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. படுகாயமடைந்த இராணுவச் சிப்பாய் பலாலி இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் பின்னர் காலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு தற்பொழுது 24 ஆம் இலக்க விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

சூட்டுக் காயத்துக்கு இலக்கான நிலையில் சேர்க்கப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய்க்கு வயிற்றுப் பகுதியில் ஒரு சூட்டுக் காயமும், இடது முழங்கால் பகுதியில் ஒரு சூட்டுக் காயமும் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ.5.105)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



CS27825(16/17)

கடந்த (07.08.2019) அன்று சிவபதம் அடைந்த குடும்பத்தலைவர்

### அமரர் சாம்பசிவம் தியாகலிங்கம்

அவர்களின்

வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (06.09.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல. 68/9, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

உ

தெல்லிப்பழை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## திருமஞ்சத் திருவிழா -2019-



வருடாந்த மகோற்சவ ஆறாம் திருவிழா

காலம்:
இன்று (05.09.2019)
வியாழக்கிழமை
மாலை 6.00 மணி

அம்பாள் அடியார்கள் அனைவரும் வருகைதந்து நல்லருள் பெறுவீர்களாக.

திருமஞ்சத் திருவிழா
உபயகாரர்கள்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி
விரிவுரையாளர்

**திருமதி ஞானசக்தி கணேசநாதன்** அவர்கள்
**"கலைச்சுடர்"** விருது பெற்றமைக்காய் வாழ்த்துகின்றோம்

தணிகை தம்பதியரின் மகளாய்
கணேசநாதனின் மனைவியாய்
விசாலினிக்கு மாதாவாய்
பலநூறு மாணவர்க்கு நல் ஆசானாய்
பணிபல புரிந்திட்டாய் - இன்று
நீ ஓர் 'கலைச்சுடராய்'
தேசத்திற்கு ...............
பணி தொடர வாழ்த்துகின்றோம்.

கல்லூரி நண்பர்கள்.

## முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை என்பவற்றிற்கான கேள்வி கோரல்கள் 2019/2020

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த கேள்விதாரர்களின் முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்

| தொ. இல. | பெறுகை இல. | கேள்விகள் | காலப்பகுதி | உத்தரவாத பணத்தொகை |
|---|---|---|---|---|
| 01 | DGH/Mullai/5/Security Service | பாதுகாப்பு சேவை | 01.11.2019 – 31.10.2020 | 100,000.00 |
| 02 | DGH/Mullai/6/Cleaning Service | சுத்திகரிப்பு சேவை | 10.11.2019 – 09.11.2020 | 100,000.00 |

01. 2019 முதல் 2020 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு, சேவைகளுக்காக ஆர்வமுள்ள இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்கள், இவ் வைத்தியசாலை கணக்குக்கிளையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,500.00 வினை செலுத்தி கேள்வி ஆவணங்களை 05.09.2019 தொடக்கம் 26.09.2019 ம் திகதி வரை காலை 9.30மணி முதல் பி.ப.3.30 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.
02. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருக்க வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்கள் 27.09.2019 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்கூடியவாறு தலைவர், கேள்விச்சபை மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக பெறுகை பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 27.09.2019 மு.ப. 10.30 மணிக்கு விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
04. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
05. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கும் பெறுகைகளின் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
06. மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொ.இல.0212061423

**வைத்திய கலாநிதி. செ.கஜன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு**

(CS)(14.17)

## சேவை நலன் பாராட்டும் மணி விழா வாழ்த்தும்



Best Wishes

### திருமதி மகாராணி சிவானந்தன்

**(இலங்கை ஆசிரியர் சேவை-தரம் I, பயிற்றப்பட்ட ஆசிரியர், இந்து சமயம்)**

சேவை விவரம்
06.08.1988 - 22.02.1991 ஆசிரியர்- நு/கல்சே தமிழ் வித்தியாலயம்
23.02.1991 - 31.12.1992 கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
01.01.1993 - 29.08.1999 ஆசிரியர்- நு/நானுஓயா தமிழ் வித்தியாலயம்
30.08.1999 - 04.09.2019 ஆசிரியர் - யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்

அன்பும் அறிவும் நிறைந்து
ஆசிரியப் பணியில்
ஆண்டுகள் முப்பத்தொன்றினை நிறைவெய்தி
இனிமையும் பெருமையும் மிகுந்து
ஓளவியம் போல் அறிவூட்டிய
ஆசிரிய திருமணியே!
உடல் உள நலமுடன்
ஓங்கு புகழ் பெற்று வாழ
வாழ்த்துகிறோம் வாழியவே!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்

சப்பாணி
@manipmp

பக்கத்து வீட்டில் நாய்
இருந்தால் எல்லா நாளும்
"குரை கேட்பு" நாளே!

செந்திலின்_கிறுக்கல்கள்
@Annaiinpillai

பெட்டி நிறைய பணம் சேர்க்க
னும் என்ற ஆசையில்
ஆரம்பிக்கப்பட்டதே
பெட்டிக்கடை!

மாதொருபாகன்
@maathorubhagan

போகிற போக்கில் கூகிள்
மேப்பில் கடவுளை
தேடும் காலம் இது..!


சப்பாணி
@manipmp

பயன்படுத்தப்பட
வேண்டிய பணம்
நேசிக்கப்படுகிறது.
நேசிக்கப்பட வேண்டிய
மனிதர்கள்
பயன்படுத்தப்படுகிறார்கள்

வார்த்தைகளின் மதிப்பு
தெரிந்தவர்களோடு வாதம் செய்!
வார்த்தைகளால் வதம்
செய்பவர்களோடு மௌனம் செய்..!!

# என்னை நகைச்சுவை இயக்குநர் ஆக்கிவிட்டார்கள்

- சுந்தர் சி



'வந்தா ராஜாவாதான் வருவேன்' படத்தைத் தொடர்ந்து இயக்குநர் சுந்தர்.சி இயக்கிக் கொண்டிருக்கும் படம் 'ஆக்ஷன்'. இந்தப் படத்தில் விஷால் கதாநாயகனாக நடிக்க, தமன்னா, ஐஸ்வர்யா லட்சுமி ஆகியோர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். மத கஜ ராஜா மற்றும் ஆம்பள படங்களைத் தொடந்து இயக்குநர் சுந்தர்.சி மற்றும் நடிகர் விஷால் மூன்றாவது முறையாக இணையும் படம்'ஆக்ஷன்'.

இந்தப் படம் பற்றி இயக்குநர் சுந்தர்.சி கூறியதாவது:

"விஷாலுடன் நான் முன்பே இணைந்து படம் செய்வதாக இருந்தது. தொடர்ச்சியாக பேய் படங்கள், நகைச்சுவைப் படங்கள், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சிரித்து ரசிக்கும் படியான படங்கள் தந்ததால் என்னை காமெடி இயக்குநர் ஆக்கிவிட்டார்கள். ஆனால் எனக்கு 'ஆக்சன்' படம் செய்யதான் ஆசை. இந்தப் படம் முழுக்க முழுக்க சண்டை காட்சி நிரம்பிய திரைப் படம் என்பதால் விஷால் நடித்து வரும் இந்தப் படத்துக்கு "ஆக்ஷன்" என்றே பெயர் வைத்துவிட்டோம்.

படிப்பு கெட்டுப்போய்விடக் கூடாது என்பதற்காக புது ஐடியா_



வானவில் தோன்றும் போது
வானம் அழகாகிறது...



நம்பிக்கை தோன்றும் போது
வாழ்க்கை அழகாகிறது...!



பாராட்டு

## காணாமல்....

அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி முதல் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதி, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக இழப்பீட்டு பணம் வைப்பீடு செய்யப்படவுள்ளது.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் தொடர்பான அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையை கவனத்தில் கொண்டு, அழுத்தத்துக்கு உள்ளான குடும்பங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்காக காணாமல் போனோர் தொடர்பான சான்றிதழை பெற்றுக்கொடுப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான உத்தரவைப் பதிவாளரின் திணைக்களத்துக்குப் பிறப்பிப்பது தொடர்பில், நிதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு ஆகியவை கூட்டாக சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஒ,5,61)

## பண்டா - செல்வா...

இடம்பெற்றது. பண்டா–செல்வா ஒப்பந்தத்தை குழப்பியதும் 83 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக கலவரத்தை கையில் எடுத்ததும் யார் என்பதை மறந்துவிட வேண்டாம் என்று சபையில் சாடினார் வாசுதேவ.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை மத்திய கலாசார நிதியம் தொடர்பிலான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயகார, மத நல்லிணக்கம் என்பது வெறுமனே ஒரு தரப்பை பலப்படுத்துவதை கொண்டு கையாள முடியாது. பௌத்த விகாரைகள் குறித்து மட்டும் அல்லாது ஏனைய மத அபிவிருத்திகளுக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்லிணக்கம் என்பது இரண்டு தரப்பின் மத ஒருமைப்பாடு உருவாக்கப்பட வேண்டும். பொது இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். ஆனால் அதில் தான் சிக்கலே உள்ளது. உரிமை கூறும் தன்மையில் தான் பிரச்சினை எழுகின்றது. ஆனால் அதனையும் தாண்டி நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும் என்றே நானும் கூறுகின்றோன்' என்றார்.

இதனை அடுத்து அமைச்சர் சஜித்துக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவவுக்கும் இடையில் வாத பிரதிவாதம் உருவாகியது. 'கடந்த காலங்களில் நாசமாக்கப்பட்ட பள்ளிவாசல்கள் அபிவிருத்தி செய்யப்படும். கண்டி, குருநாகல் மாவட்டங்களில் நாசமாக்கப்பட்ட பள்ளிவாசல்கள் திருத்தப்படும். புத்தசாசனத்துக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை ஏனைய மதங்களுக்கும் கொடுத்து அனைவரையும் பாதுகாக்கவே நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்' என்றார் சஜித்.

அதற்கு வாசுதேவ, இனவாதம், மதவாதத்தை தூண்டும் தேவை யாருக்கு உள்ளது. நாட்டில் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் நபர்களுக்கே இந்தத் தேவை உள்ளது. ஆனால் எமக்கு அவ்வாறானதொரு நோக்கமும் இல்லை' என்றார்.

'நீங்கள் அவ்வாறு செயற்படும் நபர் அல்ல. ஆனால் உங்கள் அணியின் கண்ணாடியில் சென்று பார்த்தால் அவ்வாறு செயற்படுவது யாரென்று தெரியும்' என்றார் சஜித்.

அதற்கு வாசுதேவ, மக்களின் எண்ணங்களில் மாற்றங்கள், தன்மைகளின் மாற்றங்கள், உணர்வுகளில் பாரமான மாற்றங்கள் இருக்க முடியும். ஐக்கிய தேசிய கட்சி 1958இலும் அதேபோல் 1983 ஆம் ஆண்டிலும் கலவரங்களை செய்து இனவாத மதவாத குழப்பங்களை ஏற்படுத்தும் தலைவர்களை கொண்ட கட்சி.

இந்தக் குற்றத்தை எமது பக்கம் சுமத்த முயற்சிப்பதென்றால் அதனை ஆதாரங்களுடன் கூற வேண்டும். எமது பக்கம் இனவாதம் பரப்பும் தலைவர்கள் இல்லை. பண்டா – செல்வநாயகம் உடன்படிக்கைக்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்த்தன செயற்பட்டதை நீங்கள் மறந்திருக்க முடியும். 1983 ஆம் ஆண்டு சிறில் மேத்திவ் வீதியில் இறங்கி தமிழ் மக்களுக்கு எதிராக கலவரம் செய்ததை நீங்கள் மறந்திருக்க முடியும். இதெல்லாம் நீங்கள் மறந்திருக்க முடியும். ஆனால் எமக்கு இனவாத மதவாத பிளவுகள் தேவையில்லை. வேலை செய்யும் மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பதே எமது நோக்கம். பண்டாரநயாக – செல்வநாயகம் உடன்படிக்கையை அன்று எதிர்த்ததே ஐக்கிய தேசிய கட்சி தான். ஆதரங்களுடன் நாம் கூறுகின்றோம், ஆனால் ஆதாரம் இல்லாத கருத்துக்களை நீங்கள் கூறுகின்றீர்கள்' என்றார்.

இதனை அடுத்து ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் வாசுதேவவுக்கு எதிராக குரல் எழுப்பினர். எனினும் அவர்களின் கருத்துக்களை நிராகரித்த வாசுதேவ, சஜித் பிரேமதாச அரச தலைவர் வேட்பாளராக களமிறங்குவது குறித்தே இன்று நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்று வருகின்றது. சஜித் அரச தலைவர் வேட்பாளரானால் நான் அவருக்கு எதிராகவே செயற்படுவேன். ஆனால் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வேன். ஏனென்றால் எமக்கு தேர்தலில் போட்டியிட புதிய எதிராளி ஒருவருடன் நாம் போட்டியிடுவோம். அதில் எம்மால் இருக்கும் நிலைமைக்கு அப்பால் உறுதியாக வெற்றியொன்றை பெற்றுக் கொள்ளும் போராட்டத்தை முன்னெடுக்க முடியும். அப்பிடி நான் நினைகின்றேன் எனவும் குறிப்பிட்டார். (ஒ,5,31)

# பழமையிலும் பழமையான எரேவான்



உலகில் மக்கள் தொடர்ந்து வசித்து வரும் மிகப் பழமையான நகரங்கள் என்று பட்டியலிட்டால் அதில் உரோம் நகருக்கு நிச்சயம் இடம் உண்டு. ஆனால் அதைவிட 28 வருடங்கள் பழமையான நகரம் 'எரைவான்'. இந்த ஆண்டு தனது 2 ஆயிரத்து 800ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இவ்வாறு உலகின் ஆகப் பழமையான நகரமொன்றைப் பற்றி அதன் 2 ஆயிரத்து 800ஆவது ஆண்டு நிறைவில் அலசுவதென்பது தவிர்க்க முடியாததாகிறது. அந்த வகையில் அர்மீனியா, எரேவான் தொடர்பில் ஆய்கிறது இந்தச் சிறு கட்டுரை.

உலக நாடுகளிலேயே கிறிஸ்தவ மதத்தை ஆட்சி மதமாக ஏற்றுக் கொண்ட முதல் நாடு அர்மீனியா (துருக்கிக்கு கிழக்குப் புறமும், ஈரானுக்கு வடக்குப் புறமுமாக உள்ளது). அர்மீனியா நாடு அடுத்தடுத்த பல நகரங்களை தனது தலைநகராக்கி அழகு பார்த்த நாடு. ஆனால் 1918ஆம் ஆண்டில் இருந்து அதன் அசைக்க முடியாத (13ஆவது) தலைநகராக விளங்கி வருகிறது எரெவான். ரஜ்தான் நதிக்கரையில் அமைந்துள்ள நகரம் இது.

இயேசுக் கிறிஸ்து இறந்த சில ஆண்டுகளிலேயே அர்மீனிய இராஜாங்கத்தில் கிறிஸ்தவ மதம் வேகமாக பரவத் தொடங்கியது. நான்காம் நூற்றாண்டில் இது ஆட்சி மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்போது வேறெந்த நாடும் கிறிஸ்தவ மதத்தை அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. எரெவானின் அருகில் சரித்திரப் புகழ்பெற்ற அரராத் மலை உள்ளது.

எரெவான் பல்வேறு ஆட்சிகளைச் சந்தித்து வந்த நகரம். உரோமானியர்களின் வசம் வந்தது. பிறகு பார்த்தியப் பேரரசின் கட்டுப்பாட்டில் வந்தது (ஈரான்,ஈராக்கில் வளர்ந்த பேரரசு இது). பின்னர் அரேபியர்கள், மங்கோலியர்கள், துருக்கியர்கள், பாரசீகர்கள், ரஷ்யர்கள் என்று மாறிமாறி இதைத் தம்வசமாக்கிக் கொண்டார்கள். 1582ஆம் ஆண்டில் துருக்கியர்கள் வசமானது. பின்னர் மீண்டும் ரஷ்யர்கள் கைக்குச் சென்றது. 1920ஆம் ஆண்டில் இது அர்மீனியக் குடியரசின் தலைநகரானது.

எரெவான் 'பிங்க் நகரம்' என்றுதான் அழைக்கப்படுகிறது. அங்குள்ள எரிமலைப் பாறைகள் பிங்க் வண்ணத்தில் காணப்படுகின்றன. எரெவானில் உள்ள பல கட்டடங்கள் இந்தப் பாறை கற்களால்தான் கட்டப்பட்டுள்ளன. அர்மீனியாவின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பேர் எரெவானில்தான் வசிக்கிறார்கள். பழங்காலத்தல் எரெபுனி என்ற பெயரில் இந்த நகரம் அழைக்கப்பட்டது. பிறகு எரிவான். இப்போது எரெவான்.

கி.மு. 782ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட ஒரு பெரும் கோட்டை, இந்த நகரின் அடையாளமாகவும் சரித்திரச் சின்னமாகவும் விளங்கியது. அர்மீனியாவைப் பொறுத்தவரை அதன் மக்களில் மிகப்பலரும் இப்போது பிற நாடுகளில்தான் வசிக்கிறார்கள். 1915ஆம் ஆண்டில் ஒட்டாமன் அரசு அர்மீனியர்களை இனப் படுகொலை செய்தது. முதலாம் உலகப்போரில் நடைபெற்ற இந்த இனப் படுகொலையின்போது தப்பிய ஆயிரக்கணக்கான அர்மீனியர்கள் எரெவானில் குடியேறினார்கள். கோட்டையும் அவர்கள் பாதுகாப்புக்கு உறுதியளித்தது. இது அர்மீனிய தலைநகராக மாறியதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணம்.

பின்னர் எரெவான் சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக விளங்கியது. சோவியத் யூனியன் க்லைந்த போது தனி நாடானது. ரஷ்யாவின் பரப்பளவோடு ஒப்பிட்டால் அர்மீனியா மிகச் சிறியது (200இல் ஒரு பங்கு என்று கூடச் சொல்லலாம்). இருப்பினும் சரித்திரச் சிறப்புகளைக் கொண்டு இன்னமும் வெற்றிகரமாக இயங்கி வருகிறது எரெவான்.

அர்மீனியாவின் நிர்வாகம், கலாசார மையமாக எரெவான் விளங்குகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளைத் தாண்டியும் அது உயிர்ப்போடு இருக்கிறது. சில வருடங்களுக்கு முன் ஒரு போட்டியை வைத்து புதிய கீதத்தை தேர்ந்தெடுத்தது எரெவான். ஆக பொதுவான தேசிய கீதத்தைத் தவிர தனியாக எரெவான் கீதம் ஒன்று உண்டு. தன் நகருக்கென புதிய கொடி ஒன்றையும் உருவாக்கிக் கொண்டது.

அமெரிக்கக் கொடியில், அதன் ஒவ்வொரு குடியரசையும் குறிக்கும் வகையில் ஒரு நட்சத்திரம் இருக்கும். எரெவானின் கொடியில் அந்த நகரின் முத்திரையைச் சுற்றி 12 சிறிய சிவப்பு முக்கோணங்கள். இவை அர்மீனியாவின் முந்தைய 12 தலைநகரங்களைக் குறிக்கிறதா? நிஜமாகவே சரித்திரத்தைப் போற்றும் நகரமாகத்தான் எரேவான் தோற்றமளிக்கிறது.

# சுற்றுச்சூழல் சூதாட்டம்!



புவி வெப்பமாதலின் பெயரால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் எந்த அளவுக்கு உண்மையானவை?. வளரும் நாடுகள் மீது வளர்ந்த நாடுகள் நடத்தும் மறைமுகப் பொருளாதாரப் போர்கள் இந்தச் சந்தேகத்தை நாளுக்கு நாள் வலுப்படுத்துகின்றன.

மழைக்காடுகள் என்றால், உடனே நினைவுக்கு வருபவை தென் அமெரிக்க நாடுகளில் பரந்துள்ள அமேசன் மழைக்காடுகள். இக்காடுகளின் பல்லுயிரியம் சிறப்புக் கருதி, அவற்றை தேசியப் பூங்காக்களாக அறிவித்து, அங்கே சுற்றுச்சூழலுக்கு எதிரான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளக்கூடாது என்று குரல்கொடுக்கின்றனர் உலகெங்கும் உள்ள சுற்றுச்சூழலியலாளர்கள். ஆனால், பொருளாதாரரீதியாகப் பின்தங்கியிருக்கும் தென்அமெரிக்க நாடுகளுக்கு வருமானம் தரும் வளங்களின் இருப்பிடமும் இந்தக் காடுகள்தான்.

இப்படித்தான் தன்னுடைய எல்லைக்குட்பட்ட வனப் பகுதியில் இருக்கும் பெற்றோலிய வளத்தின் மூலம், தன் பொருளாதாரத்தைக் காத்துக்கொள்ள விரும்புகிறது ஈக்வடார். தொடக்கத்தில், 'இந்தக் காடுகள் உங்கள் சொத்து மட்டும் அல்ல. அவை உலகின் சொத்து' என்று சொல்லி, நிதி அளிப்பதாகவும் கூறிய வளர்ந்த நாடுகள் ஒரு கட்டத்தில் தங்கள் வார்த்தைகளைக் காற்றில் பறக்கவிட்ட நிலையில், இப்போது எண்ணெய் எடுக்கும் பணிகளில் இறங்கியிருக்கிறது ஈக்வடார்.

வெறும் ஒரு சதவீத வனப் பகுதியே இதனால் பாதிக்கப்படும் என்று ஈக்வடார் அதிபர் ரபேல் கோரியா கூறினாலும், உண்மையில், இப்பணிகளால் ஏற்படும் பாதிப்பின் வீச்சு அதிகம்.

ஆனால், இங்கே மௌனமாக வேடிக்கை பார்க்கும் வளர்ந்த நாடுகள் மறுபுறம், பசுமைத் தொழில்நுட்பம் என்ற பெயரில் லாப வேட்டை ஆட எவ்வளவு துடிக்கின்றன என்பதை அம்பலப்படுத்துகிறது அமெரிக்காவின் சமீபத்திய திட்டம்.

நாம் ஏற்கெனவே பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தைக் காட்டிலும் பல மடங்கு கூடுதல் செலவு வைக்கக் கூடிய திட்டம் இது. உலக அளவில் இந்தியாவில் உள்ள குளிர்பதனச் சாதனங்களின் எண்ணிக்கை ஒரு சதவிகிதத்துக்கும் குறைவுதான். ஆனால், ஆசியாவில் 2020ஆம் ஆண்டளவில் 10 கோடி குளிர்பதனச் சாதனங்கள் விற்பனையாகும் - அவற்றின் மதிப்பு ரூ. 1.30 லட்சம் கோடியாக இருக்கும் என்ற சந்தை ஆய்வு அமெரிக்காவை இப்படி யோசிக்கவைத்திருக்கிறது.

சூழலுக்கு உகந்த தொழில்நுட்பத்தைப் பற்றிப் பெரிதாகப் பேசுகின்றன வளர்ந்த நாடுகள். ஆனால், அது யாருடைய சூழலுக்கு உகந்தது என்பதை இது உணர்த்துகிறது அல்லவா?

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மூன்றாவது அணி உருவாக்கத்துக்கு அத்திபாரம் இடவேண்டும்

அடுத்த அரச தலைவர் தேர்தல் தொடர்பான பரபரப்புக்களுக்கு மத்தியில், ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தொடர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றிவரும் நிலையில், எதிர்காலத்தில் ஜே.வி.பியுடன் சேர்ந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பணியாற்றும் நிலமை வரலாம் என்று எதிர்வுகூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஆப்ரகாம் சுமந்திரன். தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் தி இந்து ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

அந்த நேர்காணல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மனப்போக்கை அறிவதற்கு ஏதுவானதாக அமைந்திருக்கின்றது. ஏனெனில் சுமந்திரன் கூறுவதே பின்னர் கட்சியின் முடிவாக மாறிவந்திருக்கிறது என்பது அண்மைக்கால வரலாறு. இந்த நேர்காணலில் ஐ.தே.க. மற்றும் சு.க. இரண்டு கட்சிகள் மீதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்கூட அதிருப்தியில் இருக்கின்றது என்பதைச் சுமந்திரன் ஆழமாகப் பதிவு செய்திருக்கிறார்.

குறிப்பாகப் புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பான விவகாரத்தில் கூட்டமைப்புத் கடும் அதிருப்தியடைந்திருப்பதை இந்த நேர்காணல் வெளிப்படுத்துகின்றது. புதிய அரசமைப்பு விவகாரத்தில் இருந்து, சுதந்திரக்கட்சிதான் முதலில் விலகத் தொடங்கியது என்றாலும், பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும்கூட அந்த முயற்சியில் இருந்து பின்வாங்கிவிட்டது என்கிறார் சுமந்திரன். புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான பொறுப்பைப் பகிர்ந்துகொள்வதற்கு எல்லாத் தரப்புக்களும் முன்வராத போது, அதனைச் சுமப்பதற்கு ஒரு தரப்புக் கூடத் தயாராக இருக்கவில்லை என்பதால் எல்லாக் கட்சிகளுமே பின்வாங்கிவிட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் இந்த இரு கட்சிகளுமே தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் தாம் வழங்கும் வாக்குறுதிகளைக் கைவிடுவது காலம் காலமாக மாறி மாறி நடந்துவருகின்றது என்ற உண்மைபயையும் ஆணித்தரமாக எடுத்து வைத்திருக்கும் சுமந்திரன், இத்தகைய நிலை தொடர்ந்தால் ஜே.வி.பி. போன்ற தரப்புக்களுடன் எதிர்காலத்தில் சேர்ந்து பணியாற்றும் நிலை ஏற்படலாம் என்பதையும் சூட்சுமமாகக் கூறுகின்றார். ஆனால், அத்தகைய நிலை அடுத்த அரச தலைவர் தேர்தலிலேயே நடக்கும் என்று கூற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர்களை ஏமாற்றும் முதன்மைச் சிங்களக் கட்சிகளின் போக்கைச் சமாளிப்பதற்கு ஜே.வி.பியோடு மட்டுமல்ல தமிழ், முஸ்லிம் கட்சிகள் மற்றும் சிங்கள முற்போக்குக் கட்சிகளுடனும் இணைந்து ஒரு கூட்டைத் தமிழர் தரப்பு உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று இந்தப் பத்தியில் ஏற்கனவே ஒரு தடவை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எப்படியிருந்தாலும் தமிழர்கள் ஐ.தே.கவை அல்லது சு.கவையே ஆதரித்தாக வேண்டும் என்கிற நிலையே இருப்பதால் வாக்குறுதிகளை வழங்கித் தமிழர்களை ஏமாற்றிவிடலாம் என்று இந்த இரு கட்சிகளுமே எண்ணிக்கொண்டிருக்கின்றன. தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவின்றி அரசதலைவர் பதவிக்கான தேர்தலில் எந்தவொரு தரப்பும் வெற்றிபெற முடியாது என்கிற நிலையே இருப்பதால், வாக்குறுதிகளை வழங்குவது கட்சிகளுக்குக் கட்டாயமாக இருக்கின்றது. ஆனல், பின்னர் அவற்றை நிறைவேற்றுவதில்லை என்பதே வரலாறு.

இந்த நிலையில் இருந்து மீண்டு வருவதற்கான நகர்வுகளை, வழிகளைக்கண்டுபிடிக்கவேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நிச்சயம் உண்டு. அதன் பிரதிபலிப்பாகவே ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வது தொடர்பில் சுமந்திரன் கூறியிருக்கிறார்.

எனினும் எதிர்காலத்தில்தான் அத்தகைய முடிவை எடுக்க முடியும் என்பதைவிடுத்து, இப்போதே அது குறித்துத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. பூகோள அரசியல் நகர்வுகளுக்கு மாற்றான, வல்லரசுகளின் நலன்களுக்கு எதிரான இத்தகைய ஒரு முடிவை நோக்கிக் கூட்டமைப்பு நகர்வது மிகச்சவாலானதுதான் என்றாலும், ஐ.தே.க. மற்றும் சு.க. அல்லது மகிந்த தரப்புக்கு மாற்றான மூன்றாவது அணியை உருவாக்குவதற்கான முன்முயற்சிகளைக் கூட்டமைப்பே எடுத்தாக வேண்டும்.

# கட்டார் எனும் ‘உழைப்பாளி’



ஆர்.பிரகாஸ்

அடர்ந்த பாலைவனத்தில் அமைக்கப்பட்டிருக்கும் குளிரூட்டி வசதி செய்யப்பட்ட கொட்டகையில் இருந்து வெளியே செல்லும் மாடுகள் தங்கள் மடியிலிருந்து பால் கறப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் நவீன இயந்திரங்களை நோக்கிச் செல்கின்றன. கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு வரை கட்டாரில் ஒரு பால் பண்ணை கூடக் கிடையாது. அது முற்றிலும் சவூதி அரேபியாவையே சார்ந்திருந்தது. ஆனால், தற்போது கட்டாரில் உள்ள பாலட்னா பண்ணையில் 10 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. அதில், பெரும்பாலானவை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை.

வளைகுடா நெருக்கடியின் காரணமாக மிகச் சிறிய நாடான கட்டார் மீது அயல் நாடுகள் ஏகப்பட்ட தடைகளை அள்ளிக் குவித்தன. ஆனால் ஒரு மாதத்துக்குப் பிறகு, கட்டார் ஏர்வேஸ் வானூர்திகள் மூலம் பசுக்கள் அங்கு சென்றன. கட்டார் நாட்டின் புதிய உந்துதலில் அவை ஒரு சின்னமாகவே மாறிவிட்டன. “இதைக் கண்டிப்பாகச் செய்ய முடியாதென்று அனைவரும் கூறினார்கள்; ஆனால், நாங்கள் செய்துகாட்டியுள்ளோம். ஒரு வருடத்தில் எமக்கான தூய பாலை உற்பத்தி செய்வதில் நாம் தன்னிறைவு பெறுவோம் என்ற வாக்குறுதியை நாங்கள் அளித்திருந்தோம்” என்று அந்தப் பண்ணையை நிர்வகிக்கும் பீட்டர் என்பவர் கூறுகிறார்.

## நடந்தது என்ன?

கடந்த ஆண்டு ஜூன் 5ஆம் திகதி சவூதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், பக்ரைன் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் கட்டாருடனான தங்களது அனைத்துவிதமான உறவுகளையும், வர்த்தக மற்றும் போக்குவரத்து தொடர்புகளையும் நிறுத்திக் கொண்டன. கட்டார் தீவிரவாதத்துக்கு ஆதரவளிப்பதாகவும், பிராந்திய உறுதித்தன்மை அற்ற நிலையைத் தூண்டிவிட்டு தங்களின் எதிரியான ஈரானுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பதாகவும் கட்டாரை அந்த நாடுகள் குற்றஞ்சாட்டின. அத்துடன் ஈரானின் உளவாளியாக வளைகுடாவில் கட்டார் செயற்படுகிறது என்றும் - அவை தெரிவித்தன. கட்டார் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்ததோடு மட்டுமல்லாமல், அல்ஜசீரா தொலைக்காட்சியை மூட வேண்டும் என அந்த நாடுகள் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்பதற்கும் மறுப்புத் தெரிவித்தது.

செல்வந்த நாடான கட்டார், அதன் தனித்துவமான செல்வமான இயற்கை எரிவாயு முதல் பலவற்றைப் பயன்படுத்தி தனிப்படுத்தப்பட்ட தனது நாட்டை மீட்டெடுப்பதற்கான வழிகளைத் தேடியதோடு, அண்டை நாடுகளின் இந்தச் செயலை இறையாண்மைக்கு எதிராக விடுக்கப்பட்ட சவாலாகப் பார்த்தது.

“தங்களை விட வேறுபட்ட செயற்பாடுகளை கொண்ட நாடுகளைத் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள் என்ற பிம்பத்தை உருவாக்குவதற்கு அவர்கள் தொடங்கினர்” என்று கட்டாரின் அயலுறவுத்துறை அமைச்சரான சேக் முகமது கூறுகிறார்.

கட்டார் அரசுதான் நடத்திவரும் செய்தித் தொலைக்காட்சியான அல்ஜசீரா மீது தொடுக்கப்பட்ட இணையத் தாக்குதலே கடந்தாண்டு ஏற்பட்ட வளைகுடா நெருக்கடிக்கு அடிப்படை காரணமென்று கூறுகிறது. லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகளுக்கும், காசாவில் உள்ள ஹமாஸுக்கும் கட்டார் அரசர் அனுதாபத்தைத் தெரிவித்ததையும், அமெரிக்க அதிபராக ட்ரம்ப் நீடிக்கமாட்டார் என்று கூறியதையும் அந்தத் தொலைக்காட்சி செய்தியாக வெளியிட்டதே இதற்கு காரணமென்று கூறப்படுகிறது.

## வளைகுடா மோதலுக்கு பின்னணி எங்குள்ளது?

ஆனால், கட்டாரின் அண்டை நாடுகள் உருவாக்கிய நெருக்கடிக்கான காரணத்தை அறிவதற்கு இன்னும் பின்னோக்கிச் செல்லவேண்டுமென்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ‘இந்த விவகாரம் கடந்த 20 வருடங்களாக நீடித்து வந்தாலும், கடந்தாண்டுதான் வெளிப்பட்டது’ என்று அரேபியா பவுண்டேசன் அமைப்பின் நிறுவுநரான அலி ஹெறாபி தெரிவிக்கிறார். லிபிய முன்னாள் தலைவர் முவம்மர் கடாபி கடந்த 2011ஆம் ஆண்டு கொல்லப்பட்டபோது வெளியான ஒலிநாடாவில் கட்டாரின் அரசர் சவூதி அரசர்களுக்கெதிராக சதித்திட்டத்தை தீட்டியது வெளிப்பட்டது என்று அவர் குறிப்பிடுகிறார்.

‘மூன்று லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட கட்டார், 22 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், பக்ரைன் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளை எதிர்த்துச் செயற்பட்டது. கட்டார் தன்னைவிட பெரிய நாடு

**வளைகுடா நெருக்கடியின் காரணமாக மிகச் சிறிய நாடான கட்டார் மீது அயல் நாடுகள் ஏகப்பட்ட தடைகளை அள்ளிக் குவித்தன. ஆனால் ஒரு மாதத்துக்குப் பிறகு, கட்டார் ஏர் வேஸ் வானூர்திகள் மூலம் பசுக்கள் அங்கு சென்றன. கட்டார் நாட்டின் புதிய உந்துதலில் அவை ஒரு சின்னமாகவே மாறி விட்டன.**



களை எதிர்த்துச் செயற்பட்டதால் அதற்கேற்ற எதிர்வினையை சந்திக்க நேரிட்டது' என்கிறார் அவர்.

**ஈரானை நோக்கித் திரும்பும் பார்வை**

தனது நாட்டின் எல்லைப்பகுதிகள் முற்றுகையிடப்பட்டுள்ள கட்டார், தற்போது ஈரானின் வழியாக அதற்காக வழிகளை ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருகிறது. தனது அண்டை நாடுகளால் விதிக்கப்பட்டுள்ள தடைகளை மீறிப் பொருளாதாரத்தை காக்கும் வகையில் வளைகுடா கடற்பகுதியில் சுமார் ஏழு பில்லியன் டொலர் செலவில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்ட துறைமுகத்தின் வேலை முன்னதாகவே முடிக்கப்பட்டுள்ளது. வரும் 2022ஆம் ஆண்டு கத்தாரின் தலைநகர் டோகாவில் நடைபெறவுள்ள கால்பந்து உலகக் கிண்ணத் தொடருக்கான கட்டுமான பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இந்த துறைமுகம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தனது கடல் எல்லையையும், மிகப் பெரிய எண்ணெய் வயல்களையும் பகிர்ந்துவரும் ஈரானுடன் நெருக்கம் காட்டும் நிலைக்கு கட்டார் தள்ளப்பட்டுவருகிறது. மேலும், தற்போது ஈரானிய வான்பரப்பை நம்பித்தான் கட்டாரின் வானூர்திச் சேவைகள் உள்ளன.

"ஈரான் எங்களது அண்டை நாடாகும். எனவே, நாங்கள் அவர்களுடன் ஒத்துழைப்பையும், தகவல் தொடர்பையும் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பிராந்தியம் சார்ந்த கொள்கைகளில் நாங்கள் அவர்களிடம் கருத்து வேறுபாடு கொண்டுள்ளோம், ஆனால் இது மோதலால் தீர்க்கப்பட முடியாது" என்று அல்தானி கூறுகிறார்.

இந்த விவகாரத்தின் ஆரம்பத்தில் சவூதி தலைமையிலான தரப்புக்கு ஆதரவளித்த அமெரிக்கா, தற்போது தான் ஈரானுக்கு எதிரான புதிய தடைகளை விதிக்கவுள்ளதால் வளைகுடா பிராந்தியத்தில் ஒற்றுமையை உருவாக்குவதற்கு அழைப்புவிடுத்துள்ளது. கட்டாரில் அமெரிக்காவுக்குச் சொந்தமான மிகப் பெரிய வானூர்தி தளம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**துண்டிக்கப்பட்ட உறவுகள்**

வளைகுடா நாடுகளுக்கிடையே நிலவும் இந்தப் பிரச்சினையின் காரணமாக பிராந்தியத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கிடையேயான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகக் கூறும் டோகா நகரவாசிகள், இந்த நிலைமை விரைவில் சீரடையும் என்று நம்புகின்றனர்.

"வளைகுடா நாடுகள் திருமணத்தின் வழியாக பிணைக்கப்பட்டுள்ளன" என்று கூறுகிறார் சவூதியைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்துகொண்ட ஒருவர். ஆனால், தற்போது நிலவும் சூழ்நிலையின் காரணமாக ரியாத் நகரத்தில் வசிக்கும் தனது தாயைப் பார்க்க முடியவில்லை என்றும் அவர் வேதனைப்படுகிறார்.

'இதற்கு முன்னர் இருந்ததைவிட தற்போது சிறந்த நிலையை அடைந்துள்ளோம். மேலும், முன்பு பிற நாடுகளிடமிருந்து பெற்ற பொருள்களை நாங்களே உற்பத்தி செய்து வருகிறோம்' என்று 84 வயதாகும் சாத் அல்ஜெஸ்ஸிம் தெரிவிக்கிறார்.



**ஈரான் அமெரிக்க மோதலால் கட்டாருக்கு உள்ள சிக்கல்கள்**

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரான் அணுவாயுத சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது என்று குற்றஞ் சுமத்தி வந்த அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா, ஈரானுக்கு எதிராக கடந்த 2015ஆம் ஆண்டு மிகப்பெரிய பொருளாதாரத் தடையை விதித்தார். அமெரிக்காவுடன் பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, சீனா ஆகிய நாடுகளும் இணைந்து ஈரானுக்கு எதிரான நகர்வுகளைக் காட்டின. இதையடுத்து அணுவாயுதம் என்கிற கொள்கையில் இருந்து வெளிவரச் சம்மதம் தெரிவித்த ஈரான் மேற்குறித்த ஆறு நாடுகளுடனும் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது.

'அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தம்' என்று அழைக்கப்படும் இந்த ஒப்பந்தத்தின்படி ஈரான் அணுவாயுதச் சோதனைகளைக் கைவிட்டு, தன்னிடம் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை (அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்கான மூலம்) வெளிநாடுகளுக்கு அனுப்பினால் பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்படும். இதற்கு ஈரான் சம்மதம் தெரிவித்தது. ஈரானிடம் இருந்த செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் பெரும் பகுதியை ரஷ்யா பொறுப்பேற்றது.

ஆனால், அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றது முதல் ஈரானுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகிறார் ட்ரம்ப். ஒப்பந்தத்தை மீறி ஈரான் தொடர்ந்து அணுவாயுதச் சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது என்று குறிப்பிட்ட அவர் ஈரானுடன் அமெரிக்கா கொண்டுள்ள ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டுள்ளார். அமெரிக்காவுடனான ஒப்பந்தம் முறிந்ததை அடுத்து, மீண்டும் அணுவாயுதங்களைத் தயாரிக்க எத்தனித்து வருகிறது ஈரான். அவ்வாறு ஈரான் அணுவாயுதங்களைத் தயாரித்தால் அமெரிக்கா ஈரான் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதிக்க விழியை ஏற்படுத்திக் கொடுக்கும். ஈரானுடன் நட்புப் பாராட்டும் கட்டாருக்கு எதிராகவும் அமெரிக்கா செயற்பட ஆரம்பிக்கும். சில வேளைகளில் கட்டாருக்கும் அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதிக்க வாய்ப்புக்கள் உள்ளன. இது கட்டாருக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்துவிடும். ஆக, கடந்த வருடம் உச்சக்கட்டப் பேசுபொருளாக இருந்த வளைகுடா விவகாரம் சமீபகாலமாக மீண்டும் பெரியதொரு பேசுபொருளாக மாறியுள்ளது. அடுத்து என்னென்ன நடக்கப்போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# சுற்றுலாத்தலமாக வேண்டும் மண்ணித்தலை

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிதான் மண்ணித்தலை. வெள்ளைமணல் கடற்கரை, புராதானகால சிவன் கோவில், மணல் குன்றுகள், தென்னங்காடு என்று பல்வேறுபட்ட விடயங்களைத் தன்னகத்துக்குள் கொண்டு பரந்து விரிந்துள்ளது இது. ஆனால், இந்த வளங்கள் சரியான முறையில் சரியான திறையில் பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் எனது முறைப்பாடும், ஆதங்கமும்கூட.

வடமாகாணத்தில் பல்வேறு பகுதிகளைச் சுற்றுலாத்தலமாக தரமுயர்த்தும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது வரவேற்கத்தக்க விடயமாக இருந்தாலும் மண்ணித்தலை போன்ற இடங்கள் கண்டுகொள்ளப்படாமை பெரும் மனக்குறையே. என்ன இல்லை இங்கு. எல்லாமே உண்டு. உரிய வசதிகள், வீதிகள் என்பன சரிவர மேற்கொள்ளப்படாமையால் வடமாகாண மக்களிடம் இருந்து தனிமைப்பட்டுள்ளது மண்ணித்தலை. இவை சரியான முறையில் செய்து கொடுக்கப்பட்டால் வடக்கு மக்களை மட்டுமல்ல சுற்றுலாவிகளையும் அது கவரும். மாற்றத்தை எதிர்பார்ப்போம்.

**ஆர்.பிரகாஸ்**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

‘நாட்டுக்காக ஒன்றிணைவோம்’ வேலைத்திட்டம்

# 454.338 மில்லியன் ரூபா நிதியில் குடாநாட்டில் 449,153 பேர் பயன்

யாழ்ப்பாணம், செப்.5

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவில் உருவான ‘நாட்டுக்காக ஒன்றிணைவோம்’ தேசிய வேலைத் திட்டத்துக்காக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 454.338 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

அந்த நிதியில் 4 லட்சத்து 49ஆயிரத்து153 பேர் பயனடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவில் உருவான 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' எனும் தேசிய வேலைத் திட்டம் நாட்டின் ஆறு மாவட்டங்களில் முடிவுற்றிருந்த நிலையில் ஏழாவது மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

கடந்த வாரம் முழுவதும் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' தேசிய வேலைத்திட்ட நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குட்பட்ட 15 பிரதேச செயலகங்களிலும் இடம்பெற்றிருந்தன.

இறுதிநாள் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' தேசிய வேலைத் திட்டத்துக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் 454.338 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மொத்தமாக ஆறு லட்டத்துக்கும் அதிகமானவர்கள் வாழ்கின்றனர். அந்த வேலைத் திட்டத்தில் 4லட்சத்து 49ஆயிரத்து 153 பேர் பயனடைந்துள்ளனர் என்று மாவட்டச் செயலர் நா. வேதநாகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 5 ஆயிரத்து 896 திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மாவட்டச் செயலகத்துக்குட்பட்ட 15 பிரதேச செயலகங்களிலும் இந்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இதை விட அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன தேர்வான பின்னர், கடந்த 2015ஆம் ஆண்டு முதல் கடந்த மாதம் 23ஆம் திகதி வரை அரச தலைவர் செயலகத்தால் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 272.39 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிதியில் தயாரிக்கப்பட்ட 412 திட்டங்களில் ஒரு லட்சத்து 68 ஆயிரத்து 624 பேர் பயனடைந்துள்ளனர். கிராம சக்தித் திட்டம், ஸ்மாட் சிறிலங்கா, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டம், போதைப்பொருள் தடுப்பு தேசிய வேலைத்திட்டம், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான வலுவூட்டல் தேசிய வேலைத்திட்டம், தேசிய உணவுற்பத்தி நிகழ்ச்சித் திட்டம், தேசிய சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டம், சிறுநீரக நோய் தடுப்பு வேலைத் திட்டம், நிலைபேறான பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம் , சிறுவர்களைப்பாதுகாக்கும்தேசிய வேலைத் திட்டம், சிறுஅளவிலான விவசாய வேலைத்திட்டம், அரச தலைவருக்கு தெரிவியுங்கள் நிகழ்ச்சித் திட்டம் உள்ளடங்கலாக பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் அனைத்தும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் வேதநாயகன் தெரிவித்தார். (எ-21)



## விளையாட்டு நிகழ்வு

வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணி கோட்ட முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு ஆழியவளைஅருணோதயா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (க-70)

## வரணி திம்புருவில் வாய்க்கால் சீரமைப்பு

சாவகச்சேரி,செப்.5

தென்மராட்சி பிரதேசத்தில் வரணி கரம்பைக்குறிச்சி கமக்கார அமைப்புக்குட்பட்ட திம்புருவில் வாய்க்கால் 15 லட்சம் ரூபா செலவில்சீரமைக்கப்பட்டுள் ளது. வெள்ளம் வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் துரிசுகள் அமைக்கப்பட்டு வாய்க்கால் சீரமைக்கப்பட்டுள்ளது என்று அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

வயல்களை அண்டிய பகுதியில் அமைந்துள்ள குறித்த வாய்க்கால் நீண்ட காலமாகச் சீரமைக்கப்படவில்லை. இதனால் வாய்க்கால் ஊடாகச் செல்லும் வெள்ளம் வெளியேறி களிக்கரை வாய்க்காலுடன் இணைந்து தொண்டமானாறு கடலைச் சென்றடைந்தது. இதனால் மழை குறைவான காலத்தில் நெற்செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டனர். இது குறித்து விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக வாய்க்கால் சீரமைக்கப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதி மற்றும் அமைப்பின் உறுப்பினர்களின் பங்களிப்புடன் வாய்க்கால் சீரமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)



## கல்வளை வீதி சீரமைப்புக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்ப்பாணம், கல்வளை பாலத்தடி கொங்கிறீற் வீதிச் சீரமைப்புக்கு கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் த .சித்தார்த்தன் ஆரம்ப வேலைக்கான அடிக்கல்லை நட்டார்.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ . ஜெபநேசன், பிரதேசசபை உறுப்பினர் ச .அனுசன் ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். வீதிச் சீரமைப்புக்கு கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் த சித்தார்த்தன் 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-63)

## பெண்ணிடம் வழிப்பறி செய்தவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்ப்பாணம் நகரில் உந்துருளியில் பயணித்த இளம் பெண்ணிடமிருந்து பெறுமதி வாய்ந்த அலைபேசியுடன் கைப்பையைப் பறித்துச் சென்ற சந்தேகநபர் பொலிஸ் புலனாய்வுப் பிரி வினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கொள்ளையிடப்பட்ட அலைபேசி மற்றும் கைப்பை என்பன அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. கொள்ளையிட்ட நபர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பஸ்தியான் சந்திக்கு அருகில் பட்டப்பகலில் இளம் பெண் உந்துருளியில் பயணித்துள்ளார். அவரின் உந்துருளிக் கூடைக்குள்ளிருந்த கைப்பையை மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறிக் கொள்ளையர் ஒருவர் அபகரித்துத் தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. குருநகர் பூங்கா வீதியைச் சேர்ந்த ஒருவர் மீது சந்தேகம் கொண்ட புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கண்காணித்துள்ளனர்.

இந்த நிலையில் கொள்ளையிட்ட அலைபேசியின் “லொக்கை” எடுத்துத் தர வேண்டும் என்று அந்த நபர் யாழ்ப்பாணம் நகரில் உள்ள அலைபேசித் திருத்தகத்தில் வழங்கியுள்ளார். அந்த அலைபேசியை பொலிஸார் கைப்பற்றி ஆராய்ந்தபோது அது இளம் பெண்ணிடம் அபகரித்த அலைபேசி என்பது உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அந்த நபரைக் கைது செய்த பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

“தூள் (போதைப்பொருள்) ஒரு முள்ளு 3 ஆயிரத்து 500 ரூபாவாக விற்கப்படுகிறது. அதனை வாங்குவதற்கு பணம் கிடைக்காததால் வீதியில் சென்ற பெண்ணிடம் அலைபேசியைக் கொள்ளையிடுவதற்காக அவரது கைப்பையைப் பறித்துச் சென்றேன்” என்று சந்தேகநபர் தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மீட்கப்பட்ட அலைபேசியும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-37)

மன்னார் மாவட்டத்தில்

## சிறுபோக நெற்செய்கையில் தத்துக்கிளித் தாக்கம் அதிகம்

அறிவுரையைப் பின்பற்றாமையே காரணமென்று திணைக்கள அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்

தலைமன்னார், செப். 5

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் சிறுபோக நெற்செய்கையில் தத்துக்கிளி தாக்கத்தால் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனினும், அவர்களுக்கு வழங்கப்படும் அறிவுரையை பின்பற்றாமையே இந்த நிலை ஏற்படக் காரணம் என்று கமத்தொழில் திணைக்கள அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் பல விவசாயிகளின் நெற்செய்கையில் தத்துக்கிளி தாக்கம் ஏற்பட்டுள்ளது.

கமத்தொழில் திணைக்களத்தால் பரிந்துரை செய்யப்படும் மருந்துகளைத் தெளித்து வருகின்றபோதும் சிலருக்கு நன்மையளிக்கிறதெனினும், பலருக்கு பயனளிக்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது பற்றிக் கமத்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டபோது தெரிவித்ததாவது:

இந்த அழிவுகள் பற்றி இதுவரைக்கும் எந்தவித கமநல சேவைகள் நிலையங்களிலோ அல்லது கமநல சேவைகள் மன்னார் திணைக்களத்திலோ அல்லது கமநல காப்புறுதித் திணைக்களத்திலோ முறைப்பாடு செய்யப்படவில்லை. ஒரு ஏக்கருக்கு இரண்டு புசல் நெல் ஐதாக விதைப்புச் செய்யும்போது தத்துக்கிளித் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று அவர்க ளுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டும் அவர்கள் ஒரு ஏக்கருக்கு மூன்று புசல் நெல் விதைப்புச் செய்துள்ளனர். அதனால் செறிவாக உள்ள நெற்செய்கையில் தத்துக்கிளி தாக்கம் ஏற்பட்டு வருகின் றது. சிறுபோகம் செய்யும் நெற்செய்கையாளர்கள் இது சம்பந்தமான விவசாயக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய விவசாயத்தை மேற்கொள்வதுடன், ஒரு ஏக்கருக்கு 200 ரூபா செலுத்திக் காப்புறுதி செய்தார்களென்றால், பயிர்கள் பாதிக்கப்படும்போது இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்தனர். (த-60,213)

# சிறப்புத் தேவையுடன் 1,237 பேர் 455 பேருக்கே கொடுப்பனவுகள்

**யாழ்ப்பாணம், செப். 5**

**மன்னார் மாவட்டத்தில் சிறப்புத் தேவையுடையோராக ஆயிரத்து 237 பேர் உள்ளனரெனினும், 385 பேருக்கு மட்டுமே கொடுப்பனவு வழங்க அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்தனர்.**

சிறப்புத் தேவையுடையோருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பதற்காக மாவட்டம்தோறும் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை விவரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கான நேர்முகத்தேர்வுகள் தற்போது மாவட்டம்தோறும் இடம்பெற்று வருகின்றன.

இந்தவகையில் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேசத்தில் 432 சிறப்புத் தேவையுடையோர் உள்ளனர். 102 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 502 பேர் உள்ள நிலையில், 168 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மடு பிரதேச செயலர் பிரிவில் 52 பேர் உள்ள நிலையில் 31 பேருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. முசலி பிரதேச செயலர் பிரிவில் 149 பேர் உள்ள நிலையில் 83 பேருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 102 பேர் உள்ள நிலையில் 71 கொடுப்பனவுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)



## மாற்றுத்திறனாளிகளுக்கு பொன்மணி நிதியத்தால் உதவி

முல்லைத்தீவு, செப்.5

போரால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்குப் பொன்மணி அறக்கட்டளை நிதியத்தால் கடந்த மாதம் 31 ஆம் திகதி உதவிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு உடையார்கட்டைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலியும், இருக்கை மலசல கூடமும் வழங்கப்பட்டன.

நிதியத்தின் நிறுவுநர் மற்றும் தலைவர், உறுப்பினர்கள் உதவிகளை வழங்கி வைத்தனர். (க-222)



## பொதுக் கூட்டம்

முல்லைத்தீவு,செப். 5

முல்லைத்தீவு மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் மல்லாவி பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் சி.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத் தலைவர் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தின் செயலர் மா.ஜெகன், யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கச் செயலர் இரா. ஜெயக்குமார், மாருதி அறக்கட்டளை நிதியத் தலைவர் அ.கணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் சி.சண்முகநாதன். உப தலைவர் சுதாகேதன், செயலர் திருமதி இராசலட்சுமி [illegible], உதவிச் செயலர் க.குலசிங்கம், பொருளாளர் ஞா.றொபின் தயாளன் இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்கள் 10 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-9)

## ஈருருளி கையளிப்பு



வவுனியா,செப்.5

வசதியற்ற குடும்பத்தில் உள்ள மாணவி ஒருவரின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கு முகமாக அவருக்கு ஈருருளி வழங்கி வைக்கப்பட்டது. வவுனியா பறநட்டங்கல் பகுதியைச் சேர்ந்த மாணவிக்கே இந்த உதவி வழங்கப்பட்டது. புலம் பெயர்ந்து கனடா ரோறண்டோவில் வசித்து வரும் தாயக உறவான பிரேமகரன் சிவப்பிரகாசம் இதற்கான நிதியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமார் ஆகியோர் இணைந்து நேற்று இந்த உதவியை வழங்கி வைத்தனர். (ஐ)

## வீதி விபத்தில் பெண் காயம்

சாவகச்சேரி,செப்.5

வீதி வளைவில் உந்துருளி சில்லு சறுக்கியதில் வீதியில் வீழ்ந்த குடும்பப் பெண் காயமடைந்தார். இந்த விபத்து கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி விநாசித்தம்பி வீதியில் இடம்பெற்றது.

காயமடைந்த 34 வயதுக் குடும்பப் பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)



## 15 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வவுனியா,செப்.5

வவுனியாவில் வசதியற்ற வறுமையில் வசித்துவரும் மாணவர்கள் மற்றும் தாய் தந்தையை இழந்த மாணவர்கள் 15 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. லண்டனில் வசித்து வரும் ஈழத்து உறவான கஜானனின் நிதியிலிருந்து, தமிழ் விருட்சம் அமைப்பின் ஊடாக கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (க)

## வவுனியாவில் ஒரே இரவில் 3 உந்துருளிகள் திருடப்பட்டன

வவுனியா,செப். 5

வவுனியாவில் ஒரே இரவில் மூன்று உந்துருளிகள் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

சம்பவம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது. வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் இரண்டு உந்துருளிகளும், சமணங்குளம் பகுதியில் ஒரு உந்துருளியும் சிதம்பரநகர் பகுதியில் ஒரு ஈருருளியும் திருடப் பட்டுள்ளன.

சிதம்பரபுரம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இருவேறு வீடுகளில் நிறுத்தப்பட்டிருந்த உந்துருளிகளைத் திருடிய நபர்கள் அவற்றுக்குத் திறப்புகள் இல்லாத நிலையில் அவற்றைச் சேதப்படுத்தி குளத்து வெளியில் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

சமணங்குளம் பகுதியில் ஆசிரியை ஒருவரின் உந்துருளி திறப்புடன் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

விசாரணை நடக்கின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-110)

## நீதிமன்ற உத்தரவில் மூடப்பட்ட உணவகங்களை திறக்க அனுமதி

யாழ்ப்பாணம், செப்.5

வலி.தென்மேற்குப் மானிப்பாய் பிரதேசத்தில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக மூடப்பட்ட இரண்டு உணவகங்களையும் மீண்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் வீதியில் உள்ள இரண்டு உணவங்களும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத நிலையில், உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் கடந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சுகாதாரப் பரிசோதகரால் 4 குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டன. வழக்கை விசாரணை செய்த நீதிவான் இரண்டு உணவகங்களையும் மூடுமாறு உத்தரவிட்டு, மேலதிக விசாரணைக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உரிமையாளர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, இருவருக்கும் 15 ஆயிரம் ரூபா, 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், சுகாதாரப் பரிசோதகரால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான், இரண்டு கடைகளையும் மீண்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கினார்.

இதேவேளை, சண்டிலிப்பாயில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து 21 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-115)



## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.5

தெல்லிப்பழை கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தால் கிராம சக்தி வேலைத்திட்டத்தின் கீழ் பொது நூலகமும், வகுப்பறைக் கட்டடத்துக்குமான அடிக்கல் நடும் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாகப் பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம அலுவலர் உட்பட நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர். (ஐ-222)

# சோதிடம், சீதனம், சாதிப்பாகுபாடே பெண்களின் திருமணத்துக்குத் தடை

## அதை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றார் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணத்தில் ஏராளமான பெண்களுக்கு திருமணமாகாது, அவர்கள் தனிமையில், குடும்பத் தலைவியாக இருப்பதற்கு காரணம் சோதிடம், சீதனம், சாதிப் பாகுபாடுதான் என்றும், அவற்றை அடியோடு ஒழித்துக் கட்டினால்தான் அவர்களுடைய வாழ்க்கையும் சிறக்கும் என்றும் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. கணவனை இழந்த பெண்கள், விவாகரத்துப் பெற்று அல்லது குடும்பப் பிரிவு காரணமாக பெண் தலைமைத்துவத்தைக் கொண்டவர்கள், கணவன் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் வாழ்பவர்கள், திருமணமாகாது தனிமையில் வாழ்பவர்கள் என்ற அடிப்படைகளில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கெண்டு 41 ஆயிரத்து நான்கு குடும்பங்கள் உள்ளன என்று மாவட்டச் செயலக கணக்கெடுப்பு கூறுகின்றது. அதில் கணவனை இழந்த நிலையில் 32 ஆயிரத்து 273 குடும்பங்களும், குடும்பப் பிரிவு காரணமாக பெண் தலைமைத்துத்தைக் கொண்ட 4 ஆயிரத்து 367 குடும்பங்களும், கணவன் காணமல் ஆக்கப்பட்ட நிலையில் 486 குடும்பங்களும், திருமணமாகாததால் பெண் தலைமைத்துவத்தைக் கொண்டு 2 ஆயிரத்து 179 குடும்பங்களும் மற்றும் வேறு வழிகளில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட ஆயிரத்து 699 குடும்பங்களும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் திருமணமாகாது, அல்லது திருமணம் செய்து கொள்ளாது தனிமையில் உள்ள பெண் தலைமைத்துவத்தைக் கொண்டவர்கள் தொடர்பில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரனிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பெண்களுக்கு தகுந்த வயதில் திருமணமாகாதமைக்கு முக்கிய காரணம் சோதிடம் என்றுதான் கூறுவேன். பொருத்தங்களைப் பார்த்து அந்தப் பாவம் கூடிவிட்டது, இந்தப் பாவம் குறைந்து விட்டது, குற்றம் இருக்கு, இல்லை என்றெல்லாம் கூறப்படுகின்றன. எவராவது இரண்டு சோதிடர்கள் ஒரே மாதிரி சோதிடத்தைப் பார்க்க கூற முடியுமா? இல்லை. அடுத்தது சீதனம், படிப்புகளுக்கு ஏற்றமாதிரி அதைக் கட்டமைச்சுவைச்சிருக்கிறாங்கள். பொறியியலாளர் என்றால் இவ்வளவு, மருத்துவர் என்றால் இவ்வளவு என்று வகுத்து வைத்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் மூல காரணம் இந்த தரகர்கள்தான். கூடிய சீதனத்தில் பொருத்தினா தரகர்களுக்கு இவ்வளவு என்று சொல்லுகிறார்கள். இது சட்டவிரோதமானது. திருமணத்தை முடித்து வைத்தார்கள் என்று அவர்களுக்கு உதவிகளைச் செய்யலாம், ஆனால் இப்போது அப்படி அல்ல, இவ்வளவு வை என்று கேட்கிறார்கள். அடுத்து சாதி, சாதிப்பாகுபாடு யாழ்ப்பாணத்தில் இன்றைக்கு அல்ல அப்போதிருந்து இருந்து வருகிறது. இந்தக் காரணங்களால் பெண்கள் தங்களுடைய வாழ்க்கையை இழந்து கஷ்டப்படுகிறார்கள். இவற்றை அடியோடு ஒழித்தால் அவர்களுடைய வாழ்க்கை சிறக்கும் - என்றார். (எ-21)

## வரி விலக்கு நிலையங்கள் தொடர்பில் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 5

பன்னாட்டு வானூர்தி நிலையமாக அபிவிருத்தியடைந்துவரும் பலாலி வானூர்தி நிலையம் அடுத்த மாதம் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்படும் நிலையில் அங்கு வரிவிலக்கு வர்த்தக நிலையங்களை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. வானூர்திப் போக்குவரத்து துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளார்.


யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது. பன்னாட்டு வானூர்தி நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு, அதற்கான அபிவிருத்தி வேலைகள் இடம்பெற்று வரும் பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து எதிர்வரும் மாதமளவில் வானூர்தி சேவைகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பன்னாட்டு வானூர்தி நிலையங்களில் காணப்படும் வலிவிலக்கு வர்த்தக நிலையங்களைப் போன்று பலாலி வானூர்தி நிலையத்தி லும் அமைப்பது தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. அதில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-21)

## 5,000 ரூபா கொடுப்பனவுக்குரிய பயனாளிகளுக்கு நேர்முகத் தெரிவு

மன்னார், செப்.5

6 ஆயிரம் ரூபாவுக்கு குறைந்தமாதாந்தவருமானம்மாற்றாற்றல்கொண்டநபர்களுக்கு, மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் தெரிவுக்கான நேர்முகத் தெரிவு மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. மன்னார் மாவட்டச் செயலகத்தில், மன்னார் பிரதேச செயலர் கே. சிவசம்பு தலைமையில் நேர்முகத் தெரிவு இடம்பெற்றது. 168 பயனாளிகளுக்கான தெரிவில், சுமார் 300 பேர் நேர்முகத் தெரிவில் பங்கேற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பகைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (க-60)





## முஸ்லிம் வித்திக்கு அடிக்கல் நடுகை

மன்னார், செப். 5

மன்னார் காக்கையன்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 20 மில்லியன் ரூபா நிதியில் இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

அதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அமைச்சர் ரிசாட் பதியுதீன் நிதி ஒதுக்கியுள்ளார்.

பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரும் அமைச்சரின் பிரத்தியேகச் செயலருமான றிப்கான் பதியுதீன் கலந்து கொண்டார். மாந்தை மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் சந்தியோகு, மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் என். முஜாஹிர் அமைச்சின் மன்னார் மாவட்ட திட்ட இணைப்பாளர் முஜிபுர் ரகுமான், மாந்தை பிரதேச சபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர். (த-56)

## சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் கருத்தமர்வுகள் நடைபெற்றன

கொடிகாமம், செப். 5

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சாவகச்சேரி நகர் மற்றும் நுணாவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில், போதைதடுப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கடந்தவாரம் நடைபெற்றன.

காலை 9 தொடக்கம் மதியம் 12 மணிவரை நுணாவில் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி அலுவலர் பணியகத்தில் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் திருமதி சசீலா ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.



சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவில் பிற்பகல் 3 மணியிலிருந்து மாலை 5 மணிவரையும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் திருமதி காயத்திரி தலைமையில் சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள பொது நோக்கு மண்டபத்தில் கருத்தமர்வு நடைபெற்றது.

இவற்றில் வளவாளராக சாவகச்சேரி நீதிமன்ற சமுதாயஞ் சார் சீர்திருத்த அபிவிருத்தி அலுவலர் க. ரஜனிகாந்தன் கலந்து சிறப்பித்தார். நிகழ்வுகள் நடைபெற்ற இடங்களில் அந்தந்தப் பிரிவுக்குரிய கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமூர்த்தி அலுவலர், கிராமமக்கள், சமூகப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். (த-159)

# நிரந்தர வீட்டு வசதிகள் இன்றி குடாவில் 28,970 குடும்பங்கள்

*யாழ்ப்பாணம், செப்.5*

யாழ்ப்பாண மாட்டடத்தில் நிரந்த வீடுகளின்றித் தற்போதும் 28 ஆயிரத்து 970 குடும்பங்கள் வாழ்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. உள்நாட்டுப்போருக்குப் பின்னர் இடம்பெயர்ந்து மீள்குடி யமர்த்தப்பட்ட, மற்றும் பாதிப்புக்குள்ளான நிலையில் உள்ள குடும்பங்களே இவ்வாறு நிரந்தர வீடுகளின்றி தற்காலிக வீடுகளிலும், குடிசைகளிலும் வாழ்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் இந்தியன் நிதியுதவி, உலக வங்கி போன்றவற்றால் கடந்த காலங்களில்யாழ்ப்பாணமாவட்டத்தில் வீடுகளற்ற மக்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்ட போதும் தற்போதும் நிரந்தர வீடுகளின்றி ஏராளமான குடும்பங்கள் அவதியுறுகின்றனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்குக அடிப்படைத் தேவையாக உள்ள பிரச்சினை தொடர்பான அறிக்கையை யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் தயாரித்துள்ளது. கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற “நாட்டுக்காக ஒன்றிணைவோம்” தேசியநிகழ்ச்சியில்கலந்து கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சுக்களின் செயலர்களுக்கு இந்த விவரங்களடங்கிய குறிப்பு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில்நிரந்தரவீடுகளை அமைப்பதற்குரிய நிலங்களின்றி 12 ஆயிரத்து 804 குடும்பங்கள் வாழ்வதால் அவர்களுக்கு வீடுகளை அமைக்க நிலங்கள் தேவை என்றும், 4 ஆயிரத்து 99 குடும்பங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணமாவட்டத்தில் 9 ஆயிரத்து 123 குடி தண்ணீர்க் கிணறுகளின் தேவையுள்ளது என்றும்-சுகாதர வசதிகளின் தேவையுள்ளதுஎன்றும்-அந்தக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலமாகயாழ்ப்பாணமாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளினூடாகவும் சேகரிக்ககப்பட்ட தகவல்களைக் கொண்டே அந்தக் குறிப்பு தயாரிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர்பிரிவுகளிலும்உள்ளமக்களின் தேவைகளை அந்தச் செயலங்களுக்குட்பட்டகிராமஅலுவர்களூடாக நேரடியாக மக்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் அவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (எ-21)

## நியமனக் கடிதங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,செப்.5

வடக்கு மாகாண சுகாதாரதிணைக்களத்தின் கீழ்சுகாதாரதொண்டர் அல்லது வெளிவாரி அடிப்படையில்கடமையாற்றியவர்கள்சுகாதாரப் பணி உதவியாளர் இடைநிலைத் தரத்துக்குநியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு ஆளுநர் தலைமையில் வழங்கப்படவுள்ளது. (ஐ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவை செய்த சாரணர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நல்லை ஆதீன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட சாரணர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நிகழ்வில் விருந்தினர்களில் ஒருவராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கலந்து சிறப்பித்ததுடன், சாரணர்களுக்கான சான்றிதழ் களையும்வழங்கிவைத்தார் என்று முதல்வரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## தாக்குதலில் காயமடைந்த மூவரில் ஒருவருக்கு மேலதிக சிகிச்சை

சாவகச்சேரி, செப்.5

தாக்குதலுக்கு இலக்கானநிலையில்சாவகச்சேரிஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவரில் ஒருவர் மேலதிகசிகிச்சைக்காகயாழ்ப்பாணம்போதனாமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்ததாக்குதல்சம்பவம் சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 30 மற்றும் 17 வயது நபர்களும், சரசாலை வடக்கைச் சேர்ந்த 42 வயது நபரும் காயமடைந்தனர்.

காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சரசாலை வடக்கைச் சேர்ந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஜ-9)

# 4,286 பேருக்கு ஆசிரிய நியமனம் அலரி மாளிகையில் வழங்கப்படும்

கொழும்பு, செப். 5

தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமாகற்கையைமுழுமைசெய்த 4ஆயிரத்து 286 பேருக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

அலரிமாளிகையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நியமனம் வழங்கப்படும். 19 தேசியகல்வியியற்கல்லூரிகளில்தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 31 கற்கை நெறிகளைப்பயின்றவர்கள்தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் என்று அடையாளப்படுத்தப்படுவர். இவர்களுள் 2ஆயிரத்து 340 பேர் சிங்கள மொழியிலும், ஆயிரத்து 300 பேர் தமிழ் மொழியிலும், 646 பேர் ஆங்கில மொழியிலும் 3 வருடங்கள் காலம் கற்கை நெறியைப் பயின்ற பின்னர், ஒரு வருடம் ஆசிரியர் தொழிற்பயிற்சியை முழுமை செய்துள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை முழுமை செய்யும் நோக்கில் இவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சர், சட்டத்தரணி அகிலவிராஜ் காரியவசம் பணித்துள்ளார். அலரிமாளிகையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர், கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இது தொடர்பான மேலதிகவிவரங்களைகல்விஅமைச்சின் இணையத்தளத்தில்பார்க்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

## பரிசளிப்பு நிகழ்வு

கொடிகாமம், செப். 5

யாழ்ப்பாணம் கைதடி குருசாமி வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும்11ஆம்திகதிபுதன் கிழமை பாடசாலை முதன்மைமண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில்நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாகதென்மராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி லலிதா லிங்கேஸ்வரன், பரிசளிப்பு விழா நிதிய உறுப்பினரும், யாழ்ப்பாண மாவட்டச்செயலகதந்திர உபாயநகரஅபிவிருத்தி திட்டபிரதித்திட்டப்பணிப்பாளருமான சி.மயூரன் ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர்.

மாணவர்களுக்கான பரிசில்களை உதயன குழுமத்தின் பணிப்பாளர் திருமதி யசோதை சரவணபவன் வழங்கி வைக்கவுள்ளார். (ஜ-159)

# அரசை நடத்த முடியாமைக்குக் காரணம் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டுள்ளமைதான்

*மாகாண முன்னாள் உறுப்பினர் லிங்கநாதன் கூறுகிறார்*

வவுனியா, செப். 5

இந்த அரசை சீராக நடத்தமுடியாமைக்குக்காரணம்,19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாக அரசதலைவர் மற்றும் நாடாளுமன்றுக்கு இருந்த அதிகாரங்கள் பிரிக்கப்பட்டமைதான் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கதாதன் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல் நடக்கவேண்டும்என்பதுஜனநாயக உரிமை. அது நடக்காமல் இருப்பதற்கு தற்போது ஆட்சியில் இருக்கும் இழுபறி அரசு முக்கிய பங்கு வகிக்கின்றது. அதிலும்19ஆவதுதிருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளைத் தொகுதி வாரி முறையில் நடத்து வதாகத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இதற்காக எல்லை வரம்பு குழு அமைக்கப்பட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டநிலையில் அந்தக் குழு முழுமையான அறிக்கையை இன்னமும் வழங்கவில்லை.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜேர்மன் நாட்டின் நடைமுறையைப் பின்பற்றி, கலப்புத் தேர்தல்முறைஒன்றைஉருவாக்கி எப்படிகையைச்சுட்டுக்கொண்டார் களோ அதுபோலவே எல்லைவரம்புவிடயத்திலும் திருப்திகரமற்ற நிலை நீடித்துவரு கின்றது. எனவே அது நிச்சயமாக மாற்றப்பட வேண்டும்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலின்படிப்பினைகளைக் கருத்திற்கொண்டு பெரும்பாலானபெரியகட்சிகள் தொகுதி வாரித் தேர்தல் முறையை வேண்டாம் என்றும் பழைய முறையிலேயே தேர்தலை நடத்துமாறும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

எனவேபழைய்முறையிலான தேர்தல் மாற்றப்படவேண்டுமாக இருந்தால் பெரும்பான்மையுடன் நாடாளுமன்றில் சட்டத்திருத்தம்மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்தவிடயங்களை அறியாமல் அரசதலைவர் உயர்நீதி மன்றம்வரைக்கும் சென்றது ஏன்என்பதுவிளங்கவில்லை. மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க மற்றும் மகிந்த ராஜபக்ச உட்பட சில கட்சித் தலைவர்கள் நினைத்தால் இது சின்ன விடயம் - என்றார். (து-110)

# புதிய அரசமைப்புத் தோல்வியடைய மைத்திரி, ரணில், மகிந்தவே பொறுப்பு

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கூறுகிறார்



வவுனியா, செப். 5

புதிய அரசமைப்புத் தோல்வி கண்டமைக்கு அரசதலைவர், தலைமைஅமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரே காரணமாகின்றார்கள். இவர்களில் ஒருவரைப் பிணையெடுத்து மற்றவரைமுன்னிறுத்தவே முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கூட்டமைப்புக் கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளைத் தீர்மானத்தின்போது கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் 70நிமிடங்கள் எழுந்து நின்று உரையாற்றியிருந்தார். அவருடைய கருத்துக்களை ஆட்சியிலுள்ள எந்தவொருஉறுப்பினராவது பொருட்படுத்தினாரா?. இதனைநாடாளுமன்றஉறுப்பினர் சேனாதிராசா ஏன்மறந்து விட்டார்? என்றும் சிவசக்தி ஆனந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா, புதிய அரசமைப்புச் செயற்பாடுகளை மைத்திரி,மகிந்த கூட்டணியே தோற்கடித்தது என்றும் - தேர்தலுக்காகத் தற்போது தமிழ் மக்களின்ஆதரவைத் திரட்ட விளைகின்றனர் என்றும் - குற்றஞ்சாட்டியிருந்தார். எனினும், தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரம சிங்க குறித்து எந்தவிதமான கருத்துக்களையும்முன்வைத்திருக்கவில்லை.

ரணில் தரப்பை ஆட்சிப்பீடமேற்றியது தொடக்கம் தற்போது முண்டுகொடுப்பது வரையில் அனைத்துச் செயற்பாடுகளையும் தமிழ் மக்களின் எந்தவொருஅனுமதியையும் பெறாத நிலையிலேயே கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியினர் தமிழ்த் தேசிய கொள்கையிலிருந்து விலகி, தமிழ்த் தேசிய நீக்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவிடம் சரணாகதி அடைந்து விட்டார்கள்.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்டுபாடுகளைக் கைவிட்டு-முற்றுமுழுதாகவேஅபிவிருத்தி என்றபோர்வைக்குள் அரசின் ஒதுக்கீடுகளை வைத்து தாமே செய்ததாகஉரிமைகோரிக்கொண்டு மக்களை முட்டாளாக்கும் செயற்பாடுகளைச் செவ்வனே செய்யஆரம்பித்துள்ளனர்.

தற்போது தேர்தலுக்கான சாத்தியப்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் புதிய அரசமைப்புப் பணிகளை மைத்திரி தோற்கடித்துவிட்டார். எம்மை ஏமாற்றிவிட்டார்கள் என்றெல்லாம்கூட்டமைப்பினர் கதைகூற ஆரம்பித்துவிட்டனர்.

கொள்கைகளைக் கைவிட்டு நிபந்தனையற்ற விட்டுக்கொடுப்புக்களைச் செய்து, ஆதரவு வழங்கிஆட்சியாளர்களுடன் சரணாகதியடையும்போதே இத்தகைய இராஜதந்திரம் தோல்வியைச்சந்திக்கும் என்று வலியுறுத்தினோம். ஆனால், எம்மை எதிராளிகளாக மாற்றிவிட்டுஅதேபாதையில் கூட்டமைப்பு பயணித்தது.

சிங்கள பேரினவாத தலைவர்கள் தமிழர்களை 70 வருடங்களாக ஏமாற்றுகின்றனர் என்பது புதிய விடயமல்ல, எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருந்தும் அதனைப் பயன்படுத்தாது ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதுதான் யதார்த்தம்.

சொற்ப விடயங்களை உள்வாங்கி ஒற்றையாட்சிக்குள் சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதைக் கட்டமைப்பாகக் கொண்டிருந்த புதிய அரசமைப்பை யார் நடைமுறைப்படுத்துவது?. அதற்கான பெயரை யார் பொறுப்பேற்பது என்பதில் ஏற்பட்டபோட்டியால் தான் மைத்திரி, மகிந்த, ரணில் அதனை நிறைவேற்ற முன்வரவில்லை.

தென்னிலங்கையின் ஒருதரப்புடன் தேனிலவு கொண்டாடிக் கொண்டும் மற்றைய தரப்பை விமர்சித்துக்கொண்டும் தமிழ் மக்கள் மத்தியில் தமக்கான அனுதாப வாக்குகளைப் பெறவிளைவதும் மூன்றாம் நிலை அரசியல் செயற்பாடே. இதனைப் பகிரங்கமாகக் கூறாது ஒருதரப்பினருக்கு ஆதரவளித்து அவர்களுக்குப் பல்லக்குத்தூக்க விளைவது சுயலாப அரசியல் என்பதோடு, ஓரினத்தின் விடுதலைப் பயணத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்குச் சமமானது. என்றுள்ளது. (த-110)



## புதிய தொடருந்து பாதை

கொழும்பு, செப். 5

கட்டுநாயக்க பன்னாட்டு நிலையத்தில் இருந்து வியாங்கொடை வரையில் புதிய தொடருந்துப் பாதையொன்றை நிர்மாணிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை பிரதேச செயலர் அலுவலகத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர், கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடையும் வெளிநாட்டுசுற்றுலாப் பயணிகள் கொழும்பு நகருக்கு வராமல், தொடருந்தில் வியாங்கொடை ஊடாக கண்டி, பதுளை, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்குசெல்லமுடியும்.

இவ்வாறான தொடருந்துப் பாதையொன்றை அமைக்கும்சாத்தியங்கள் குறித்துஆராய்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## நியமனத்தைப் பரிசீலிக்குமாறு சுகாதாரத் தொண்டர் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 5

சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனத்தைப் மீள் பரிசீலனை செய்யுமாறுகோரி பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபை முன்பாக வாசல் கதவுகளை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். புதன்கிழமைகளில் கைதடியிலுள்ள மாகாண சபை வளாகத்திலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் மக்கள் சந்திப்பு இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுகாதாரத் தொண்டர்களுக்கான நியமனங்கள் ஓரிரு தினங்களில் வழங்கப்படவுள்ள நிலையில், கடந்த காலங்களில் சுகாதார தொண்டர்களாகக் கடமையாற்றிய நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படாத தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வடக்குமாகாண சபை இருந்த போது, முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்திடம் 900 பேர் இருப்பதாக அறிக்கைகள் கொடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 3 ஆயிரம் சுகாதாரத் தொண்டர்கள், நேர்முகத் தேர்வில் தோற்றியுள்ளனர் என்றும், அந்த எண்ணிக்கை எப்படி அதிகரித்தது? 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுகின்றோம்.

முன்னாள்ஆளுநர் ரெஜினோல்ட் குரே நியமனம் வழங்குவதாக வாக்குறுதியளித்த நிலையில், இடமாற்றம் பெற்றுச் சென்றார். நியமனம் வழங்க தற்போதைய ஆளுநர் வாக்குறுதி அளித்திருந்தார் என்றும் அவர்கள் போ ராட்டத்தில் தெரிவித்தனர். (த-106)

## வடக்கு மாகாண சுகாதாரத் துறையில் தொண்டர்கள் நியமனத்தில் முறைகேடா?

### ஆளுநரின் கவனத்துக்கு இது செல்கிறது

யாழ்ப்பாணம், செப். 5

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று தொண்டர்கள் பலர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர் என்றும் அதனால் இந்த விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிய 435 பேரை நிரந்தரமாக்கும் நோக்கில் நீண்டகாலமாக விடுத்த கோரிக்கையின் பேரில் பல முயற்சியின் பயனாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு இவர்களுக்கான நேர்முகத் தேர்வை ஏற்பாடு செய்திருந்தது.

இதற்காகப் பொதுச்சேவைகள் ஆணைக்குழு, திறைசேரி ஆகியவற்றின் அனுமதியும் வடக்கு மாகாண தலைமைச் செயலகத்தால்பெற்று வழங்கப்பட்டது. இந்த நிலையில் இவர்களுக்கான நேர்முகத் தேர்வுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஆனால் நேர்முகத் தேர்வுக்கு சுமார் ஆயிரத்து 200க்கும் மேற்பட்டோர் தோற்றியிருந்தனர்.

எனினும், 255 பேருக்கு மட்டுமே நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. பல வருடங்களாகப் பணியில் இருந்தார்கள் என்று உறுதிப்படுத்தப்பட்ட 435 பேரில் சுமார் 100 பேர் மட்டுமே நியமனத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், நியமனம் கிடைக்காதோர் எவர் என்று தெரியாத சூழல் காணப்படுகின்றது என்று நியமனம் கிடைக்காத தொண்டர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவர்கள் தத்தமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரிடமும் முறையிட்டிருந்தனர். குறித்த விடயத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் கவனத்துக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (த-105)

## வர்த்தகர்களுக்கு ரூ 9,000 தண்டம்

சாவகச்சேரி,செப்.5

சட்ட விதிகளை மீறிய மூன்று வர்த்தகர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி பொருள்களை விற்பனை செய்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 3 வர்த்தகர்களுக்கே சாவகச்சேரி நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (ஐ-9)

### அரச தலைவரிடம் முறையிட்ட பின்னர்

# பருத்தித்துறைக்குட்பட்ட பகுதியில் கடலட்டைகள் பிடிப்பதற்குத் தடை!

### பணிப்பாளர் நாயகம் பணிப்பு

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணம், பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியின் கடற்பிரதேச எல்லைக்குள் கடல் அட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவதை முற்றாகத் தடுக்குமாறு கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், மாவட்ட நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் அனுமதி பெற்று கடலட்டை பிடிக்கும் தொழிலாளர்கள் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்பகுதிக்குள் அத்துமீறி உள் நுழைந்து கடலஅட்டை பிடிப்பதால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்று - 3 வருடங்களாக உள்ளூர் மீனவர்கள் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தனர். வடமராட்சி கிழக்கில் தங்கியிருந்து கடல் அட்டை பிடித்தவர்களும் அனுமதியின்றித் தொழில் புரிந்த நிலையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

இருப்பினும் பிறமாவட்ட மீனவர்கள் முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறைக்கு ஊடுருவிச் சென்று கடலட்டை பிடிப்பது தொடர்ந்த வண்ணமுள்ளது.

இந்த விடயத்தை வடமராட்சி மீனவர் சமாசம் அரசதலைவரின் கவனத்துக்குக் கொண்டுசென்றிருந்தது. இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் கடல் அட்டை பிடிப்பதைத் தடுக்குமாறு பணிப்பாளர் நாயகம் மாவட்டப் பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்தில் அறிவித்துள்ளார். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் அதை உறுதிப்படுத்தினார். (த-105)

## 2016 தொடக்கம் ஏப்ரல்வரை ஜமாத் பற்றி 97 அறிக்கைகள்

### சமர்ப்பித்தும் நடவடிக்கையில்லை என்று உயர்நீதிமன்றில் சுட்டிக்காட்டு

2016ஆம்ஆண்டுதொடக்கம் கடந்த ஏப்ரல் 21 வரையான காலப் பகுதியில் தேசிய தௌஹித் ஜமாத் மற்றும் அதன் தலைவர் ஸஹ்ரான் ஹாசிம் தொடர்பாக அரச புலனாய்வுப் பிரிவு 97 அறிக்கைகளை பொலிஸ்மா அதிபருக்கும், பாதுகாப்புச் செயலருக்கும் அனுப்பியிருந்ததாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன உயர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 21 தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததன் மூலமாக அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் கூறி, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உள்ளிட்டோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்பாக நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதியரசர்களான ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிகார, சிசிர டி ஆப்ரூ, பிரியந்த ஜயவர்தன, எல்.டி.பி.தெஹிதெனிய மற்றும் மார்த்து பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த மனுக்களை விசாரித்து வருகிறது.

மனுவைத் தாக்கல் செய்துள்ள இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன, மனுவில் பிரதிவாதத் தரப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள அரச புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி, மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, உயர் நீதிமன்றில் வழங்கியுள்ள சத்தியக் கடிதத்தில் இது பற்றிச் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலனாய்வு அறிக்கைகள் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட தரப்பினர், தாக்குதலைத் தடுக்க எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (த)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, செப். 5

சாவகச்சேரி, தனன்களப்பு வீதியில் டிப்பர் வாகனமும் உந்துருளியும் மோதியதில், உந்துருளியில் பயணித்த இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழி,கேரதீவு வீதியில் தனன்களப்பில் நேற்று முன்தினம் மாலை விபத்து இடம்பெற்றுள்ளது.

மந்துவிலைச் சேர்ந்த 27 மற்றும் 31 வயதுகளையுடையவர்களே காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-9)

## சிறுபான்மையினரின் பிரச்சினையை துணிந்து தீர்ப்பவருக்கே ஆதரவு

### ஆறுமுகம் தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, செப். 5

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் துணிகரமாகத் தீர்க்க கூடிய அதிகாரம் படைத்த வேட்பாளருக்கே அரச தலைவர் தேர்தலில் ஆதரவு வழங்கப்படும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சீ. எல். எப். கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச தலைவர் தேர்தல் குறித்து இன்னும் திகதிகள் அறிவிக்கப்படவில்லை. ஆகையால் அதற்கு முன்னர் நாம் அவசரபட தேவையில்லை. திகதி மற்றும் வேட்பு மனுத் தாக்கல் செய்த பின் இது குறித்து முடிவு எடுப்போம்.

நாங்கள் 32 அம்ச கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம். எல்லா கட்சிகளிலும் அரச தலைவர் வேட்பாளர்கள் அறிமுகப்படுத்தபட்ட பின்பு எங்களுடைய 32 அம்ச கோரிக்கைகளையும் அவர்களுடைய கவனத்துக்கு கொண்டு செல்வோம்.

அந்த கோரிக்கைகளை யார் ஏற்கின்றார்களோ அவர்களுக்கு நாம் ஆதரவை வழங்குவோம் - என்றார். (ஒ.5)

## ஞான வைரவருக்கு குடமுழுக்கு

சாவகச்சேரி, செப் 5

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில், மருத்து வமனை சமூகத்தால் அமைக்கப்பட்ட ஞான வைரவர் ஆலய குடமுழுக்கு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.50 மணிக்கு நடைபெறும்.

குடமுழுக்குக்கான கிரியைகளும், எண்ணெய்க் காப்பு சாத்துதலும் நேற்று இடம்பெற்றன. (ஐ-9)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்ப்பாணம் உரும்பிராய் பரத்தைப்புலம் சிறி கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும்,மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய ஆதீனகர்த்தா அறிவித்துள்ளார். (ஐ)

## மாவட்ட மேலதிக செயலராக கனகேஸ்வரன் பதவியேற்றார்

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலராக, மருதங்கேணிப் பிரதேச செயலர் கனகசபாபதி கனகேஸ்வரன் பதவியுயர்த்தப்பட்டிருந்த நிலையில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலராகக் கடமையாற்றிய திருமதி சுகுணவதி தெய்வேந்திரம் அரசகரும மொழிகள், இந்து கலாசார அமைச்சின் மேலதிக செயலராகப் பதவி உயர்வு பெற்றுக் கொழும்புக்குச் சென்றுவிட்டார்.



அதனையடுத்து மாவட்ட மேலதிக செயலராக கனகேஸ்வரன் பதவியேற்றார். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலரால் இந்தப் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் 2015ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி தொடக்கம் மருதங்கேணிப் பிரதேச செயலராகப் பணியாற்றிவருகிறார்.

அதேநேரம், மருதங்கேணிப் பிரதேச செயலர் பதவிக்கு, தற்பொழுது வன்னி மாவட்டத்தில் பணியாற்றும் பிரதேச செயலர் இடம் மாற்றலாகி விரைவில் கடமையை பொறுப்பு ஏற்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-9,105)

## பொதுக் கிணறு அமைக்க ஒருதொகைநிதி அன்பளிப்பு

வவுனியா, செப். 5



வவுனியா கனகராயன்குளம், புதுக்குளம் மாருதி குடியேற்றத் திட்டத்தில் பொதுக் கிணறு அமைக்கப்படவுள்ளது. அதற்கான முதற்கட்ட நிதியை பீதாம்பரம் அறக்கட்டளைநிதியத்தினர்கிராம மக்களிடம் கடந்த முதலாம் திகதி கையளித்தனர்.

கிராமத்தில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் குடிதண்ணீருக்கு அலைவதாக அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதற்கமைய நிதியத்தினர் அனைத்து மக்களும் பாவிப்பதற்கென பொதுக் கிணறு அமைப்பதற்கு முன்வந்தனர். முதற்கட்ட நிதியை நிதியத்தின் தலைவர் கலாநிதி கா.பீ.ஜெயவிந்தன் கிராமப் பிரதிநிதிகளிடம் கையளித்தார். அத்துடன், வடக்கு மாகாணத்தில் 10ஆயிரம் தேக்கு மரக்கன்றுகளை நடும் திட்டத்தையும் அவர் ஆரம்பித்து வைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# தமிழர்களிடம் நேரடியாகப் பேசி தீர்வை முன்னெடுப்பதே திட்டம்

## இப்படிக் கூறுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, செப்.5
தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேரம் பேசித் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. அதனால் தமிழ் மக்களுடன் நேரடியாகப்பேசி இணக்கம் காணவே விரும்புகின்றோம். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த 2ஆம் திகதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேரம் பேசித் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதை விடவும், தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் மக்களுடன் நேரடியாகப் பேசி இணக்கம் காணவே நாம் விரும்புகின்றோம்.
அதற்கான நடவடிக்கைகளை நாம் விரைவில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கவுள்ளோம். தேசிய அரசியல் கொள்கையின் பிரகாரம் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும். இந்த வேலைத் திட்டங்களின்போது பாகுபாடு இல்லாத அரசியல் நகர்வுகளையே நாம் முன்னெடுத்து வருகின்றோம். தேர்தல் பரப்புரைகளுக்கு முன்னர் மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொண்டு, வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதே ஆரோக்கியமானது - என்றார். (எ)

# சு.கவை விட்டு தாவியோர் மீது விரைவில் ஒழுக்காற்று

கொழும்பு, செப்.5
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிற கட்சிகளுக்குச் சென்றவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக கடந்த 2ஆம் திகதி கொழும்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் இந்த விடயம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும். இந்த ஒழுக்காற்று நடவடிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரதேச சபை உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அதேவேளை நடைபெறவுள்ள கட்சியின் ஆண்டு விழாவில், கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறப்பு அறிவிப்பை வெளியிடுவார் - என்றார்.
ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவளித்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராகவே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ)

# கத்தோலிக்கம் அல்லாத சமய பாட ஆசிரியர்களை உடன் நியமிக்கவும்

## குறித்த சமயத்தவர்கள் கோரிக்கை

மன்னார், செப். 5
கத்தோலிக்கம் அல்லாத சமயம் சார்ந்த பாட ஆசிரியர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் நியமிக்கப்படவில்லை.
தங்களது திருச்சபையில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களைத் தொண்டர் ஆசிரியர்களாக உள்வாங்குவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனி டம் கோரியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள றோமன் கத்தோலிக்கம் அல்லாத திருச்சபையினர், தமது பிரச்சினைகள் பற்றி நாடாளுமன்ற உறுப்பினருடன் நேற்றுக் கலந்துரையாடினர். புதுக்குடியிருப்பு, கைவேலியில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சியின் காரியாலயத்தில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது.
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெரும்பாலான திருச்சபையைச் சார்ந்த போதகர்கள் கலந்து கொண்டு கருத்துக்களையும் பிரச்சினைகளையும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடுகளில் தாங்கள் ஓரங்கட்டப்படுகின்றோம் என்றும் கூறினர்.
அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், நிதி ஒதுக்கீடுகளில் எம்முடன் தொடர்பில் உள்ள அனைத்து கிராமங்களின் அபிவிருத்திகள், ஆலயங்களின் கட்டுமானப்பணிகளுக்குத் தேவையான நிதிகளை வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு ஒதுக்கிக் கொடுத்துள்ளோம். எதிர்வரும் காலங்களில் திருச்சபைகளுடன் நிரந்தரத் தொடர்புகளைப் பேணி அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும். ஆசிரியர்கள் நியமனம் பற்றி மாகாணக் கல்வி அமைச்சுடன் பேசிய பின் முடிவுகள் தரப்படும் என்று தெரிவித்தார். (த-213)

# குடும்பத் தீர்மானத்தைவிடவும் ஐ.தே.கவின் தீர்மானம் சிறந்தது

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, செப்.5
தனி குடும்பத் தீர்மானத்தைக் காட்டிலும் ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் தீர்மானம் சிறந்தது என்று அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஒரு தனிப்பட்ட குடும்பம் தேநீர் அருந்திக் கொண்டு, நாட்டின் கொள்கையை தீர்மானிப்பதை விட ஐக்கிய தேசியக் கட்சிக்குள் புத்திஜீவிகள் பலரும் இருந்து தீர்மானம் ஒன்றுக்கு வருவது சிறந்ததாகும்.
ஐ.தே.கவுக்குள் எந்தவொரு நெருக்கடியும் தற்போது இல்லை. ஆனாலும், நாட்டுக்குத் தேவையான அரச தலைவர் வேட்பாளரை அறிவிப்பதற்கு இன்னும் அவர்களுக்கு காலம் தேவையாக உள்ளது.
அந்தவகையில் எதிர்வரும் வாரங்களில் வேட்பாளர் குறித்த இறுதி முடிவை அக்கட்சி முன்வைக்குமென எதிர்ப்பார்க்கின்றேன் - என்றார். (எ)

# கஜ முத்துடன் ஒருவர் கைது

கொழும்பு, செப்.5
புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணல் குன்று பிரதேசத்தில் கஜ முத்துக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டு, விள்க்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து பெறுமதி மிக்க இரண்டு கஜ முத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
புத்தளம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து சந்தேகநபரின் வீட்டை நேற்றுமுன்தினம் சோதனை செய்தபோதே இந்தக் கஜமுத்துக்கள் கைப்பற்றப்பட்டன.
அதன்போது 630 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# கூட்டாட்சியில் அபிவிருத்தி இடம்பெறவில்லை!

## இப்படிக் கூறுகின்றார் ரன்முத்துகல சங்க ரத்ன தேரர்

கொழும்பு, செப்.5
கூட்டாட்சியில் அபிவிருத்திகள் எவையும் இடம்பெறவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் கல்முனை சுபத்திரா ராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்க ரத்ன தேரர்.
எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இப்பொழுது நாம் முக்கியமான காலகட்டத்தில் உள்ளோம். முக்கியமாக எமது நாட்டின் தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டிய கால கட்டத்தில் தள்ளப்பட்டிருக்கிறோம்
வடக்கு - கிழக்கில் வாழும் உறவுகளுக்கு கூற வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில் நாட்டைப் பற்றிய, தேசிய பாதுகாப்புத் தொடர்பாக, மக்கள் நலன் குறித்து சிந்திக்கின்ற தலைவரையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.
வடக்கு - கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்கள் இன்றுவரை வேதனையுடனும் கவலையுடனும் வாழ்கின்றனர். சிறுபான்மை மக்கள் பற்றி சிந்திக்கின்ற தலைவரே மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
வடக்கு - கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களது வாக்குகளே மிகப் பெறுமதியானவை. அந்த வாக்குகளை நாம் அவதானத்துடனும் நிதானத்துடனும் இதைப்பற்றி சிந்திக்கும் தலைவருக்கு அளிக்க வேண்டும்.
கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவிவந்த அசாதாரண சூழ்நிலை பற்றி மக்கள் அறிந்து இருப்பர். அதனால் பல மக்கள் இன்னல்களுக்கு ஆளாகின்றனர். அவ்வாறான சூழ்நிலை இனிவரும் காலங்களில் ஏற்படாவண்ணம் பாதுகாக்க தலைவரே நாம் எதிர்பார்க்கின்றோம்.
கூட்டரசில் அபிவிருத்திகள் இடம்பெற்றன என்று கூறிக்கொள்கின்றனர். ஆனால் தனிப்பட்ட ரீதியில் நான் எந்தவொரு அபிவிருத்தியையும் காணவில்லை - என்றார். (எ)

# எதிர்கால அமைச்சரவை தொடர்பில் சு.க. பெரமுன இடையே இணக்கம்!

## ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்



கொழும்பு, செப்.5

எதிர்கால அமைச்சரவையை 30 உறுப்பினர்கள் கொண்டதாக அமைப்பது தொடர்பாகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடைய இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முன்னாள் தலைவர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இரு தரப்பினருக்கும் இடையில் பல கொள்கைகள் தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கைகளில் எதிர்கால அரசுக்கு இருக்க வேண்டிய அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை, தேர்தல் முறைத் திருத்தம் மற்றும் அமைச்சர்கள் தெரிவு உள்ளிட்டவை அடங்குகின்றன.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்துக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, எஸ். பி. திஸாநாயக்க ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அக்கறை காட்டும் சுதந்திரக் கட்சியினர், ஐ.தே.கவுக்குச் சென்றவர்களுக்கு எதிராக ஏன் ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை?.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தற்போதும் ஆளும் தரப்பினருக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார்கள்- என்றார். (எ)

# மக்களுக்குச்சேவையாற்ற பதவி தேவையில்லையாம்

## அரச தலைவராகப் போட்டியிடும் கோத்தபாய ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, செப்.5

மக்களுக்குச் சேவைகள் செய்யப் பதவிகள் முக்கியமல்ல என்று தெரிவித்துள்ளார் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச. கொழும்பில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நான் இந்த நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவேன் என்று தெரிவித்தவுடன், இராணுவ ஆட்சியை இலங்கையில் உருவாக்க முற்படுகிறேன் என்று என்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

நாம் இந்த விடயத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும். 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நாட்டில் அதிகளவிலாக சோதனை முகாம்களை நாம் குறைத்தோம். மக்கள் அச்சமற்ற சூழலில் வாழவும், வியாபாரிகள் கப்பம் கொடுக்காமல், அச்சமில்லாமல் வியாபாரம் செய்யவும்தான் நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

இப்போது பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் வழங்கப்படுகின்றது. அதை இல்லாது செய்யவே கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நாம் கூறியிருந்தோம். இவைதான் ஒரு நாட்டுக்குஅத்தியாவசியமாகவும் இருக்கிறது.

நாம்அன்றுகொழும்பை ஆசியாவின் அழகான நகராக மாற்றியமைக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். அவற்றை நாம் மக்கள் பிரதி நிதியாக மேற்கொள்ளவில்லை. பாதுகாப்புச் செயலராக இருந்துக் கொண்டுதான் இவற்றை நான் செய்திருந்தேன். நாம் என்றும் பதவியைப்பார்த்து மக்களுக்கான சேவையை ஆற்றுபவர்கள் அல்ல - என்றார். (எ)

# ஐ.தே.கவை வெல்ல வைப்பதற்கே மூன்றாவது வேட்பாளர் களத்தில்!

## கண்டுபிடித்தார் மகிந்த



கொழும்பு, செப்.5

ஐக்கிய தேசிய கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில்தான் அரச தலைவர் தேர்தலில் மூன்றாவது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

பெலவத்த பிரதேசத்தில் நடந்த பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; இந்த அரச தலைவர் தேர்தலில் மூன்றாவது வேட்பாளர் தொடர்பான எதிர்ப்பார்ப்புடன் பலரும் இருக்கிறார்கள். ஆனால் மூன்றாவது வேட்பாளர் ஒருவர் களமிறங்கியுள்ளமையானது வெற்றிபெற அல்ல என்பதை நான் மக்களிடம் கூறிக்கொள்கிறேன்.

இந்த மூன்றாவது வேட்பாளருக்கு ஒரு வேட்பாளரைத் தோற்கடிக்கவோ அல்லது ஒரு வேட்பாளரை வெற்றி பெறச்செய்யவோ வேண்டும் என்பது தான் பிரதான நோக்கமாக இருக்கிறது. கடந்த4வருடங்களாக இந்த அரசை யார் பாதுகாத்து வந்தார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இந்த அரசை நாடாளுமன்றில் தோற்கடிக்கப் பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும், அரசை யார் பாதுகாத்தனர் என்பதை மக்களும் அறிவார்கள். இந்தத் தரப்பினருக்கு ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற வேண்டும் என்பதுதான் பிரதான நோக்கமாக இருக்கிறது. அதனால் அவர்களுக்குத் தேவையான சலுகைகளும், வரப்பிரசாரங்களும் கிடைக்கின்றன என்றே நாம் நம்புகிறோம்.

கடந்த 4 வருடங்களாக இந்த அரசு நாட்டுக்காக எதையும் செய்யவில்லை. மாறாக நாட்டை வெளிநாடுகளிலும் காட்டிக் கொடுத்ததே மிச்சமாக இருக்கிறது.

எமது தேசிய பாதுகாப்பும் தற்போது கேள்விக் குறியாகியுள்ளது. வரலாற்றில் முதன்முறையாக மதத் தலங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. இதை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரும் பொறுப்பில்தான் நாம் இன்று உள்ளோம் - என்றார். (எ)

# வெளிநாட்டு திட்டத்தை மாற்றினார் நெத்திகுமார

கொழும்பு, செப்.5

மத்திய வங்கி முறிகள் - கொடுக்கல்-வாங்கல்தொடர்பில்விசாரணை செய்யும் அரசதலைவர் ஆணைக் குழுவின் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஷனில் நெத்திகுமார வெளிநாடு செல்ல வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை மீளப்பெற்றுக்கொண்டார்.

இது தொடர்பான வழக்கு அண்மையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்போது, தனது தந்தை மருத்துவ அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருப்பதால், கோரிக்கையை அவர் மீளப் பெற்றுக் கொள்கின்றார் என்று ஷனில் நெத்திகுமார தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார். அதையடுத்து வழக்கு விசாரணை செப்ரெம்பர் 5 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

தற்போது, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருக்கும் ஷனில் நெத்திகுமார, இந்த மாதம் இடம் பெறும் மின்சக்தி - எரிசக்தி உச்சி மாநாட்டில் பங்கேற்க டுபாய் செல்ல அனுமதி கோரியிருந்தார். ஆனால் சட்டமா அதிபர் இந்த கோரிக்கைக்கு எதிராக ஆட்சேபணைகளை எழுப்பியிருந்தார்.

பேர்ப்பர்ச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், கொள்ளுப்பிட்டி பகுதியில் சொகுசு வீடொன்றை ரவி கருணாநாயக்கவுக்கு வழங்கினார் என்று ஆணைக்குழுவில் சாட்சியமளித்தவருக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுத்தார் என்று ஷனில்நெத்திகுமாரவுக்கு எதிராகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (எ)

# ஜெய்சங்கரை, ரணில் சந்திக்கும் சாத்தியம்

கொழும்பு, செப்.5

இந்திய அயலுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாலைதீவில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இருவரும் தற்போது அங்கு சென்றுள்ளனர். அங்கு அவர்கள் இருவருக்கும் இடையே சந்திப்பு நடக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய - இலங்கை நல்லுறவு மற்றும் நடப்பு அரசியல் சூழ்நிலைகள் குறித்து இவர்கள் கலந்துரையாடப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# சஜித்தை பெயரிடாவிடில் பதவி விலகல்

## மிரட்டுகின்றது ஆதரவு அணி

கொழும்பு, செப்.5

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை இந்த மாதத்துக்குள் அறிவிக்காவிட்டால் அவருக்கு ஆதரவளிக்கும் அனைவரும் கூட்டாகப் பதவி விலகத் தீர்மானித்துள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹெஷா விதானகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் வேட்பாளராக சஜித்தை அறிவிப்பதைக் கட்சி தொடர்ந்து பிற்போட்டு வருகின்றது. அதனால் சஜித்தில் ஆதரவாளர்களான அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் கூட்டாகப் பதவி விலகும் கடிதத்தைக் கட்சி தலைமையகத்துக்குச் சமர்ப்பிக்கவுள்ளோம். கட்சி மேற்கொண்டுவரும் செயற்பாடுகளால் ஏற்பட்டுள்ள விரக்தியால் அரசியலில் இருந்து முற்றாக விலகுவது தொடர்பாகவும் ஆராய்கின்றோம். இந்த மாத இறுதிக்குள் சஜித் பிரேமதாசவை அரச தலைவர வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சி அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றோம் - என்றார். (எ)

# நிறைவேற்று அதிகார நீக்கம் தற்போது ஏற்புடையது அல்ல

## சுமதிபால எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப்.5

இன்னும் ஓரிரு மாதங்களில் அரச தலைவர் தேர்தல் இடம்பெறவிருக்கும் நிலையில் அரச தலைவரின் அதிகாரங்களைக் குறைத்து அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மக்கள் தீர்ப்புக்குச் செல்வது ஏற்றதல்ல.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

அவர் பொரளையில் உள்ள தனது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அரச தலைவரின் அதிகாரங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பது ஏற்புடையதல்ல. எதிர்வரும் அரச தலைவர் தேர்தலின் பின்னர் தெரிவாகும் புதிய அரச தலைவரின் கீழ் இது தொடர்பாகத் தீர்மானங்களை எடுப்பதே பொருத்தமானதாக இருக்கும் - என்றார். (எ)

# பங்காளிகளுடன் பேசிய பின்பே நிறைவேற்று அதிகாரம் ஒழிப்பு!

## கோத்தபாய ராஜபக்ச தெரிவிப்பு



**கொழும்பு, செப். 5**

**நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிப்புத் தொடர்பாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பங்காளிகளுடன் பேச்சு நடத்தியே தீர்மானம் எடுக்கமுடியும். இவ்வாறு அந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்பதற்கு முன்வரவேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருந்தார். இந்த யோசனையை ஆதரிக்கின்றேன் என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். அதை இப்போது வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியுமா? என்று கேள்வி எழுப்பிய அவர், தமது ஆட்சிக் காலத்தில் அதனை நிறைவேற்றுவோம் என்றும் கூறியிருந்தார்.

தற்போது இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள கோத்தபாய ராஜபக்ச, கட்சியின் பங்காளிகளுடன் பேச்சு நடத்தியே தீர்மானம் எடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் அறிவிப்பு உத்தியோகபூர்வமாக இதுவரை வெளிவரவில்லை. டிசெம்பர் மாதத்துக்குள் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். அதற்குரிய பணிகளில் அனைத்துக் கட்சிகளும் குதித்துள்ளன. தேர்தல் வேட்பாளரை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும், தேசிய மக்கள் சக்தியும்தான் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணிக்குள் வேட்பாளர் தொடர்பில் இழுபறி தொடர்கின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தேர்தல் விவகாரம் மற்றும் வேட்பாளர் தொடர்பில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் பேச்சு நடத்தினாலும் இதுவரை அந்தக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில்தான், நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிக்க வேண்டும் என்ற விவகாரம் சூடு பிடித்துள்ளது. அதுவும் அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்; ஐக்கிய தேசிய முன்னணியும் உறுதியாக இருப்பது தெரிகின்றது. இதன் பின்னணி என்னவென்று எனக்குத் தெரியாது.

இந்த விடயத்துக்கு எமது கட்சியின் தலைவர் மகிந்த கொள்கையளவில் இணக்கம் தெரிவித்தாரா? இல்லையா? என்பது கூடத் தெரியாது. ஏனவே, எமது கட்சியின் தலைவர் மகிந்த இது தொடர்பில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தித்தான் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும். இது தொடர்பில் நானும், இன்னமும் கட்சியின் தலைவருடன் பேச்சு நடத்தவில்லை. இவ்வாறான நிலையில், என்னால் உத்தியோகபூர்வ கருத்துக்கள் எதனையும் வெளியிடமுடியாது - என்றார். (ஓ,5,22)

# ரத்ன தேரரைப் பின்னிருந்து ஆட்டுவிக்கின்றது ஒரு சக்தி!

## ஹிஸ்புல்லா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 5

முஸ்லிம் அமைச்சர்கள், மற்றும், ஆளுநர்கள் பதிவி விலக வேண்டுமென்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தானாக முன்வந்து போராட்டம் நடத்தவில்லை. அவரை மாபெரும் சக்தி ஒன்று ஆட்டுவித்துள்ளது. என்று கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

சமூக வலைத்தளத் தொலைக்காட்சி ஒன்றில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பெரும்பான்மை இனத்திலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற வேட்பாளருடன் ஒப்பந்தங்களைச்செய்து அதன்படி முஸ்லிம்களுடைய பிரச்சினைகள், பாதுகாப்பு, சுதந்திரம் போன்றவற்றுக்கான உறுதியை எந்த வேட்பாளர் தருகிறாரோ அவருக்கே முஸ்லிம் வாக்குகள் வழங்கப்படும்.

எந்த அரச தலைவர் தேர்தலிலும் இல்லாத அளவு போட்டி இந்த முறை இடம்பெறவுள்ளது. அதனால் பெரும்பான்மை இனத்தவரின் வாக்குகள் பிரிவடையும். முஸ்லிம்கள் ஒருமித்து ஒரு முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களித்தால் அந்த வாக்குகளைப் பயன்படுத்தி முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பெரும்பான்மை இனத்தில் இருந்து இரண்டாம் நிலையில் உள்ள வேட்பாளரைக் கூட வெற்றிபெறச் செய்யமுடியும். தேர்தலில் களமிறங்குவது தொடர்பான யோசனையே தற்போது முன்வைக்கப்பட்டுள்து. முஸ்லிம் அரசியல் வாதிகள் அது தொடர்பில் இதுவரை தன்னுடன் எந்தவிதத்திலும் பேசவில்லை.

நாம் அரசியல் பின்னணிகளுக்குப் பயந்து, அல்லது பௌத்த குருமாருக்குப் பயந்து பதவி விலகவில்லை. பௌத்த குருமார் செய்தவை வெறும் நாடகமே. அவர்களை ஆட்டுவித்தவர்கள் வேறு நபர்கள். அத்துரெலிய ரத்ன தேரர் தலதா மாளிகைக்கு முன்பாகப் போய் இருந்தார் என்றால் அவராகப் போய் இருக்கவில்லை. அவரை ஒரு சக்தி கொண்டு சென்று இருத்தியது. அது ஒரு பெரும் சக்தி - என்றார். (எ-21)

# தீ விபத்தில் 10 வீடுகள் நாசம்

கொழும்பு, செப்.5

கொட்டகலை கிறிஸ்லஸ்பாம் தோட்டத்தில் கடந்த 2ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தில் 10 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகி யுள்ளன. லயன் தொகுதியில் அமைந்திருந்த 10 வீடுகள் சேதமடைந்தன. இந்த வீடுகளில் குடியிருந்த 10 குடும்பங்களை சேர்ந்த 75 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அயலவர்கள் தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. திம்புள்ள பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர். சுமார் ஒரு மணித்தியாலயத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கும் திம்புள்ள பத்தனை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# சு.க.–பெரமுன இணைய முன்னர் ஆதரவாளர் இணைந்து விட்டனர்

## கூறுகின்றார் கெஹலிய

கொழும்பு, செப்.5

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைவதற்கு முன்னதாக அந்தக் கட்சிகளின் ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து விட்டார்கள்.

இவ்வாறு மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த உண்மையை இணைந்து இரு கட்சிகளும் செயற்பட வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே பேச்சு நடைபெற்றுவருகின்றது. இந்த இரு கட்சிகளினதும் இலக்குகள் ஒன்றாகவே இருக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் 14 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி 50 இலட்சம் வாக்குகளை இந்தத் தேர்தலில் பெற்றது. இந்த வாக்குகள் அனைத்தும் இடதுசாரிக் கொள்கையுடைய, நாட்டை நேசிக்கும் மக்களின் வாக்குகளாகவே நான் கருதுகின்றேன். இந்த இரு தரப்பினரதும் ஒரே இலக்காக 2019ஆம் ஆண்டுத் தேர்தல் இப்போது காணப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி, பொருளாதாரத்தை உயர்த்தி, நாட்டில் அபிவிருத்திகளை மேற்கொண்டு, அனைத்து மக்களினதும் வாழ்வாதாரத்தைப் பலப்படுத்து வதற்காக இரு கட்சிகளும் தற்போதிருந்தே திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலையிலேயே இரு கட்சிகளுக்கும் இடையே பேச்சு நடைபெற்று வருகின்றது.

இரு கட்சிகளும் இணைய முன்னரே அவற்றின் ஆதரவாளர்கள் இணைந்துவிட்டனர். அதைக் கருத்தில் கொண்டே எமது அடுத்த கட்ட நகர்வுகளை நாம் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (எ)

# சஜித் என்பதில் உறுதி அஜித்

கொழும்பு, செப்.5

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் அமைச்சர் சஜித் பிரேமதாசவை வேட்பாளராக களமிறக்குவதில் உறுதியாக இருக்கின்றோம். வேட்பாளர் நியமனம் தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதில் கட்சியே காலதாமதம் செய்கின்றது.

இவ்வாறு அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் நியமனம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ)

### வடக்கில்

# 120 மருத்துவமனைகளில் 24 மாத்திரமே அபிவிருத்தி

யாழ்ப்பாணம், செப். 5

**வடக்கு மாகாணத்தில் காணப்படும் 120 மருத்துவமனைகளில் போருக்குப் பின்னர் 24 மருத்துவமனைகளுக்கு மட்டுமே புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**

வடக்கு மாகாணத்தில் தற்போது 120 மருத்துவமனைகள் உள்ளன. இதில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை இயங்கும் நிலையில் உள்ள போதிலும் பலவற்றில் விடுதி வசதி, மருத்துவமனை வசதி, தாதியர் விடுதி, ஊழியர் தங்குமிட வசதி என்பன தற்போது வரையில் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன. 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் 24 மருத்துவமனைகளுக்கான நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் இயங்கும் 7 மருத்துவமனைகளுக்கு இன்று வரையில் நிரந்தரக் கட்டடமே கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு உட்பட்ட மருத்துவமனைகள், மாவட்ட மற்றும் பிராந்திய சுகாதார அமைச்சின் பணியகங்கள், மருத்துவமனை விடுதிகள் உட்பட கடந்த 10 ஆண்டுகளாக 64 கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் 8 ஆயிரத்து 154 ஆளணிகளை நிரப்புவதற்கான அனுமதி உள்ள நிலையில் 6 ஆயிரத்து 33 பேர் பணியாற்றுகின்றனர். 2 ஆயிரத்து 121 பேருக்கான வெற்றிடம் நிலவுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 894 வெற்றிடமும், கிளிநொச்சியில் 255 வெற்றிடமும், முல்லைத்தீவு 359 வெற்றிடமும், மன்னாரில் 343 வெற்றிடமும், வவுனியாவில் 268 வெற்றிடமும் காணப்படுகின்றது.

(ஓ.5.105)

# 'எழுக தமிழ்' பிளந்துபோய் கிடக்கிறது!

### கிண்டலடிக்கிறார் வரதர்

வவுனியா, செப். 5

தற்போது நடத்தப்படவுள்ள 'எழுக தமிழ்' பிளந்துபோய் உள்ளதாக முன்னாள் வடக்கு - கிழக்கு முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழர் சமூக ஜனநாயக் கட்சியின் உறுப்பினர்களுடன் எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன் பின் ஊடகவியலாளர்களால் 'எழுக தமிழ்' நிகழ்வு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

'முதலாவது எழுக தமிழைவிட இரண்டாவது எழுக தமிழ் குறைந்து எழுந்தது. இரண்டாவது எழுக தமிழைவிட மூன்றாவது எழுக தமிழ் பிளந்துபோய் கிடக்கின்றது. இதைவிட சொல்வதற்கு வேறு எதுவும்



இல்லை' - என்றார்.

(ஓ.5.110)

# அரச தலைவர் தேர்தல் சூட்டுடன் நாடாளுமன்றத்தை கலைக்கமுடியாது

கொழும்பு, செப். 5

இந்த ஆண்டு இறுதிக்குள் அரச தலைவர் தேர்தல் நடத்தப்படவுள்ளதால் அடுத்த ஆண்டு முதல் காலாண்டுக்கான இடைக்கால கணக்கறிக்கையை முன்வைக்க வேண்டுமா என்பது ஆராயப்பட வேண்டும். அதேபோல் அரச தலைவர் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அரச தலைவருக்கு இல்லை. அது தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை தலைமை அமைச்சரிடத்திலான கேள்வி நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக எழுப்பிய கேள்விக்கு பதில் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

'2020ஆம் ஆண்டுக்காக வரவு - செலவு திட்டமொன்று அரசால் முன்வைக்கப்படுமா? அவ்வாறு இல்லையென்றால் இடைக்கால கணக்கறிக்கையாவது முன்வை க்கப்படுமா? அடுத்த ஆண்டு முதல் நான்கு மாதங்களுக்கு இடைக்கால கணக்கறிக்கை மூலமாக நிதி ஒதுக்கும் நிலையில் அரசின் வரவு அதிகரிக்காது. செலவு மட்டுமே அதிகரிக்கும். அதனைத் தொடர்ந்து மீண்டும் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்லும் நிலையில் அதன் பின்னர் வரும் அரசு எதுவாக இருந்தாலும் நெருக்கடிக்குள் தள்ளப்படும். ஆகவே தான் இது தேர்தலுக்காக முன்னெடுக்கும் நோக்கமா என்ற சந்தேகம் எழுகின்றது என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ரணில், 2020 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க இன்னமும் எந்த தீர்மானமும் முன்னெடுக்கப்படவில்லை. நவம்பர் , டிசெம்பர் மாதங்களில் அரச தலைவர் தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னர் வரவு - செலவு திட்ட இடைக்கால கணக்கறிக்கையை முன்வைக்க இன்னமும் தீர்மானம் ஒன்றும் இல்லை. இதனால் நிதிச் செலவுகள் ஏற்படாது. இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் செலவுகள் முன்னெடுக்கப்படாது. அரசு தேர்தலுக்காக நிதியை செலவழிக்கிறது என்றால் இது குறித்து ஆராய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளது. அவர்கள் ஆராய்ந்து பார்க்கலாம்.

அதேபோல் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அடுத்ததாகச் சிந்திக்கவேண்டிய தேவை உள்ளது. 1988 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் முடிந்தவுடன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. தேர்தலும் நடத்தப்பட்டது. 1999 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் முடிந்தவுடன் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்த பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அரச தலைவருக்கு இருந்தது. ஆனால், இன்று இந்த அதிகாரம் நாடாளுமன்றம் வசமே உள்ளது. நாடாளுமன்றத்தை விரைவாக கலைக்க வேண்டும் என்றால் நாடாளுமன்ற இணக்கப்பாட்டுடன் அதனை செய்யவேண்டியுள்ளது. இது கட்சி தலைவர்கள் மற்றும் நாடாளுமன்றம் எடுக்கவேண்டிய முடிவாகவே உள்ளது. அரச தலைவர் தேர்தல் முடிந்த பின்னர் முதல் இரண்டு மாதங்களில் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமா என்பது நாடாளுமன்றம் எடுக்க வேண்டிய தீர்மானம். அதன்போது வரவு - செலவு திட்டம் குறித்தும் தீர்மானம் எடுக்க முடியும் - என்றார். (ஓ.5.61)

## அரச தலைவர் வேட்பாளர் யார்? வரும் சனியன்று முடிவு தெரியும்

### சம்பிக்க நம்பிக்கை



கொழும்பு, செப். 5

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை மறுதினம் சனிக்கிழமை ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சி தலைவர் கூட்டம் இடம்பெறவுள்ளது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் தீர்க்க மான முடிவொன்று எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் வேட்பாளர் விவகாரத்தில் இவ்வாறு இழுபறி நிலைமை தொடர்கின்றமை பல சிக்கல்களை ஏற்படுத்தும். விரைவில் தீர்வொன்று எடுக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.

சனிக்கிழமை தலைமை அமைச்சர் ரணில் தலைமையில் கட்சி தலைவர் கூட்டம் இடம்பெறவுள்ளது. அதன்போது அரச தலைவர் வேட்பாளர் விடயம் குறித்து இறுதித் தீர்வைப் பெற முயற்சிப்போம்.

கூட்டணிக்குள் தொடர்ச்சியாக முரண்பாடுகள் ஏற்பட்டால் அது பிளவை ஏற்படுத்தும். 1994 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இது போன்று முரண்பாடுகள் ஏற்பட்ட போது அந்தக் கட்சியிலிருந்த பெரும்பாலான உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார்கள். எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 20 வருட காலம் பலமான ஆட்சியை அமைத்தது என்பதையும் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

தற்போது ஐக்கிய தேசிய முன்னணிக்குள் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் முரண்பாடுகள் காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அது வெற்றிக்கான பிரச்சினையாக அமையாது. இம்முறையும் நிச்சமாக குடும்ப ஆட்சி படுதோல்வியடையும். இளைஞர்களும் எதிர்காலச் சந்ததியினரும் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த தீர்மானித்துவிட்டார்கள் - என்றார். (ஓ.5.31)

## வாள்வெட்டுக்குழு அடாவடி வாகனங்களுக்குச் சேதம்

### தென்மராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 5

சாவகச்சேரி, தனங்களப்பு, மடத்தடி, மீசாலை, புத்தூர்ச்சந்தி ஆகிய பகுதிகளில் வாள்வெட்டுக். குழுவினரின் அட்டகாசத்தால் பல வாகனங்கள் சேதமடைந்துள்ளதுடன் இருவர் காயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் தனங்களப்பு பகுதியியில் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து சாவகச்சேரி நகரப் பகுதியிலும் வாளால் வெட்டியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சாவகச்சேரியில் பட்டா வாகனம் ஒன்று அடித்து நொறுக்கப்பட்டதோடு, சாவகச்சேரி மடத்தடிப் பகுதியில் வீதியில் சென்ற மூடுந்தின் கண்ணாடிகள் அடித்து உடைக்கப்பட்டன. மீசாலை சந்தியில் வீதியால் சென்ற முச்சக்கர வண்டியும் தாக்கப்பட்டது. புத்தூர்ச் சந்தியில் நின்ற டிப்பர் வாகனமும் வாள்வெட்டுக் குழுவினரால் சேதமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ.5.105)

# அரச தலைவர் தேர்தல் இழுதடிப்புக்கு இணங்கோம்

*வேலுகுமார் எம்.பி. உறுதியாகத் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 5

இழுத்தடிப்புகளின்றி உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும். அரச தலைவர் தேர்தலை ஏதேனும் காரணத்துக்காக ஒத்திவைப்பதற்கு இழுத்தடிப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும். இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நேற்றுக் காலை நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் வேட்புமனு கோரும் அறிவிப்பு வெளியிடப்பட்டு, நவம்பர் 10 ஆம் திகதியில் இருந்து டிசெம்பர் 8 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

நிலமை இப்படி இருக்கையில் அரச தலைவர் தேர்தலை எதிர்கொள்வதற்கு முதுகெலும்பற்ற சிலர் அதனை குழப்பியடிப்பதற்கு பல வழிகளிலும் முயற்சித்து வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாகவே மாகாணசபைத் தேர்தலை நடத்தும் நோக்கில், பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் அடிப்படையில், மாகாண சபைத் தேர்தல்களை நடத்த உத்தரவிடமுடியுமா என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியிருந்தார். ஆனால், பழைய முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது. அவ்வாறு உத்தரவிடும் அதிகாரம் அரச தலைவருக்கு இல்லை என்று உயர்நீதிமன்றம் சட்ட வியாக்கியானம் வழங்கியுள்ளது.

மாகாண சபைகளுக்கான தேர்தலை கலப்பு முறையில் நடத்துவதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது எல்லை நிர்ணயம் தொடர்பில் எமக்கு கடும் அதிருப்தி இருந்தது. தேர்தல் முறையானது தமிழ்பேசும் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருந்தது. எனினும், சில நிபந்தனைகள், சில விட்டுக்கொடுப்புகள் என்ற அடிப்படையில் சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களித்தோம்.

ஆனால், அதுவும் தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஓர் தந்திரோபாயமாகவே அமைந்தது என்பது கசப்பான உண்மையாகும். இந்நிலையில் இதை ஓர் காரணமாக வைத்து தேர்தல்களை திட்டமிட்ட அடிப்படையில் இழுத்தடிக்க முற்படுவது ஜனநாயக விரோத செயலாகும்.

தற்போது அரச தலைவர் தேர்தலே முதலில் நடத்தப்படவேண்டும் என்ற நிலையில், அரச தலைவரின் பதவிகாலம் எப்போது முடிவடைகின்றது என்ற வாதத்திலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி சபாநாயகரால் கையெழுத்திடப்பட்ட, 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய அரச தலைவரின் பதவிக்காலம், ஐந்து ஆண்டுகளில் முடிவடைகிறது.

19 ஆவது திருத்தச்சட்டம் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதியே நடைமுறைக்கு வந்த அன்றில் இருந்தே, அரச தலைவரின் ஐந்து ஆண்டு பதவிக்காலம் கணக்கிடப்படவேண்டும். இதன்படி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, 2020 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி வரை பதவியில் இருப்பதற்குப் பதிலாக, 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி வரை பதவியில் இருக்க முடியும் என்பதே அவர்களின் வாதமாகும்.

இதற்கெல்லாம் இடமளிக்க முடியாது. மக்களின் கோரிக்கையை ஏற்று, அரச தலைவர் தேர்தல் நடத்தப்படவேண்டும். காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம், தமக்கு சாதகமான சூழ்நிலை வரும்போது தேர்தலை நடத்தலாம் என சிந்திப்பதானது 'அரசியல் சூழ்ச்சி' நடவடிக்கையின் மற்றுமொரு அங்கமாகும் - என்றார். (ஓ.5)

## 2020இல் ஆட்சி அமைப்போம்

# மைத்திரி கூறியதன் அர்த்தத்தை விளக்குகிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, செப். 5

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவின்றி யாராலும் ஆட்சியமைக்க முடியாது. செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சி மாநாட்டில் '2020 இலும் நாமே ஆட்சியமைப்போம்' என்று அரச தலைவர் தெரிவித்தமைக்கு அர்த்தம் இதுவே என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதிகார ஆசையுடையவர் அல்ல. எனவேதான் அவர் எந்த சந்தர்ப்பத்திலும் 19 ஆம் அரசமைப்புத் திருத்தத்தை ஆதரித்தோ, நிறைவேற்றதிகார முறைமையை ஆதரித்தோ கருத்து வெளியிடவில்லை. அதற்காக நாம் அரச தலைவர் தேர்தலுக்கு அஞ்சுவதாகவும் கருத முடியாது.

சுதந்திர கட்சியின் 68 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டுக்கு சுமார் 35 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவற்றில் 33 கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் வருகை தந்திருந்தனர். தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தான் கொழும்பில் இல்லாத காரணத்தால் மாநாட்டில் கலந்துகொள்ள முடியவில்லை என்று முன்னரே அறிவித்திருந்தார்.

இதேபோன்று பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிசுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அந்தக் கட்சியின் பொதுச் செயலர் சாகர காரியவசத்துக்கு அழைப்பு விடுக்குமாறு கோரப்பட்டதற்கு இணங்க அவருக்கும் அழைப்பு கடிதத்தை அனுப்பி வைத்தோம். அவர் கலந்து கொள்ளவில்லை. பரந்துபட்ட கூட்டணி தொடர்பில் பொதுமக்கள் முன்னணி சுதந்திரக் கட்சிக்கிடையில் பேச்சுக்கள் இடம்பெற்று வரும் நிலையில் அவர் மாநாட்டுக்கு வருகை தந்திருந்தால் அது இருதரப்பு பேச்சுக்களுக்கு பலமாக அமைந்திருக்கும் - என்றார். (ஓ.5,61)

# கட்சி தாவிய ஐந்து பேரிடம் விளக்கம் கோருகிறது சு.க.

கொழும்பு, செப். 5

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கூடாக தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஐவருக்கு கட்சியின் யாப்பை மீறியமை தொடர்பில் ஒரு வார காலத்துக்குள் விளக்கமளிக்குமாறு கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

பொதுமக்கள் முன்னணியில் இணைந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா. எஸ்.பி.திசாநாயக்க மற்றும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட விஜித் விஜயமுனி சொய்சா மற்றும் ஏ.எச்.எம். பௌசி ஆகியோருக்கே விளக்கமளிக்குமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கட்சியை மீறி செயற்பட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் பலருக்கு எதிராக முன்னரே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கீழ் மட்ட உறுப்பினர்களுக்கு எதிராக மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்படுவது ஏன் என்றும் உயர்மட்ட குழுவினருக்கு எதிரான ஏன் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்றும் - எம்மிடம் பலர் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவேதான் சுதந்திரக் கட்சியால் தேசியப் பட்டியலூடாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட இவர்கள் நிச்சயம் பொறுப்பு கூறவேண்டியவர்கள் என்பதால் விளக்கம் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒரு வாரம் அவர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

காலத்தை நீடிக்குமாறு அவர்கள் கோரினால் ஒரு மாத காலம் வழங்கப்படும். ஆனால், அவர்கள் விளக்கமளிக்க மறுக்கும் பட்சத்தில் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள் - என்றார். (ஓ.5,61)

# 2020இல் யாரின் ஆட்சி? மக்கள் தீர்மானித்துவிட்டனர்

*கூறுகிறது மகிந்த அணி*

கொழும்பு, செப். 5

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் இணையுமாக இருந்தால் கட்சியை நாட்டு மக்கள் முழுமையாகப் புறக்கணிப்பார்கள். எவர் தலைமையிலான அரசு 2020ஆம் ஆண்டு தேவை என்பதை நாட்டு மக்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பெறுபேற்றின் ஊடாகத் தெளிவுபடுத்திவிட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சிக்கும், பொதுமக்கள் முன்னணிக்கும் இடையில் பலமான கூட்டணியமைத்தலுக்கு பேச்சு முன்னெடுக்கப்படுகின்றது. கூட்டணி விவகாரம் வெற்றி பெற வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். சுதந்திரக் கட்சியையும், அதன் கொள்கைகளையும் எதிரணியினால் இல்லாது செய்ய முயற்சிக்கின்றார்கள் என்று அரசியல் பரப்புரை செய்கின்றார்கள்.

வரலாற்று ரீதியில் கொள்கைகளின் அடிப்படையில் வேறுபட்டிருந்த சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டு அரசில் 2015ஆம் ஆண்டு ஒன்றிணைந்தது. இந்தச் செயற்பாட்டின் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. சுதந்திரக் கட்சியே தனது அடிப்படை கொள்கைகளுக்கு அப்பாற்பட்டுச் சென்றது.

2015ஆம் ஆண்டில் இருந்து சுதந்திரக் கட்சி சுயமாகவே அழிவுப்பாதையைத் தேடிச்சென்றது. எந்த நிலையிலும் கட்சியை பலவீனப்படுத்த எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுமக்கள் முன்னணியினர் எண்ணவில்லை. மாறாக ஒன்றிணைந்து செயற்படவே முனைகின்றோம். சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பினர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவே முயற்சிக்கின்றார்கள். சுயநலனுக்காக அவ்வாறு இடம்பெற்றால் சுதந்திர கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படும்.

2020ஆம் ஆண்டு நாங்களே ஆட்சியமைப்போம் என்று அரசியல் மேடைகளில் பலர் குறிப்பிட்டுக் கொள்கின்றார்கள்.

இவ்வாறு குறிப்பிடுபவர்கள் இடம்பெற்று முடிந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலின் பெறுபேறை ஒருமுறை மீட்டிப்பார்க்கவேண்டும். மீண்டும் எவர் தலைமையிலான அரசு தேவை என்பதை நாட்டு மக்கள் வாக்குரிமையின் ஊடாக கடந்த ஆண்டு நிரூபித்துவிட்டார்கள். அதில் எவ்வித மாற்றமும் ஏற்படாது - என்றார். (ஓ.5,61)

## போர்க்குற்ற....

இலங்கையில் இந்திய அமைதிப்படையின் தளபதியாகப் பணியாற்றியவரும், தெற்காசிய பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான ஆய்வாளருமான மேஜர் ஜெனரல் அசோக் கே.மேத்தா கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு அளித்துள்ள நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போர்க்குற்ற விசாரணையில் வெளிநாட்டு பங்களிப்பு குறித்து தீர்மானிக்கும் உரிமை இலங்கை அரசுக்கு இருக்கிறது. ஆனால், 2015 ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் முன்பாக அளித்த உறுதிப்பாட்டின் மீது, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

இந்தத் தீர்மானம் குறித்த முரண்பாடுகளைத் தீர்ப்பதுடன், சிறுபான்மை தமிழ்மக்களை வென்றெடுப்பது மற்றும் அவர்களுக்கு நீதி வழங்குவது பற்றிய கேள்விக்கும் பதிலளிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகம் அமைக்கப்பட்டது, உள்ளிட்ட சில முன்னேற்றகரமான செயற்பாடுகள் இடம்பெற்றன. ஆனால் அது பின்பற்றப் படுவதாக நான் நினைக்கவில்லை.

2015 ஆம் ஆண்டின் ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானம் குறித்து அரசு பேச்சு நடத்த வேண்டிய அவசியம் உள்ளது. நீடித்த சமாதானத்துக்கு நிலைமாறுகால மற்றும் நல்லிணக்கம் முக்கியமான அம்சமாகும், ஆனால் அதனை அரசு தீவிரமாக பின்பற்றுவதை காணமுடியவில்லை. சில மேற்கு நாடுகள் இதேபோன்ற கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தன, அவை 2011 இல் இருந்து, கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்து கொள்ளவில்லை. இன்னமும் குற்றச்சாட்டுகள் அப்படியே உள்ளன. 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுகளைத் தொடர்ந்து, இலங்கை அரசால் விசாரணை செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்தக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க முதலில் இரண்டு ஆண்டுகளும், பின்னர் இரண்டு ஆண்டு கால நீடிப்பும் கிடைத்தது. இந்த விசாரணையின் மூலம், உண்மையில் மனித உரிமைகளை மீறியவர்களை நீதிக்கு முன்பாக கொண்டு வருவது, பன்னாட்டுச் சட்டத்தை மதிக்கும் ஒரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு நல்லது.

புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகளைப் பற்றி விசாரிப்பது மாத்திரமன்றி, புதிய அரசின் கீழ் எல்லா போர்க்குற்ற விவகாரங்களும் விசாரிக்கப்பட வேண்டியது அவசியம்.

நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதியைப் பெறுவதற்கு ஒரு முழு அளவிலான செயல்முறை உள்ளது. இது முதலில் தொடங்கப்பட வேண்டும். இரண்டாவதாக, அந்த செயல்முறை தீவிரமாகவும், நேர்மையுடனும் செயற்படுத்தப்பட வேண்டும். தீவிரவாதத்தின் மீள் எழுச்சியைத் தடுக்க நல்லிணக்கம் அவசியமானது. ஆனால் இலங்கையின் நல்லிணக்க செயல்முறை மேற்கொள்ளப்படவில்லை. நல்லிணக்கத்தை மேற்கொள்வதற்கான அரசியல் விருப்பம் இல்லாததே அதற்குக் காரணம். போர்க்குணத்தின் மீள்எழுச்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் தீவிரவாதத்திலிருந்து விடுபட 30 ஆண்டுகள் ஆனது. இப்போது இலங்கை மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இன்னும் 30 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் அர்ப்பணிக்க வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ,5)

## வடக்கு...

களுடன் கலந்துரையாடி அது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை தலைமை அமைச்சரிடத்திலான கேள்வி நேரத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

'வீடமைப்பு நிர்மாணத்துறைகள் மற்றும் கலாசார அமைச்சின் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் மாதிரி கிராம திட்டம் மக்களுக்கு கையளிக்கப்பட்டு வருகின்ற நிலையில், நீண்ட காலமாக மாதிரி கிராம வீட்டுத்திட்டங்கள் பலவற்றில் எந்தவித நிதியும் வழங்கப்படவில்லை. பல வீட்டுத்திட்டங்களுக்கு குறுகியளவிலான நிதியே வழங்கப்பட்டுள்ளது என்பதனை தலைமை அமைச்சர் அறிவாரா? அந்த நிதியை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா? வீடமைப்பு அதிகார சபையால் 2018ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 5 இலட்சம் ரூபா வீடமைப்பு திட்டத்தில் 2 இலட்சம் ரூபாவே வழங்கப்பட்டுள்ளது. இன்று பல திட்டங்களுக்கு எந்தவித பணமும் கொடுக்கப்படுவதில்லை. மக்கள் மேலதிகமாக செலவழிக்க வேண்டியுள்ளது. சில நாள்களுக்கு முன்னர் செல்வராணி என்ற பெயருடை பெண்ணொருவர் வீடமைப்பு திணைக்களத்துக்குச் சென்று வந்த பின்னர் உயிரிழந்துள்ளார். பயனாளர்களுக்கு குறிப்பிட்ட பணத்தை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. தங்களுக்கு கொழும்பிருந்து பணம் வரவில்லையென மாவட்ட அதிகாரிகள் கூறுகின்றனர். இந்நிலையில் இந்த திட்டங்களை விளம்பரத்துக்காக ஆரம்பித்தார்களா என்ற பிரச்சினைகள் இருக்கின்றன. 25 வீடுகளைத்திறப்பதற்காக பல மில்லியன் ரூபாவை செலவழிக்கின்றார்கள். இவ்வாறாக விளம்பரங்களுக்கு செலவழிக்கும் பணத்தை மக்களுக்கு வழங்கலாம். இந்த மக்களுக்கு இந்த பணத்தை மிக விரைவில் பெற்றுக்கொடுக்க வேண்டும்' - என்றார். இதன்போது பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, வீடமைப்பு மற்றும் கலாசார நடவடிக்கைகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் நாடு முழுவதும் மற்றைய பிரதேசங்களில் முன்னெடுக்கப்ப டுவதை போன்று வடக்கில் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மாதிரி கிராம உதவி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. வடக்கில் 2015ஆம் ஆண்டு முதல் கடந்த 31ஆம் திகதி வரையில் 18 கிராமங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. 407 கிராமங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது. இங்கு வீடுகளை அமைக்கும் பணிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். சிறப்பு அவதானம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் மேலதிக நிதி ஒதுக்கப்பட வேண்டிய கிராமங்கள் தொடர்பாக தகவல்களை வழங்கினால் அதனை வீடமைப்பு அமைச்சு அனுப்ப முடியும். எனது செயலருக்கு இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீடமைப்பு பிரச்சினைகள் தொடர்பான தகவல்களை வழங்கினால் அமைச்சருடன் கலந்துரையாடி நடவடிக்கையெடுக்கின்றேன் - என்றார். (ஒ,5,61)

## குற்றம்..

ஆதாரத்துடன் நிரூபித்துக்காட்டுங்கள். இவ்வாறு அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மத்திய கலாசார நிதியம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கும் எனக்கும் இடையில் எந்தவித உறவுமுறையும் இல்லை. ஆனால் அரசியல் ரீதியில் 20 ஆண்டுகள் அவருடன் இணைந்து பயணித்துள்ளேன். அவரது அமைச்சின் மூலம் ஒரு பில்லியன் அளவில் நிதி மோசடிகள் செய்ததாக பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஆனால் அவரது அமைச்சின் மூலமாக அநாவசியமாக ஒரு ரூபாவைக்கூட செலவழிக்கவில்லை என்பதை என்னால் உறுதியாக கூற முடியும். குற்றம்சுமத்தும் நபர்களுக்கு நான் சவால்விடுகின்றேன். அவ்வாறு நிதி மோசடி இடம்பெற்றிருந்தால் ஆதாரத்துடன் நிரூபித்துக்காட்டுங்கள்.

அரசியல் ரீதியில் அவர் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையை இழக்கவில்லை. இன்று தமிழ் தரப்பே அவர் மீது நம்பிக்கை வைத்துக் கருத்துக்களை முன்வைக்கின்றன. இது தான் எமக்கும் அவசியமான ஒன்றாகும். தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்ற தலைவராக சஜித் பிரேமதாச உள்ளார்:.

24 மணிநேரமும் தனது சேவையை செய்யும் தியாக மனம் கொண்டவர். அவருக்கு எதிராக விமர்சனங்களை முன்வைக்க முடியும். ஆனால் வேலை செய்யக்கூடிய தலைவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இவரைப் புகழவேண்டிய தேவைக்காக நான் கூறவில்லை, எதிர்காலத்தில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை உணர்ந்து இளம் அரசியல் தலைமைகள் ஒன்றிணைய வேண்டும். எமக்கு கொள்கை ஒன்று இருக்க வேண்டும், அது சஜித் பிரேமதாசவிடம் உள்ளது. தகுதியான அரச தலைவராக வரும் சகல தகுதியும் அவருக்கு உள்ளது. அவருக்கு கட்சியின் தலைமைகளின் ஆசீர்வாதம் இருக்கும் என்று நினைகின்றேன் என்றார். இந்த விவாதத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் எரான், சபை ஒத்திவைப்புவேளை தீர்மானம் அர்த்தமான ஒன்றா என்ற கேள்வி எம்மத்தியில் எழுந்துள்ளது. கணக்காய்வாளர் அறிக்கையோ கோப் குழு அறிக்கையும் இல்லாது பத்திரிகையில் வருபவற்றை கொண்டு நாடாளுமன்ற காலத்தை நாசமாக்கி விவாதங்களை செய்கின்றனர். இது அரசியல் நோக்கத்தில், அரச தலைவர் தேர்தல் வரும் நேரத்தில் அரசை விமர்சிக்கும் முயற்சியே முன்னெடுக்கப்படுகின்றது - என்றார். (ஒ,5,61)

## பொலிஸாரின்...

நேற்று ஆரம்பமானது. பொலிஸார் பல்வேறு தடைகள், தடங்கல்கள், இடையூறுகள் ஏற்படுத்தியபோதும் பொங்கல் சிறப்பாக இடம்பெற்றது.

வெடுக்குநாறிமலை மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்கள் தொல்பொருள் திணைக்களத்துக்கு உரியது என்று தெரிவித்து, ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது. தொல்பொருள் திணைக்களமும், பொலிஸாரும் இணைந்து தொடர்ச்சியாக ஆலய வழிபாடுகளுக்கு தடைகளை ஏற்படுத்தி வந்தனர். இது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் பலமுறை குரல் கொடுத்திருந்தனர். நீண்ட போராட்டங்களின் பின்னர் ஆலய வழிபாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பொங்கலுக்கான ஆயத்தங்களில் ஆலய நிர்வாகத்தினர் நேற்றுமுன்தினம் ஈடுபட்டிருந்தனர். இதன்போது அங்கு வந்த பொலிஸார், ஒலிபெருக்கியைப் பயன்படுத்த வேண்டாம் என்று பணித்துள்ளனர். ஒலிபெருக்கி பயன்படுத்துவதாக இருந்தால், தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளனர். ஆலய வளாகத்தை துப்புரவாக்கியமைக்கும் பொலிஸார் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இதேவேளை காட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஆலயத்துக்குச் செல்லும் வீதியானது குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. மண் நிரவுவதற்கு ஆலய நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்ட நிலையில் அதற்கும் பொலிஸார் தடைவிதித்துள்ளதுடன் அருகில் உள்ள சிறிய பற்றைகளைக் கூட துப்புரவாக்க வேண்டாம் என்று கண்டிப்புடன் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - மலையின் உச்சிப் பகுதிக்கு செல்வதற்காக இரும்பால் அமைக்கப்பட்ட படிக்கட்டுகளை ஆலயத்தில் பொருத்துவதற்கு பொலிஸார் அனுமதி மறுத்திருந்த நிலையில் மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே பக்தர்கள் மலை உச்சிக்கு சென்று தமது வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,105,110)

## கண்...

துள்ளார். வவுனியாவிலுள்ள விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். வவுனியா பறநட்டாங்கண்டல் பகுதியில் தனியார் அமைக்கவுள்ள கண் மருத்துவமனைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வின் பின்னர் விருந்தினர் விடுதி ஒன்றில் நடந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு பாடல்களைப்பாடும் போதும் இது முதற்பாடல் என்று எண்ணிப்பாடுவதுண்டு. இசையமைப்பாளருக்குத் திருப்தி ஏற்படும் வரையிலும் பாடவேண்டியதுதான் எங்களுடைய தொழில். இன்னும் கஷ்டப்பட்டு முயற்சித்துக்கொண்டு ப்பாடிக்கொண்டுதான் இருக்கின்றேன். பாடி முடிந்தபிறகு வெளியே சென்று பாடலைக் கேட்டபோது இன்னும் கொஞ்சம் அழகாகப் பாடியிருக்கலாம் என்று தோன்றுவதுண்டு.

நாங்கள் எல்லோரும் மனிதர்கள். எமக்கு இயல்பாக இடம்பெறும் தப்புக்கள் நடந்து கொண்டுதான் இருக்கும். இவற்றைக் குறைத்துக்கொண்டு பாடும்போது மற்றவர்களுக்குச் சந்தோசத்தைக்கொடுக்கும் போது எவ்வளவோ ஆனந்தத்தைக்கொடுக்கும்.

கஷ்டப்படுங்கள், கடுமையாக முயற்சி செய்யுங்கள், கடுமையாக உழைக்கவும், பெரியவர்களை மதிக்கவும், மற்றவர்களிடம் பெரிய விடயம் இருந்தால் அவர்களைப் பாராட்டவும் செய்யுங்கள்.

### மாற்றங்களுடன் சேர்ந்து பயணிக்கவேண்டும்

காலமாற்றத்தில் எங்களுடைய வாழ்க்கை எவ்வாறு மாறுமோ அதேபோல சினிமாத்துறைக்கும் மாற்றங்கள் வந்து கொண்டு இருக்கும். அந்த மாற்றங்களுடன் நாங்கள் சேர்ந்து போய்க்கொண்டிருக்க வேண்டும். மாற்றங்கள் இன்றி வாழ்க்கை கிடையாது. மாற்றம் இல்லாமல் இருந்திருந்தால், நாங்கள் குரங்காகவே இருந்திருப்போம். இந்தளவுக்கு நாங்கள் மனிதர்களாக வந்திருக்க முடியாது. மாற்றங்களை நாங்கள் எந்தளவுக்கு உபயோகிக்கின்றோம் என்பது தான் மிகவும் முக்கியமானது.

ஈழப்பிரச்சினை இருக்கும்போது நிறையப் பாடல்கள் பாடியுள்ளேன்.


நான் சினிமாவுக்கு வரவேண்டும் என்று கனவுகூடக் காணவில்லை. நான் பொறியியலாளராக வரவேண்டும் என்றுதான் நினைத்தேன். கடவுள் இந்தமாதிரி எழுதிவிட்டார். நாளைக்கு என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. இங்கு சூழ்நிலை எவ்வாறு இருக்கு என்பது நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். என்றார். நிகழ்வில் மாவட்டச் செயலர் எம்.கனீபா, பிரதேச செயலர் கா.உதயராசா, முன்னாள் மாகாண அமைச்சர் ப,சத்தியலிங்கம், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அபெயரட்ண, உப நகரபிதா சு.குமாரசாமி, பொது அமைப்பினர் பலர் கலந்துகொண்டனர். (சு-110,நி4)

# பஹாமஸ் தீவுகளை தாக்கியது டொரியன்

## 5பேர் சாவு




நசாயூ, செப்.5
அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் கிழக்குத் திசையில் அத்திலாந்திக் கட லில் அமைந்துள்ள பஹாமாஸ் தீவுகளை 'டொரியன்' புயல் புரட்டிப் போட்டது. இந்தப் புயலால் 5 பேர் சாவடைந்தனர் என்று முதற்கட்டத் தகவல் வெளியானது. புயலின் தாக்கம் அதிகம் உணரப்பட்ட பஹாமஸின் வட கிழக்குத் தீவான அபாகோவில் இந்தச் சாவுகள் சம்பவித்தன.
பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கூற்றுப்படி, கிட்டத்தட்ட 13ஆயிரம் வீடுகள் இந்தப் புயல் தாக்கத்தால் சேதமடைந்திருக்கும் எனக் கருதப்படுகிறது. பஹாமஸ் வரலாற்றில் மிகக் கடுமையான, பயங்கரப் புயலாக இந்தப் புயல் இருக்கும் என்று அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் மின்னிஸ் தெரிவித்தார். இந்தப் புயல் அபாகோ தீவில் நிலச்சரிவை ஏற்படுத்தியதோடு பலத்த காற்றும் பெரும் வெள்ளமும் பஹாமஸின் வடக்கு பகுதியில் இருக்கும் தீவுகளில் ஏற்பட்டது.



பஹாமஸ் தீவுகளைத் தாக்கியது டொரியன் புயல். அது குறித்த ஒளிப்படங்களின் தொகுப்பை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ். கடற்கரையோரம் ஒன்றைப் புயல் பாதித்ததைச் சித்திரிக்கிறது ஓர் ஒளிப்படம்.

## புளோரிடா நோக்கி நகர்கிறது டொரியன்




அமெரிக்காவின் புளோ ரிடா மாநிலத்தை 'டொரி யன்' என்று பெயரிடப்பட்ட புயற் காற்றுத் தாக்க விருப்பதாக அந்தநாட்டின்தேசிய புயல் மையம் எச்சரிக்கை விடுத்தது. கரீபியன் தீவுக ளுக்கு அருகே மையம் கொண்டிருந்த டொரியன் புயல் அங்கிருந்து அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் புயலால் புளோரிடாவில் புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது பஹாமஸ் தீவுகளைத் தாக்கியுள்ள டொரியன் புயல் அமெரிக்கக் கிழக்குக் கடற்கரைப் பகுதிக்கு மிக அருகில் நகர உள்ளது என வானிலை முன்னறிவிப்பாளர்கள் அறிவித்தனர்.
5 ஆம் நிலைப் புயலாக பஹாமஸைத் தாக்கிய இந்தச சூறாவளி தற்போது வலுவிழந்து 4ஆம் நிலைப் புயலாக மணிக்கு 240 கிலோமீற்றர் வேகத்தில் வீசுகிறது என்று அமெரிக்கத் தேசிய சூறாவளி மையம் கூறியது. புயலின் பாதை சிறிது திசை திரும்பினால் அது புளோரிடாவின் கிழக்குக் கடற்கரையைத் தாக்கக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால், அமெரிக்க புளோரிடா, ஜோர்ஜியா, வட மற்றும் தென் கரோலினா ஆகியவை அவசர நிலைப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.
பஹாமஸ் தீவுகளைத் தாக்கிய இந்தப் புயல் மேற்கு நோக்கி நகர்ந்தது. இது வடக்கு நோக்கியோ அல்லது வட மேற்கு நோக்கியோ நகர வாய்ப்புள்ளதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் பாதையைக் கணிப்பது கடினமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈரான் விண்வெளி நிலையம் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை



வோஷிங்டன்,செப்.5
ஈரானின் விண்வெளி நிலையத்துக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. சட்டவிரோதமாக அணு ஆயுதங்கள் தயாரிப்பதாகக் குறிப்பிட்டே இந்தத் தடையைஅமெரிக்கா அதிரடியாக விதித்தது. கடந்த வியாழக்கிழமை ஈரான் விண்வெளி நிலையத்திலிருந்து ஏவப்பட்ட ரொக்கெட் ஒன்று வெடித்தது. சோதனையின் போது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது வெடித்ததாக ஈரான் தரப்பில் கூறப்பட்டது. இந்த நிலையிலேயே செயற்கை கோள் திட்டத்தின் கீழ் ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதாகக் கூறி, ஈரானின் விண்வெளி நிலையம் மீது அமெரிக்கா இந்தப் பொருளாதாரத் தடையை விதித்துள்ளது.

## ஹொங்கொங்கில் திருப்பம் குற்றவாளிகளை நாடுகடத்தும் நிர்வாகத்தின்தீர்மானம் நீக்கம்

ஹொங்கொங்,செப்.5
சீனாவுக்குக் குற்றவாளிகளைப் பரிமாற்றம் செய்வதற்கான சட்டத் திருத்த தீர்மானத்தைத் திரும்பப் பெறுவதற்குக் ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கேரி லோம் திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்தியை அந்த நாட்டின் ஊடகங்கள் வெளியிட்டன. ஹொங்கொங்கில் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையான சீனாவுக்குக் குற்றவாளிகளைப் பரிமாற்றம் செய்வதற்கான சட்டத் திருத்த தீர்மானத்தை முழுமையாகத் திரும்பப் பெறுவதற்குக் ஹொங்கொங் நிர்வாக இயக்குநர் திட்டமிட்டுள்ளார் என்று அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்படுகிறது.



## மாலைதீவில் காலூன்றுவதற்கு அல்கொய்தா, ஐ.எஸ். முயற்சி

### மாலைதீவின் முன்னாள் அதிபர் தெரிவிப்பு



மாலே,செப்.5
மாலைதீவில் முக்கியமான அரச பணிகளைத் தமதாக்கிப் பலமாகக் காலூன்றுவதற்கு அல்கொய்தா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் கடுமையாக முயற்சித்து வருவதாக அந்த நாட்டின் முன்னாள் அதிபர் முகமது நஷீத் தெரிவித்தார். அரபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள நாடுகளின் நான்காவது உச்சி மாநாடு மாலைதீவில் நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் உரையாற்றும்போதே முகமது நஷீத் இவ்வாறு தெரிவித்தார். பாதுகாப்புப் படைகள், பொலிஸ், இராணுவம், குடியுரிமைத்துறை, கல்வித்துறை ஆகியவற்றில் முக்கிய பதவிகளைக் கைப்பற்றி மாலைதீவில் தங்களது ஆதிக்கத்தைக் பலப்படுத்திக் கொண்டு அனைத்தையும் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு ஐ.எஸ். மற்றும் அல்கொய்தா அமைப்பினர் திட்டமிட்டுள்ளனர்.
இந்தச் சவாலை மாலைதீவு அரசு முறியடித்து வெற்றிபெறும் என்று அந்த மாநாட்டில் பேசியபோது அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானில் குண்டுவெடிப்பு

## 16பேர் சாவு! 50பேருக்குக் காயம்

காபூல்,செப்.5
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 16 பேர் சாவடைந்தனர். 50க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். காபூலில் உள்ள 'கிரின் விலேஜ்' என்ற இடத்திலுள்ள பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை இரவு இந்தத் தற்கொலைப்படைத் தாக்குதல் நடந்துள்ளது. தாக்குதலின் பின்னர் 400க்கும் அதிகமான வெளி நாட்டினர் அந்தப் பகுதிகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் வாகனங்கள் மற்றும் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இந்தத் தாக்குதலுக்குத் தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். ஆப்கானில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அங்கு இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. ஆப்கானில் தலிபான்களுடன் புதிய ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ள



நிலையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

ஆப்கானின் அரச படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடக்கிறது. அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கக் கூட்டுப் படை அங்கு முகாமிட்டுள்ளது. தலிபான்கள் மற்றும் ஆப்கன் அரசு இடையே அமைதிப் பேச்சுக்களை நடத்துவதற்கு அமெரிக்கா கடுமையாக முயற்சித்து வருகிறது. அண்மைக்காலமாக தலிபான்களின் தாக்குதல்கள் அங்கு அதிகரித்து வருகின்றன. இந்நிலையில், வெளிநாட்டு படையினரை குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கும் தாம் பொறுப்பேற்றுக்கொள்வதாக தாலிபன்கள் தெரிவித்துள்ளனர்.

---

# குடும்பத்தினரை சுட்டு கொன்றான் சிறுவன்

## அமெரிக்காவில் அதிர்ச்சி

வோஷிங்டன்.செப்.5
அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் 14 வயதுச் சிறுவன் ஒருவன் தனது குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரையும் சுட்டுக்கொன்றான். இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வீட்டில் சம்பவ இடத்திலேயே 3 பேர் சாவடைந்தனர். மற்றைய இருவர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது சாவடைந்தனர். சுட்டுக் கொன்ற சிறுவன் அது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிவிட்டுச் சரணடைந்தான். இது குறித்துப் பொலிஸார் தெரிவித்ததாவது:

14 வயதுச் சிறுவன் தொலைபேசியில் அழைத்துக் குடும்பத்தில் உள்ள 5 பேரையும் சுட்டுக் கொன்றதாகக் கூறினான். தற்போது அவனிடம் விசாரணை நடைபெற்றுவருகிறது. 9 மில்லி மீற்றர் கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தியுள்ளான், திங்கள் நள்ளிரவு இந்தக் கொலை சம்பவம் நடந்துள்ளது என்றனர். சிறுவன் பற்றிய அடையாளம் தெரியப்படுத்தப்படவில்லை. கொலைகளுக்கான காரணமும், துப்பாக்கியை எங்கிருந்து வாங்கினான் என்ற விவரங்களும் உடனடியாகத் தெரியவில்லை.

அமெரிக்காவில் சிறுவர்கள் முதல் பெரியோர் வரை அனைவரும் துப்பாக்கியை வைத்துக் கொண்டு, அதை வன்முறைக்காகப் பயன்படுத்தும் குற்றநடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகவும், இந்தத் துப்பாக்கிக் கலாசாரத்தால் ஆண்டொன்றுக்கு 36ஆயிரம் பேர் கொல்லப்படுவதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

---

ஹொங்கொங் விவகாரம்


# சீனாவுக்கு வடகொரியா ஆதரவு?

பீஜிங்,செப்.5
ஹொங்கொங் விவகாரத்தில் சீனாவின் நிலைப்பாட்டுக்கு வடகொரியா ஆதரவு தெரிவித்துள்ளதாகச் சீன அயலுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்தது. ஹொங்கொங் குற்றவாளிகளைச் சீனாவுக்கு நாடு கடத்தி விசாரணை நடத்தும் புதிய சட்டம் கடந்த ஜூன் மாதம் ஹொங்கொங்கில் கொண்டு வரப்பட்டது. அதை எதிர்த்து ஹொங்கொங் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அந்த சட்டத்தை நிறுத்தி வைப்பதாக ஹொங்கொங் தலைவர் அறிவித்தார். ஆனால் முழுமையாக அந்தச் சட்டத்தை கைவிட வலியுறுத்தி அங்கு போராட்டம் தொடர்கிறது.

இந்த நிலையில், சீன அயலுறவுத் துறை அமைச்சர் வாங் யி, வட கொரியத் தூதரக பிரதிநிதி ரி யோங் ஹோவை நேற்று வடகொரியாவின் தலைநகரில் சந்தித்துப் பேசினார்.

சந்திப்பின்போது, ஹொங்கொங் நகரம் சீனாவினுடையது. இந்த விவகாரத்தில் மற்ற நாடுகள் தலையிடக் கூடாது என்று ரி யோங் கூறியதாக அமைச்சக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



---

# தலிபான்களுடன் புதிய ஒப்பந்தம்

## அமெரிக்கப் பிரதிநிதி தெரிவிப்பு

வோஷிங்டன்,செப்.5
ஆப்கானில், தலிபான் ஆயுததாரிகளுடன் புதிய ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது என்றும்- அந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, அமெரிக்கா அடுத்த 20 வாரங்களுக்குள் ஆப்கானிஸ்தானில் இருந்து தனது 5ஆயிரத்து 400 துருப்புக்களைத் திரும்பப்பெறும் என்றும் - ஆப்கானிஸ்தான் நல்லிணக்கத்துக்கான அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதி சல்மே கலீல்சாத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் அரச அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவிட்டு, இந்த ஒப்பந்தம் குறித்த அறிவிப்பை தொலைக்காட்சிச் செவ்வி ஒன்றில் அவர் வெளிப்படுத்தினார். இருப்பினும், இதுகுறித்த



இறுதி முடிவை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பே எடுப்பார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். அமெரிக்கப் பிரதிநிதியின் இந்தச் செவ்வி ஒளிபரப்பாகிக் கொண்டு இருக்கும்போதே ஆப்கானின் தலைநகர் காபூலில் பயங்கரக் குண்டுவெடிப்பு நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

---



'பிரெக்சிட்' விவகாரம்

# எனக்கு எதிராகச் செயற்படுபவர்கள் பதவி, கட்சி நீக்கம் செய்யப்படுவர்

## போரிஸ் ஜோன்சன் எச்சரிக்கை

லண்டன், செப்.5
'பிரெக்சிட்' விவகாரத்தில் தனக்கு எதிராகத் தனது கட்சியைச் சோர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவராவது செயற்படும் பட்சத்தில் அவர்களைக் கட்சியை விட்டும், பதவியை விட்டும் விலக்கிவிட்டு, நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக எச்சரித்தார் பிரிட்டனின் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன். பிரிட்டனின் கன்சவர்டிவ் கட்சியை வழிநடத்தும் தலைமையாளரின் (கொறடா) அலுவலகத்தில் வைத்து, கடந்த திங்கட்கிழமை அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றில் பிரெக்சிட் தொடர்பான விவாதம் இடம் பெறும்போது தனது கட்சி உறுப்பினர்கள் தன்னை ஆதரிக்கவேண்டும் எனவும் அப்படிச் செய்யத் தவறினால் அவர்களின் நாடாளுமன்றப் பதவியை அவர்கள் இழக்க நேரிடும் எனவும் போரிஸ் ஜோன்சன் அதன்போது மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் எந்த வகையிலாவது ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறிவிட வேண்டும் என்பதால் அதை நிறைவேற்றுவதில் போரிஸ் ஜோன்சன் உறுதியாக இருக்கிறார். அதேவேளை பிரிட்டனின் தொழிற் கட்சித் தலைவர் ஜெர்மி கார்பைன் பிரிட்டன் பிரெக்சிட் விவகாரத்தில் இருந்து வெளியேறுவதைத் தடுப்பதில் முழுமூச்சுடன் இறங்கியுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தேசிய மட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதலில்

# ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் தங்கம், வெள்ளி வென்றனர்



இளநிலை பிரிவினருக்கான தேசிய மட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் தங்கப் பதக்கத்தையும், ரி.சந்தோஸ் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

இளநிலைப் பிரிவினருக்கான 57ஆவது தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் 32.85 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், அதே கல்லூரியைப் பிரதிநிதித்துவம்செய்தரி.சந்தோஸ் 31.07 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளி பதக்கத்தையும் சுவீகரித்தனர்.(422)

சம்மட்டி எறிதலில்

## சுகனியாவுக்கு வெள்ளிப் பதக்கம்

யாழ்ப்பாணம்,செப்.5



இளநிலை பிரிவினருக்கான தேசிய மட்ட சம்மட்டி ஏறிதல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட சுகனியா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இளநிலை பிரிவினருக்கான 57ஆவது தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றது. 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான சம்மட்டி ஏறிதல் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட சுகனியா 30.41 மீற்றர் தூரம் சம்மட்டி ஏறிந்து வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (23)

சமநிலை தகர்ப்பில்

## கிண்ணம் வென்றது சென்.யூட் வி.க. அணி

யாழ்ப்பாணம்,செப்.5

கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகம் பூநகரி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு நடத்திய அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் வடமாகாண கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான 'தென்னங்கீற்று' வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வேரவில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்ட நேரமுடிவில் இரண்டு அணிகளும் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணி 5 : 3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)



## திருமகள் சனசமூக நிலைய அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது

அரியாலை திருமகள் சனசமூக நிலைய 67ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இ.அசன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் ஆதரவில் உள்ளூர் ரீதியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில்திருமகள் சனசமூகநிலைய அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மின்ஒளியில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் திருமகள் சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது.

இதில் முதலாவது செற் ஆட்டத்தை அரியாலை சனசமூக நிலைய அணி 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. அதிரடியான ஆட்டத்தின் மூலம் அரியாலை திருமகள் சனசமூக நிலைய அணி அடுத்தமூன்று செற்களை 25:22,25:19,25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், செப்.5

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தும் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் லீக் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

# போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம்,செப்.5

மன்னார் சுப்பர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் மன்னார் சுப்பர் கிங்ஸ் அணி 41 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து மன்னார் பைட்ரஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹரிஸ் 39 ஓட்டங்களையும், அன்ரன் 29 ஓட்டங்களையும், டெல்ரன் 28 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெபநேசன், சுகந்தன், அகிலன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மன்னார் பைட்ரஸ் அணி 16 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டும் பெற்று 41 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது. இதில் வசந்தன் 39 ஓட்டங்களையும், சுகந்தன் 22 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அருள் 4 இலக்குகளையும், சூரி 3 இலக்குகளையும், நார்த்தீபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (23)



மற்றுமொரு ஆட்டத்தில் மன்னார் றைரடர் அணியை எதிர்த்து மன்னார் பந்தர்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் பந்தர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தினேஸ் 23 ஓட்டங்களையும், திலீபன் 19 ஓட்டங்களையும், சுமித் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் றிச்சேட் 4 இலக்குகளையும், அனோசன், ஜீசஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

132 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களமிறங்கிய மன்னார் றைரடர் அணி 18.3 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் அஜந்தன் 47 ஓட்டங்களையும், ஜீசஸ் 20 ஓட்டங்களையும், மில்ரன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் செல்வா, கலிபவன் ஆகியோர் தலா 2இலக்குகளைக் கைப்பற்றினர். (23)



இன்னுமொரு போட்டி கடந்த சனிக்கிழமை மதியம் இடம்பெற்றது. இதில் மன்னார் பைட்ரஸ் அணியை எதிர்த்து மன்னார் றைடர்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் பைட்ரஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வசந்தன் 34 ஓட்டங்களையும், ஜெயபிரகாஸ், குகன் ஆகியோர் 31 ஓட்டங்களையும், தனா 30 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அஜந்த் 4 இலக்குகளையும், றிச்சேட் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மன்னார் றைடர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அணி சார்பில் ஜெறோன் 38 ஓட்டங்களையும், கதுசன் 25 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் துசியந்தன், அகிலன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (23)

# புதுமுறிப்பு உதய சூரியன் அரையிறுதிக்கு முன்னேறியது

இத்தாவில் கென்னடி விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் புது முறிப்பு உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத் தில் புதுமுறிப்பு உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பளை அதிசயம் விளையாட் டுக் கழக அணி மோதியது.



முதலில் துடுப்பெடுத்தாடிய புதுமுறிப்பு உதயசூரி யன் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளை யும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் குமார் அதிகபட்சமாக 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சிந்து 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பளை அதிசயம் விளை யாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களை மட்டும் பெற்று 22 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அணி சார்பில் சங்கர் 19 ஓட்டங்களையும், தர்சன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் குமார், ராசா ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (23)

# அரையிறுதியில் இணுவில் கலைஒளி

இத்தாவில் கென்னடி விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங் களைக் கொண்ட மென்பந்துத் துடுப்பாட்டத் தொ ரில் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழக அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையி றுதிக்கு முன்னேறியது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத் தில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜீவிதன் 30 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் துளசி 3 இலக்குகளைக் கைப்பற் றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய உடையார்கட்டு நண்பர் கள் விளையாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து 42 ஓட்டங்களை மட்டும் பெற்று 10 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது. அணி சார்பில் சுதன் 17 ஓட்டங்களையும், வினுஸ்சன் 16 ஓட்டங்களை யும் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீஸ் ஓர் இலக்கை கைப்பற்றினார். (23)



# இலங்கை அணிக்கு தண்டம்

இலங்கை கிரிக்கெட் அணிக்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை தண்டம் விதித்துள்ளது.

நியூசிலாந்து அணி, இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின் றது. டெஸ்ட் போட்டி சம

International Cricket Council

நிலையில் முடிவடைந் தது. இந்த நிலையில் கண்டி பல்லேகலயில் இடம்பெற்ற முதலா வது ரி- 20 போட்டியில் இலங்கை அணிதாமத மாக பந்துவீசியதால் இந்தத் தண்டம் விதிக் கப்பட்டுள்ளதாக பன் னாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்தது.



கராத்தே போட்டியில்

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு 2 வெள்ளி, ஓர் வெண்கலம்

இலங்கை பல்கலைக் கழகங்களுக்கிடையி லான ஆண், பெண் இருபாலாருக்குமான கராத்தே போட்டியில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்துக்கு 2 வெள்ளி, ஓர் வெண் கலப் பதக்கங்கள் கிடைத்தன. கடந்த ஞாயிற் றுக்கிழமை, திங்கட்கிழமைகளில் றுகுண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான கராத்தே போட் டியில் பெண்களுக்கான குமித்தே போட்டி யில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய சாரா 60 -68 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும், ஆண்களுக்கான குமித்தே போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய ஒபயசேகர 45-50 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், ஆண்களுக் கான குமித்தே போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி பங்கு பற்றிய பிரேமச்சந்திர 50-55 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப்பதக்கத் தையும் சுவீகரித்தனர். (23)


# தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வெற்றி பெற்று கிண்ணம் வென்றது

முல்லைத்தீவு, செப். 5

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் சுவிஸ் தாயக விருட்சத்தின் அனுசரணையில் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையி லான 15 வயதுப் பிரிவினருக்கான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் தண்ணீரூற்று இந்து தமிழ் கலவன் பாடசாலை அணி 46 ஓட்டங் களால் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

டயமன் விளையாட்டுக்கழக மைதா னத்தில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் உடையார் கட்டு மகா வித்தியாலய அணியை எதிர்த்து தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அணி முதலில் துடுப் பெடுத்தாடி 24.3 பந்துப் பரிமாற்றங் களில் சகல இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. அணி



சார்பில் சிந்துஜன் 25 ஓட்டங்களை யும், தனுயன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச் சில் கரிகாலன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய உடையார் கட்டு மகா வித்தியாலய அணி நிர்ண யிக்கப்பட்ட 30 பந்துப் பரிமாற்றங்க ளில் 58 ஓட்டங்களை மட்டுமே பெற்று 46 ஓட்டங்களால் தோல் வியைத் தழுவியது.

ஆட்டநாயகன் விருதை தண்ணீ ரூற்று இந்து தமிழ்க் கலவன் பாட சாலை அணி வீரன் டிலக்சன் பெற் றார். தொடராட்ட நாயகன் விருதை தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அணி வீரர் சிந்துஜன் பெற்றார். (23)

# காளியம்பாள் வி.க. அணி வாகை

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சி யாக நடத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையி லான தாச்சி சுற்றுத் தொடரில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் தாவடி காளி யம்பாள் விளையாட்டுக்கழக அணி 4:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

## பாகிஸ்தான் அணியின்
# புதிய தலைமைப் பயிற்சியாளராக மிஸ்பா உல்ஹக் நியமனம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராகவும், தெரிவுக்குழுவின் தலைவராகவும் முன்னாள் பாகிஸ்தான் அணித் தலைவரான மிஸ்பா உல்ஹக்கை நியமித்துள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி லீக் சுற்றோடு வெளியேறியதைத் தொடர்ந்து அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் அதிரடியாக நீக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து புதிய தலைமைப் பயிற்சியாளரை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் மிஸ்பா, வக்கார் யுனிஸ்கான் இதற்கு விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வக்கார் யுனிஸ்கானை பந்து வீச்சு பயிற்சியாளராக நியமித்துள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்துள்ளது.

**வீடு வாடகைக்கு**
பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் தனியார் நிறுவனங்கள், குடும்பங்களுக்கு ஏற்ற வீடு வாடகைக்கு உள்ளது.
**076 154 9310**

## பெடரரை வெளியேற்றி
# அரையிறுதிக்குள் கிரிகோர் டிமிட்ரோவ்



அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டியில் ரோஜர் பெடரரை வீழ்த்தி கிரிகோர் டிமிட்ரோவ் அரையிறுதிக்கு முன்னேறினார்.

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான காலிறுதியாட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் தரவரிசையில் 3ஆம் இடத்தில் உள்ள சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரர், பல்கேரியாவைச் சேர்ந்த கிரிகோர் டிமிட்ரோவை எதிர்கொண்டார். பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் டிமிட்ரோவ் 6:3, 4:6, 6:3, 4:6, 2:6 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இந்த நிலையில், அமெரிக்க பகிரங்க கிண்ணத்தை வெல்வார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பெடரர், 46ஆவது முறையாக கிராண்ட்ஸ்லாம் அரையிறுதியில் நுழையும் வாய்ப்பை இழந்து வெளியேறினார்.




ராசி அதிர்ஷ்டம்
| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 04.09.2019 | 2607 | பச்சை |

தனுசு
வெற்றி இலக்கங்கள்: 02 17 37 53
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000 /=
05.09.2019ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

கப்ருக
Z 22 59 68 77
வாசி 1 4 3 3 1
சீட்டிழுப்பு வாரம்: 490
திகதி: 2019 செப். 03
வர்ணம்: இளஞ்சிவப்பு
செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 138,650,708/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 276
சீட்டிழுப்பு திகதி ▸ 04.09.2019 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| B | 12 42 58 | 07 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 43,442,948/=
06.09.2019ம் திகதி வெள்ளிக் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 721
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.09.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 86,519,140/-
வெற்றி இலக்கங்கள் 26 57 60 62
ஆங்கில எழுத்து Q
விசேட வெற்றி இல. 4994
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3231 திகதி: 2019.09.04
புதன்கிழமை
ஊதா
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 17 40 49 72 G
போனஸ் இலக்கம்: 11
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 59,062,760/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.